**ஸ்ரீ குருப்யோ நம:**


## முன்னுரை

ஆஸ்திக ஷட்தர்ஷணங்களில் ஒன்றான **மகரிஷி கபிலரின் சாங்கிய** தர்ஷணமானது வேதாந்தத்தினைப்போல (மிகவும் நெருங்கியதாக) உள்ளதால் , வேதாந்தத்தில் நிச்சயமானது உண்டாக அதனை நிராகரிப்பது அவசியமாகிறபடியால் உள்ளதினையே நிராகரிக்கமுடியும் என்பதால் இந்த சாஸ்திரத்தின் ஞானமானது அவசியமாகின்றது. சாங்கியத்தின் சாரமான **சாங்கிய காரிகையும் கௌடபாதரின் பாஷ்யமும்** சமஸ்கிருதம் அறியாதவர்களும் கற்றறியும் பொருட்டு **ஸாங்கியலஹரி** எனும் இந்த உரையானது எழுதப்பட்டது.

இந்த கிரந்தம் வெளிவர உதவிய எல்லோருக்கும் இறைவனின் பரிபூர்ண ஆசிகள் உண்டாகட்டும். ஆஸ்த்திக அன்பர்கள் இதனை முறையாக படிக்க முயற்ச்சிக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம்.

**ரிஷிகேஷ்** **ஆசிரியர்**
**தியாக தினம்**
**15-03-2006**

<u>ஸ்ரீ குருப்யோ நம:</u>



**‘திராவிடாசாரியார்’** என்று அறியப்படும் **ஸ்ரீ இராமகிருஷ்ணன் ஸ்வாமிஜி** அவர்கள் 1972 ம் ஆண்டு தமிழ்நாட்டில் திண்டுக்கலில் அவதரித்தார். ஸ்ரீ ஸ்வாமிஜீ வளர்ந்தது, படித்தது கணிப்பொறி நிறுவனத்தினை நடத்தியதும் சென்னையில் என்று இருந்த நிலையில் ஆன்மீக நாட்டத்தால் 1997 ம் ஆண்டு மார்ச் மாதம் இமாலயத்திற்க்கு வந்தார். அதன்பின்னர் வேறு எங்கும் செல்லாது முழு மூச்சாக யோகீஷ்வரரான **ஸ்ரீ சாந்தி தர்மானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் சமஸ்கிருத வியாகரணம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வ மீமாம்ஸை, காஷ்மீர சைவ சித்தாந்தம் மற்றும் வேதாந்தத்தின் பிருகத் பிரஸ்தான த்ரயத்தையும் (சித்சுகி , அத்வைதசித்தி, கண்டனகண்டகாத்யம் ) , அன்னாரது சிஷ்யர் விரக்த சிரோமணி **ஸ்ரீ சர்வேஷானந்த சரஸ்வதி** ஸ்வாமிகளிடம் பிரஸ்தான த்ரயத்தையும் (பகவத் கீதை, உபநிஷத், பிரம்ம சூத்திரம்) கசடற கற்றார். ஸ்ரீ ஸ்வாமிஜீ பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவரும் ஆவார். கற்று தருவதில் எந்த நாட்டமும் இல்லாத ஸ்ரீ ஸ்வாமிஜீ குருவின் ஆணைக்கிணங்கி சாஸ்திரங்களை, தமிழ் நாட்டிலும் கூட முறையாக இல்லாத நிலையில், ரிஷிகேசத்தில் கிரமமாக தமிழில் போதிக்கின்றார். அதுமட்டுமல்லாது , எளிய தமிழில் எல்லா சாஸ்திரத்திற்க்கும் உண்டான அடிப்படையான நூலினை தெளிவாக விளக்கியருளியிருக்கிறார். குருந்தட்டிலும் படிப்பிக்கும் முறையில் பதிவாக்கி வெளியிட்டுள்ளார்.

# ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ ஸ்வாமிஜீ தமிழில் இயற்றிய நூல்கள் -

1. **வியாகரணம்** (இலக்கணம்) - ஸ்ரீ வரதராஜரின் லகுசித்தாந்த கௌமுதி லகுலஹரி விளக்கவுரையுடன்

2. **சாங்கியம்** - ஸ்ரீ ஈஷ்வர கிருஷ்ணரின் காரிகைகளும் கௌடபாத பாஷ்யமும், சாங்கிய லஹரி விளக்கவுரையுடன்

3. **யோகம்** - ஸ்ரீ பதஞ்சலி முனிவரின் சூத்திரங்களும் வியாச பாஷ்யமும் யோக லஹரி விளக்கவுரையுடன்

4. **தர்க்கம்** - ஸ்ரீ அன்னம்பட்டரின் தருக்க சங்கிரகமும் ஸ்ரீ சந்திரஜ சிங்கரின் பதகிருத்யமும், தர்க்க லஹரி விளக்கவுரையுடன்

5. **பூர்வமீமாம்ஸை** - ஸ்ரீ லௌகாக்ஷி பாஸ்கரரின் அர்த்த சங்கிரகம் அர்த்த லஹரி விளக்கவுரையுடன்

6. **சிவ பஞ்சாக்ஷரி பாஷ்யம்** - ஸ்ரீ சுரேஷ்வராச்சாரியாரின் பாஷ்யம்

7. **வேதாந்தம்**

- ஸ்ரீ சுரேஷ்வராசாரியாரின் நைஷ்கர்ம்யசித்தி சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ கங்காதரேந்திர சரஸ்வதிகளின் சுவாராஜ்யசித்தி த்விதீய சித்தி லஹரி உரையுடன்
- ஸ்ரீ தர்மராஜ அத்வரீந்திரரின் வேதாந்த பரிபாஷை வேதாந்த லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாதனா பஞ்சகம் சாதனோபதேஷ லஹரி விளக்கத்துடன்.
- ஸ்ரீ சங்கராசாரியாரின் சாந்தோகிய உபநிஷத் பாஷ்யம் முதல் அத்யாயம்

ஸ்ரீ குருப்யோ நம:

பதிப்பு - 2006

கிடைக்குமிடம்

**ஷாஸ்திர நேத்திராலயா**
நெ 1. ஆத்ம விஞ்ஞான பவன்
பாபா காளி கம்பளி
ராம் நகர்
பசுலோக் போஸ்ட்
ரிஷிகேஷ், இமயமலை

**Shasthra Nethralaya**
No 1. Atma Vigyana Bhavan
Baba Kali Kambli
Ram Nagar
Pasulok Post
Rishikesh, Himalayas

**ஸ்ரீ குருப்யோ நம:**

( ஆச்சாரியவான் புருஷோ வேத –
குருவை உடையவர் ஞானத்தை அடைகின்றார் )

# சாங்கியம்

**நமஸ்க்ருத்ய ஸாங்க்யதேவம் கபிலம் ஸாங்க்யஸூத்ரக்ருத் |**
**கரோமி பாஷ்யகாரிகா வியாக்யேயம் ஸாங்க்யலஹரீம் ||**

சாங்கிய தேவரான (சாங்கிய) சூத்திரகாரர் (சூத்திரத்தை இயற்றியவர்) கபிலரை வணங்கி , (சாங்கிய) காரிகா மற்றும் கௌடபாத பாஷ்யத்திற்க்கு விளக்கவுரையான இந்த சாங்கிய லஹரியை செய்கிறேன்.

## முன்னுரை

சாங்கியம் தர்சணம் எனறால் சாங்கியம் என்ற சொல் இரண்டு வகையாக சொல்லலாம். **க்யா பிரக்கதனே** என்ற தாதுவிலிருந்து பிரக்கதனே என்றால் நன்றாக உரைக்கப்பட்டது. என்ற பொருள்படும்படி சங்கியம் சொல் ஆகும். **சங்கியம்** பாவம் **சாங்கியம்** என்ற மாற்றம் ஏற்படுகின்றது. மற்றொரு பொருளான சங்கியம் என்றால் எண்ணிக்கை சங்கிய பாவம் **சாங்கியம்** என்று முன்பு போலவே ஆகும். என்று சாங்கியம் என்ற சொல் உருவாகிறது. முதல் சொல்லிற்கு ஞானம் என்ற பொருளும் இரண்டாம் சொல்லிற்கு எண்ணிக்கை (தத்துவ எண்ணிக்கை) என்ற பொருளும் எடுத்துக்கொள்ளலாம். **தர்ஷணம்** என்றால் **திருஷ்யதே அனேன இதி தர்ஷணம்,** என்றால், இதன் மூலமாக அறியப்படுகின்றது' என்று பொருள். எது அறியப்படுகின்றது என்ற கேள்விக்கு பதில் பரமாத்மா, ஈஸ்வரன் எதனை அறிந்தால் எல்லா சாஸ்தரம் சொல்லும் துக்கத்தை அழிக்கின்றதோ அந்த தத்துவத்தை தெரிவிக்கிறது. சாஸ்திரம் என்பதும் **சாஸனாத் சம்ஷணாத் சாஸ்திரம்** எது நமக்கு கட்டளை இடுகிறதோ, எது நன்றாக விசாரிக்கப்பட்டதோ அது சாஸ்திரம் என்று பொருள்.

சாங்கியத்தின் தத்துவங்கள் என்ன, அவை எந்த அறியாமையை நீக்கி மோட்சத்தை கொடுக்கிறது என்றால், 25 தத்துவங்களை அது சொல்கிறது. எதனின் அறிவால் எல்லாவிதமான துக்கங்களும் நீங்கி இன்பத்தை அடைவோமோ அது. இந்த தர்சனம் படிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் என்ன என்றால் பிரம்ம சூத்திரம் முதலிய கிரந்தங்களில் இந்த சாஸ்திரத்தின் விசாரம் அதிகமாக நிராகர முறையில் செய்யப்பட்டுள்ளதால், தத்துவத்தை அறியாமல் அதனை நிராகரிப்பது முறையல்ல. பூர்வ பக்ஷியாக வேதாந்தத்தில் ஏற்கப்படுகின்ற பல மதங்களில் ஒன்றான இந்த தர்ஷணமும் படிக்கப்படுகிறது. மற்றொரு முக்கிய காரணம் சாங்கிய தர்ஷணம் ஆனது அத்வைத வேதாந்தத்தின் மிக நெருங்கிய தொடர்புள்ள சாஸ்திரம். இதனாலேயே சர்வ தர்ஷண சங்கரகத்திலும் மற்ற தர்ஷணங்களின் விசாரம் செய்தபின் சாங்கியத்தினையும் நிராகரித்து முடிவாக வேதாந்தம் நிரூபிக்கப்படுகின்றது. இந்த சாங்கிய

சாஸ்திரமானது கபில மகரிஷியால் எழுதப்பட்ட ஒரு கிரந்தம். சூத்திர முறையில் எழுதப்பட்ட இந்த கிரந்தத்தில் 6 அத்யாயங்களும் அதினில் மொத்தமாக 528 சூத்திரங்களும் உள்ளன. முதலி அத்யாயத்தில் 164, இரண்டாவதில் 47, மூன்றவதில் 84 , நான்காவதில் 32 , ஐந்தில் 130, ஆறாவதில் 71 என்ற எண்ணிக்கை எழதப்பட்டுள்ளது. இந்த சாங்கிய சாஸ்திரத்தின் தத்துவங்களை அப்படியே ஏற்று சாதனை செய்யும் முறையை மட்டும் விளக்கும் கிரந்தம், அந்த சாதனைகளால் அடையும் பலனையும் சேர்த்து சொல்லும் யோக சூத்திரம் ஆகும்.

சாங்கியத்தில் **ஈஸ்வர சத்தேயே** என்ற சூத்திர சொல் ஈஸ்வரன் இல்லாதிருத்தல் என்ற பொருள்படும் படி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதற்கு காரணம 25 தத்துவத்தில் ஈஸ்வரன் சேர்கபட்டால் 26 தத்துவமாகும். சாங்கியர்கள் 25 தத்துவங்களை மட்டும் ஏற்பதால் சாங்கியர்கள் நிர் ஈஸ்வர யோகிகள். பதாஞ்சல யோகிகள் சேஸ்வர சாங்கியர்கள் என்றும் அறியப்படுகின்றனர். இந்த சாங்கிய தர்ஷணம் ஆனது சத்தில் இருந்து இந்த திருஷ்டி உண்டாயிற்று என்று ஏற்பதனால் சத்காரியவாதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். இந்த சாங்கிய சாஸ்திரத்தின் முக்கிய கிரந்தமான இந்த சிறிய சாங்கிய காரிகா கிரந்ததிற்கான **பாஷ்யம்** கௌடபாதருடையது. இதற்கு விளக்கம் எழுத காரணம் சாங்கிய தத்வ கௌமதி என்ற வாசஸ்பதி மிஸ்ரரின் விளக்கமானது மிகவும் விஸ்தாரமானது என்பதாலும், அதில் தர்கத்தின் பாஷை அதிகமான உபயோகிகப்பட்டுள்ளதாலும் எளிமையாக த த்துவத்தை மட்டும் அறிந்து கொள்ள இந்த கௌடபாத பாஷ்யத்தை படிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இந்த காரிகை ஆரிய சந்தம் என்ற அணியால் எழதப்பட்ட கிரந்தம். இது ஒரு விஷம விருத்தி சந்தம் என்றும் அறியப்படுகின்ற ஒரு அணி ஆகும். 10-8 என் று முதல் வரியாகவும், 8-10 என்று இரண்டாம் வரியாகவும் இதன் சொற்கள் இடம் பெறுகின்றன. முதல் ஸ்லோகத்தை இப்பொழுது பார்போம்.

**दुःखत्रयाभिघाताज्जिज्ञासा तदभिघातके हेतौ।**
**दृष्टे सापार्था चेन्नैकान्तात्पन्ततोऽभावात् ।।१।।**

**துக்க த்ரயாபி காதாஜ்ஜிஞ்ஞாஸா ததபி காத்கே ஹேதௌ |**
**த்ருஷ்டே ஸாபார்தா சேன்னை காந்தா த்யந்ததோऽபாவாத் || 1 ||**

மூன்று வகை துக்கத்தின் சேர்க்கையால், அதனை நீக்கும் உபாயத்தினை (வழியை) குறித்த ஆசையானது உண்டாகும். அது காணப்படும் வழிகளினாலேயே அழியும் (நீங்கும்) என்றால், இல்லை, நிச்சயமாகவும் நிரந்தரமாகவும் இல்லாததால்.

கௌடபாத பாஷ்ய விளக்கம்.

கபிலருக்கு நமஸ்காரம், எவரால் அவித்யா என்கிற சமுத்திரத்தினையும், முள்ளாகிய இந்த நரகத்தினையும், கருணையால் சாங்கியம் என்கிற கிரந்தத்தினை படகு போல் எழதப்பட்டதோ, எல்லோரும் கரைசேர சிறிய கிரந்தமாகும், இது தெளிவானதும், பிரமாணமும், சித்தமும், தர்கங்களும் கூடிய இந்த சாஸ்திரம் ஆனது, சிஷ்யர்களின் இதயத்திற் கு கடினமாக இல்லாமல் , அறியத்தக்க வகையில் சுருக்கமாக நான் கூறுகின்றேன்.

துக்கத் திரயம் என்று இந்த சுலோகத்திற்கு முன்னுரை இங்கு பகவான் பிரம்மனின் மகனான கபிலர் என்பவரால், அது எப்படி என்றால், பிரம்மாவின் மகன் கபிலர் எப்படி சனகர், சனாத்தனர், சனந்தனர், சனத்குமாரர், கபிலரும் பஞ்சசிக்க ஆச்சாரியர்கள் என்று இவர்கள் பிரம்மாவின் புதல்வர்கள் என்று இந்த ஏழுவரையும் மகரிஷிகள் கூறுகின்றனர், என்ற வாக்கியப்படி உறுதியாகின்றது. இந்த கபிலரோடு கூடப்பிறந்தவை என்று தர்மம், ஞானம், வைராக்கியம் மற்றும் ஐஸ்வர்யம் என்ற இந்த நான்கும் கூடி பிறந்நதவராக இந்த கடும் இருளில் மூழ்கி உள்ள ஜகத்தினை கண்டு இந்த சம்சாரத்தினை, சம்சார சக்கரத்திணை, எந்த காரணமும் இல்லாத கருணையினால் , எதிர் பார்ப்பு எதுவும் இல்லாமல். அறிய ஆசை உள்ள ஆசரி கோத்திரம் என்ற கோத்திரத்திலபிறந்த பிராமணரு க்கு இந்த 25 தத்துவங்களின் அறிவைப்பற்றி கூறினார். எந்த இந்த தத்துவங்களில் துக்கமானது அழிந்து போகுமோ அது கூறப்பட்டடுள்ளது.

இந்த 25 த்துவங்களில் அறிவுடையவர் எந்த ஆஸ்ரமத்தில் இருந்தாலும், ஆஸ்ரமம் என்பது இடம் என்றும் அவர்களின் வர்ணாஸ்மரமம் என்றும் பொருள் எடுக்கப்படலாம். இவர்கள் எங்கு இருந்தாலும் ஜடை, மொட்டை, சிகை வைத்தவர்களாகவோ இருந்தாலும் அவர்கள் மோட்சத்தை அடைந்தவர்கள் ஆவார்கள இதில் எந்த எந்தேகமும் இல்லை. என்றும் .

இங்கு மூன்று விதமான துக்கம் என்றும் சொல்லப்படுகின்றது. **1.ஆதி-ஆத்மகம், 2.ஆதிதெய்விகம், 3.ஆதிபௌதிகம்.**

1. இந்த அத்யாத்மிகமும் இரண்டு வகைப்படும். 1. சரீரம் மற்றும் மனதில் உண்டாவது . சரிரத்தில் உண்டாவது வாதம், பித்தம், கபம் வேறுபாட்டினால் உண்டாகும் . அவரவருடைய பிருக்கிருத்திக்கு ஏற்ப இவைகளில் உண்டாகும் மாற்றம் உண்டாவது, இந்த சரீரத்தினால் உண்டாகும் துன்பம், ஆனால் , மனதில் உண்டாகும் துன்பம் நாம் பிரியம் வைத்துள்ளது நம்மை விட்டு போகும் போதும் நாம் வெறுப்பது நம்மை வந்தடைவது என்றும்.

2. ஆதிபௌதிகம் என்ற துன்பமானது இந்த நான்கு வகையான பூதங்களில் இருந்து ஆகாயத்தினை தவிர நிலம், நீர், நெருப்பு, காற்று அகிய

பூதங்களினால் உண்டாகும் என்றோ அல்லது **ஜராயுஜ** உதரத்தில் இருந்து, **அண்டஜ** முட்டையில் இருந்து, **ஸ்வேத்தஜ** வேர்வையில் இருந்தும், **உத்பிஜ** முலையில் இருந்தும் சிருஷ்டியில் உண்டாகி மனுஷன் மற்றும் பக்ஷிகள், பாம்பு மற்றும் பேன் முதலியவைகளும், புல் பூண்டுகளாலும் உண்டாகும் துன்பங்கள் என்ற இந்த நான்குவை உற்பத்தியால் உண்டாகும் துன்பங்கள் ஆகும்.

3. ஆதிதைவிகம் என்பது தெய்வத்தினால் உண்டானது. அதாவது குளிர், சூடு, மழை முதலியவைகளினால் உண்டாகும் துன்பங்கள்.

இதுவே, மங்களச் சரணச் ருக்குகளில் சாந்தி, சாந்தி, சாந்தி என்று மூன்று முறை கூறப்படுகிறது. இந்த மூன்று வகையான துன்பங்களில் இருந்து அமைதி வேண்டும் என்ற பொருளில் இது போன்ற துன்பங்களினால் சூழபட்டதால் பிடியில் அகப்பட்டதால் அவைகளை நீக்குவதற்கான வழிகளில் ஆசையானது உண்டாக வேண்டும். ஆசை உண்டாக்கப்பட வேண்டும் என்று விசாரம் செய்யப்படவேண்டும், எந்த பொருளில் என்ன வகையான ஆசை என்றால், அவைகள் நீக்க, ஒதுக்க என்ற காரணத்தினில் ஆசை. அதாவது இந்த மூன்று வகையான துக்கத்தினால் பீடிக்கப்பட்ட நாம் இதில் இருந்து தப்பிக்க என்ன வழீ என்று விசாரணை செய்யவேண்டும்.

காணப்படும் வழிகளில் இவை மூன்று வகையான துக்கமும் நீக்கும் என்றால் அதாவது

1. அத்யாத்மிக துன்பங்களானது சரீரம், மனதில் உண்டாகும் என்று இருவைகையானதும் ஆயுர் வேத சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட வழிகளால் பிரியமானதை அடைவதும், பிரியமல்லாததை ஒதுக்குவதும் இவைகளால் துக்கம் போகும். அதாவது மணி, மந்த்ரம் மற் று ம் ஔஷதிகளான மருந்துக்களால் இவைகளின் நீக்கம் உண்டாகும்.

2. ஆதிபௌதிக துன்பங்களானது ரசம், கந்தத்தினால் துக்கம் போகும். காணப்படும் வகையினாலேயே துக்கம் போகும் என்று கருதினால் , அது சரியல்ல. அது ஏன் என்றால் , இவைகளினால் முழுவதுமாக(நிச்சயமாக) மற்றும் நிரந்தரமாக துன்பத்தின் அழிவானது காணப்படுவது இல்லை என்பதால் . திருஷ்ட உபாயங்கள் துன்பத்தை போக்க வழியில்லை. மீண்டும் அந்த துன்பத்தில் விழ அவகாசம் உள்ளதால் அதுமட்டும் அல்லாது அந்த முயற்சிய ால் வேறுவகை துன்பத்திற்கு வாய்புள்ளதாலும், இந்த திருஷ்ட உபாயங்களால் காணப்படும் முறைகள் துன்பங்களை நீங்க வழியில்லை என்று முடிவாகின்றது. இவைகள் நீக்கம் வேண்டி வேறு வழிகள் குறித்து முயற்சி ஆசையானது செய்யப்படவேண்டும் என்பதே முதல் சுலோகத்தின் பொருள். ॥ 1 ॥

இந்த துன்பங்களானது காணப்படுகின்ற வழிகளால் நீக்கப்படவில்லை என்றாலும், வேதமானது கூறும் வழிகளை கடைபிடித்து துன்பங்களை நீக்கலாம் என்ற சந்தேகத்தை நிராகரிக்க வேண்டி பார்போம்.

**दृष्टवदानुश्रविक स ह्यविशुद्धिक्षयातिशययुक्तः ।**
**तद्विपरीतः श्रेयान् व्यक्ताव्यक्तज्ञविज्ञानात् ।।२।।**

**த்ருஷ்டவதானுஷ்ரவிக ஸ ஹ்விஸுத்தி க்ஷயாதி ஷயயுக்த: |**
**தத்விபரீத: ஷ்ரேயான் வியக்தாவ்யக்தஞ விஞ்ஞானாத் || 2 ||**

வேதமும் (ஆனுஷ்ரவமானது) பார்க்கப்படும் வழிகளைப்போன்றே உள்ளதால், அதாவது, அவிசுத்தி எனும் தோஷமும் க்ஷயம் முதலிய தோஷமும் கொண்டதால், அதற்க்கு வேறான மேன்மையான வழியுள்ளது அது வியக்த, அவியக்த மற்றும் ஞ வின் விஞ்ஞானத்தால் ( அறிதலால்).

## பாஷ்யம்

காணப்படும் வழிகளை விடுத்து வேறுவழிகளை குறித்து ஆசை கொள்ள வேண்டும் என்றால் அதுவும் அவசியம் அற்றதாக இருப்பதால், காரணம் வேதமானது கூறப்பட்ட வழிகளாலே இந்த மூன்றுவகையான துன்பங்பளும் அழிக்கப்பட முடியும் என்பதால், இந்த ஆனுசிரவிக்கம் என்பது வேதம், ஆகமம் இவைகளாலேயே நிரூபிக்கப்பட்டபடியால் இதற்கு என்ன பிரமாணம் என்றால் **அபாம சோமமிருதா** என்ற சுலோகத்தின் அர்த்தம் என்ன என்றால் இந்திரன் தேவர் முதலியவர்கள் ஒரு கல்பத்தினால் நாம் எப்படி அமரத்துவம் அடைந்தோம் என்று விசாரம் செய்து நாம் சோமரசத்தினை குடித்ததினால் அழிவற்ற தன்மையை அடைந்து விட்டோம் என்று இன்பம் அடைகின்றனர். மரணமற்ற அமரத்துவத்தை அடைந்து ஜோதி என்ற சொர்கத்தையும் அடைந்து விட்டோம் என்று ஆனந்தத்துடன் இருக்கின்றனர், நமக்கு திவ்யமான பொருட்கள் அனைத்தும் கிடைத்துவிட்டது. நாம் இதனால் நிச்சயமாக நம்முடைய எதிரிகளை புல் போன்று சிறு துரும்பு போன்று அழித்துவிடுவோம் என்று எண்ணினர். இது மட்டும் அல்லாமல் மரணம் அற்றவர்களாக ஆன நமக்கு இந்த மனிதர்களை போன்ற வயது கூடும் என்பதினால் உண்டாகும் துன்பத்திலிருந்து நாம் தப்பித்துவிட்டோம் என்று ஆனந்தம் கொண்டனர். இதுமட்டும் அல்லாது பசுவினை வதம் செய்வதால் அவர்களுக்கு அழிவற்ற பலன் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. எல்லா உலகத்தையும் ஜெயிப்பாா, பாபங்களை கடப்பார் , பிராமணனை கொலை பாதகத்தையும் கடப்பார். எவர் அஸ்வ மேதம் என்ற யாகம் செய்பின்றார்களோ அவர்களுக்கு , இதனால் வேதத்தில் கூறப்பட்ட முறைகளினாலேயே நம்முடைய துன்பம் நிரந்தரமாக அழிந்துவிடும். ஆகவே இந்த விசாரம் தேவையில்லை. கூறப்பட்டது முறையில்லை. காரணம் **திருஷ்டவத் ஆனுசிரவிக்கசாபி**

காணப்படும் முறைகள் போன்றே வேதத்திலும் பிரச்சனைகள் கர்மகாண்டத்தில் உள்ளதால் , அது என்பது என்றால் எதனால் **அவிசுத்தி க்ஷயம்** மற்றும் **அதிசயம்** ஆகியவைகள் கூடியதாக அங்கு கூறப்பட்ட வழிகள் இருப்பதால் , அவிசுத்தி என்பது சுத்தமற்ற தன்மை , பசுவினை கொல்வதினால் **ந ஹிம்ஸ்யாத் சர்வா பூதாணி** எந்த உயிரையும் துன்புறுத்தக்கூடாது. என்று விரோதம் காணப்படுகிறது. இப்படி கூறப்பட்டுள்ளது **அஸ்வமேதபிரக்கரணத்தில்** எவர் 600 பசுக்களை கொன்று நடுப்பகலில் யாகம் செய்யவேண்டும் அல்லது குறைந்தது மூன்று பசுக்களையாவது கொன்று யாகம் செய்யவேண்டும் என்று இது போன்ற சுருதியினால் கூறப்பட்ட தர்மம் ஆனாலும் பசுவினை கொல்வது என்ற பாவம் கூடியதாகையால் சொர்க்கம் முதலிய பலனை இந்த அஸ்வமேத யாகம் செய்ய முடியாது .

அது மட்டும் இல்லாமல் பல இந்திரர்கள் பல ஆயிரக்கணக்கான தேவர்களும் ஒவ்வொரு யுகத்திலும் காலத்தினால் அழிக்கப்பட்டு உள்ளனர். என்பதால் காலம் கடப்பதற்கு மிகவும் அரிதானது. காலமே இந்த ஜகத் உற்பத்தி ஆனதற்கு காரணம் ஆகும். இது போன்ற காவியங்கள் புராணங்களில் இருப்பதால் இந்திராதி தேவர்கள் அழிவடைய கூடியதே **க்ஷீன புண்யனே மத்திய லோகே விஷந்தி** என்ற சுலோகத்தினால் புண்ணியம் அழிவதால், மரணம் , பிறப்பு இறப்புக்களை விடுவதில்லை. மேல் கூறிய வாக்கியத்தால் அழிவுடைய கூடிய பலன் என்று அறிகின்றோம். அதுமட்டுமல்லாது அதிசயம் இருப்பதால் அதிசயம் இருப்பது விசேஷனம் ஆகும். இந்த உபாசத்தினை செய்ய இவரிவர் அதிகாரி இந்தந்த பொருள் தேவை என்று பல குணங்கள் கூறப்பட்டுள்ளதாலும் அவை முறையாக செய்தினில் கடினம் உள்ளது என்பதாலும் இவை அதிசயம் கூடியதாக இருக்கின்றது. இதனால் காணப்படும் திருஷ்ட காரணங்கள் போன்றே இதுவும் துன்பத்தை போக்க பயன்படாது என்பதால் வேறு வழிகள் என்ன என்று கேட்கப்பட்டால் காணப்படும் வழிகளாலும், வேத கர்மங்களில் இருக்கும் பிரச்சனைகளினால், வேறு மேன்மையான வழி இருக்கின்றது அதுதான் **வியக்தாவியக்தஞ விஞ்ஞானாத்** என்பது வியக்தம் என்பது மகத் முதலியவைகளால், மகத் , புத்தி , அகங்காரம் , பஞ்சதன்மாத்திரைகள், ஏகாதச இந்திரியங்கள், பஞ்சமகாபூதங்கள் ஆகியவை இவைகள், அவ்வியக்தமானது பிரதானம் , ஞா என்பது புருஷன் ஆகிய 25 தத்துவத்தின் ஞானமானது ஆகும். மகத், புத்தி இவைகளின் தத்துவங்களின் 25ந்தும் அடுத்த சுலோகத்தில் உள்ளது.
|| 2 ||

திருஷ்ட பிரமாணங்கள் திருஷ்டமான முறைகள், வழிகள் மற்றும் வேதமும் மோட்சத்தினை வேண்டி மூன்று வகை துக்கங்களும் அழிய உபயோகமற்றதாக நிரூபிக்கப்பட்டதால் சாங்கிய சாஸ்திரத்தில் நிரூபிக்கப்பட்ட தத்துவ ஞானத்திலேயே வ்யக்த, அவ்யக்த, ஞ இவைகளின் அறிவினாலேயே மோட்சம் கிடைக்கும் என்று சொல்லப்பட்ட பிறகு. இந்த மூன்றாவது ஸ்லோகத்தில்

சாங்கியர்கள் ஏற்றுக்கொள்ளும் 25 தத்துவங்களையும், நான்கு வகையாக பிரித்து இங்கு விளக்குகின்றார்.

**मूलप्रकृतिरविकृतिर्महदाद्याः प्रकृतिविकृतयः सप्त।**
**षोडशकस्तु विकारो न प्रकृतिर्न विकृतिः पुरूषः ।।३।।**

**மூல ப்ரக்ருதிரவிக்ருதிர்மஹதாத்யா: ப்ரக்ருதி விக்ருதய: ஸப்த |**
**ஷோடகஸ்த்து விகாரோ ந ப்ரக்ருதிர்ந விக்ருதி: புருஷ: || 3 ||**

மூலமான பிரகிருதி மாற்றமடையாதது, மஹத் முதலியதோ பிருகிருதி ( மாற்றமடையாதது) மற்றும் விகிருதியுடையது (மாற்றமடைவது) பதினாறு வகையான கூட்டமோ விகிருதியாகவே (மாற்றமடைவது) இருப்பது, புருஷனோ, பிரகிருதியுமில்லை, விகிருதியுமில்லை.

**பாஷ்யம்** .

இங்கு வியக்த , அவ்யக்த, ஞ வினாலேயே மோட்சம் என்று சொல்லப்பட்டது இவைகளின் விசேஷமானவை என்ன விஷயம் என்ற கேள்வி எழும். இதற்கு **மூலப்பிருகிருக்தி** எது இந்த மூன்று வகையான துக்கம் உண்டாக்கக்கூடிய சம்சாரமாக இருக்கின்றதோ இதற்கு காரணமாக இருப்பது மூலப்பிருக்கிருதி. இது மற்ற மகத் முதலியவற்றின் காரணமாக இருப்பதினால் மூலம் என்று சொல்லப்படுகிறது. இந்த பிரதானம் அல்லது பிருக்கிருதியானது **அவிக்கிருதி** இது எதில் இருந்தும் உண்டானது அல்ல. ஆனால் இது மகதாகிய 7 பதார்தங்களையும் உண்டு செய்கின்றது. மகத். புத்தி, அகங்காரம், பஞ்சதன்மாத்திரைகள் என்ற 7ம் **பிரகிருதியாகவும் விகிருதியாகவும்** உள்ளது. பிரக்கிருதியாக மற்றவற்றை உற்பத்தி செய்வதால் விக்கிருதியாக பிரதானத்தில் இருந்து என்பதால் இருக்கின்றது. அது எப்படி என்றால் பிரதானத்தில் இருந்து புத்தி என்பதால் அது விக்கிருத்தி, பிரதானத்தின் விகாரம் என்று பொருள் அந்த புத்தியே அகங்காரத்தை உற்பத்தி செய்வதால் அது பிருக்கிருத்தி. அதைப்போலவே அகங்காரமும் புத்தியில் இருந்து உண்டானதால் விக்கிருத்தி அதுவே அங்காரமே பஞ்சதன்மாத்திரைக்களையும் உண்டு செய்தால் அது விக்கிருத்தி இங்கு ஐந்து தன்மாத்திரை என்பது சப்தம். ஸ்பர்ச, கந்த, ரூபம் மற்றும் ரசத் தன்மாத்திரை என்பவை . இதில் சப்ததன் மாத்திரை என்பது அகங்காரத்தில் இருந்து உண்டானதால் விக்கிருத்தி. அதிலிருந்து ஆகாசம் உண்டானதால் பிருக்கிருத்தி, ஸ்பர்ச தன்மாத்திம் அகங்காரத்தில் இருந்து உண்டானதால் பிருக்ருத்தி, அந்த தன்மாத்திரையே வாயுவை உற்பத்தி செய்வதனால் பிருக்கிருத்தி. இது போல கந்ததன்மாத்திரை அகங்காரத்தில் உற்பத்தியானதால் அது விக்கிருத்தி, பிருத்திவி உற்பத்தி செய்யப் பிருக்கிருத்தி ஆகின்றது. ரூபதன்மாத்திரை அகங்காரத்தில் இருந்து உண்டாவதால் அது விக்கிருத்தியும்

அதுவே அக்கினியை உற்பத்தி செய்வதால் பிருக்கிருத்தியும் ஆகின்றது. ரசதன்மாத்திரையும் அகங்காரத்தில் உற்பத்தி ஆவதால் அது பிரக்கிருதி. அதில் இருந்து நீர் உற்பத்தி ஆவதால் அது விகிருதி என்று ஏழு வகையும் பிருக்கிருதியாகவும் உள்ளது. 16 வகையான மற்ற தத்துவங்களோ விக்கிருத்தியாக மட்டுமே உள்ளது. ஞானேந்திரியம் (புத்திந்திரியம்) என்ற ஐந்தும், கர்மேந்திரியம் ஐந்து, மனம் மற்றும் ஐந்து மகாபூதங்கள் என்று 16 வகைகள் விகாரங்கள் மட்டுமே ஆகின்றது. ஆனால் புருசனான 25வது தத்துவமோ பிருக்கிருதியும் இல்லை, விகிருதியும் இல்லை. இதில் இருந்து ஒரு உற்பத்தியும் ஆவது இல்லையோ, இது வேறு ஒன்றையும் உற்பத்தி செய்வதும் இல்லையோ. || 3 ||

இப்படி 25 தத்துவங்களிலும் நான்கு வகையாக விளக்கப்பட்டும் சந்தேகம் என்னவோ தீரவில்லை. கூறப்பட்ட 25 தத்துவங்களும் இதை நிரூபிக்க என்னென்ன பிரமாணங்கள் (சரியான ஞானத்தை அடைய வழி) என்ன என்ற கேள்விக்கு பதில் அடுத்த சுலோகம்.

**दृष्टमनुमानमाप्तवचनं च सर्वप्रमाणसिद्धत्वात्।**
**त्रिविधं प्रमाणमिष्टं प्रमेयसिद्धिः प्रमाणाद्धि ।।४।।**

**த்ருஷ்டமனுமானமாப்தவசனம் ச ஸர்வப்ரமாணசித்தத்வாத் |**
**த்ரிவிதம் ப்ரமாணமிஷ்டம் ப்ரமேயசித்தி: ப்ரமாணாத்தி || 4 ||**

பிரத்யக்ஷம், அனுமானம் மற்றும் ஆப்த வசனம் ( சப்தம்) ஆகிய மூவகை பிரமாணம் ஏற்க்கப்படுகின்றது, மற்ற எல்லா பிரமானமும் இதிலேயே அடங்குவதால், பிரமேய (விஷயத்தின்) நிரூபணம் பிரமாணத்தாலேயே ஆகின்றது.

**பாஷ்யம்**

இப்படி வியக்த, அவியக்த மற்றும் ஞ என்ற மூன்று வகையான பிரிவுகளும் எந்த எந்த பிரமாணத்தால் சித்தம் (நிரூபணம்) ஆகின்றது. இதை சித்தம் செய்ய எத்தனை பிரமாணங்கள் ஏற்கப்படுகின்றது. உலகத்தில் காணப்படுகின்ற (காணப்படாததும்) எல்லாம் பிரமாணத்தினாலேயே சித்தம் ஆகின்றது. **மானாதீனா மேய சித்தி மான சித்திஸ்ச லக்ஷணாத்** என்ற வாக்குப்படி பிரமாணம், பிரமேயத்தால் சித்தம் செய்யப்படுகிறது. அந்த பிரமாணமோ லட்சனையினால் என்றதால் இங்கு எத்தனை பிரமாணங்கள் ஏற்கப்படுகின்றது என்று கூறுதல் அவசியம். திருஷ்டமாக காணப்படுகின்றன (**பிரத்தியக்ஷம்)** , கண், காது, உணர்ச்சி, நாக்கு, மற்றும மூக்கு இவை ஐந்தும் புத்தி இந்திரியங்களின் தருமமான ஸ்பர்ஸம், சப்தம், ரூபம், ரசம் மற்றும கந்தம் ஆகிய இந்த விஷயங்களை கிரகின்றது. ஸ்ரோத்தரம், சப்தம், தோல் உணர்ச்சிடைய , கண்கள்

ரூபத்தை , நாக்கு ரசத்தை, மூக்கானது நுகர்த்தலையும் செய்கின்றது. இவை திருஷ்டம் என்று பிரமாணமாக ஏற்கப்படுகின்றது.

**அனுமானம்**. இதைபோன்று, அதைபோன்று என்று காண்பித்து தர்கத்துடன் லிங்கம் லிங்கி (குறிப்பு, குறிப்பிடப்பட்டது.) இவை கொண்டு நிரூபிக்கப்பட்ட பிரமாணம். இந்த திருஷ்ட பிரமாணத்தினாலும் அனுமான பிரமாணத்தாலும் நிரூபிக்க பட முடியாதவை. மற்றவை ஆப்த்த வசனத்தினால் நிரூபிக்கப்படுகின்றது. 'இந்திரன் ஆனவரான தேவர்களின் இராஜா', 'சொர்கத்தில அப்சரைகள் உள்ளனர்' என்பதைப் போன்று, பிரத்தியக்ஷத்தினாலும், அனுமானத்தினாலும் கிரகிப்பட முடியாத 'இந்திரன்' 'சொர்க்கம்' வேதத்தினால் (சப்த வசனத்தில்) அறியப்படுகிறது. சொல்லப்பட்ட வேதமே ஆப்தவசனம். காரணம் தோஷங்கள் அல்லாதவை. அவையால் பொய்யல்லாதவைகள் மட்டும்கூற வேண்டும் எனபதால் இங்கு பொய்யினால் எதையும் நீருபிக்க முடியாது என்பதால். எவர் ஒருவர் வேத லிகித்த தன்னுடைய கர்மங்களை ஒழுங்காக செய்கின்றார்களோ, **ராக துவேஷம்** (விருப்பு, வெறுப்பு) அல்லாதவரே ஆப்தர் என்று அறியப்பட வேண்டும். அவர் பூஜிக்கதக்கவர் . இப்படி மூன்று பிரமாணங்களாலேயே மற்ற பிரமாணங்கள் நிரூபிக்கப்பட முடியும் என்பதால் இவை ஏற்கப்படுகின்றது. அது எப்படி என்றால், ஜெய்மினி மகரிஷி 6 பிரமாணங்களை ஏற்கின்றார். அவைகள் **அர்த்தாபத்தி, சம்பவம், ஆகமம், பிரத்திபர், ஐகிக்யம், உபமானம்** என்பது. இதில் **அர்தாபத்தி** என்பது உவதை, திருஷ்டி, ஷ்ருத்த அர்தாபத்தி, திருஷ்ட அர்தாபத்தி. திருஷ்ட அர்தாபத்தி 'ஒரு நிலையல் ஒரு விஷயம் இருத்தல் அறிந்தால் மற்றவையாலும் அவை காணப்படுவது போல்'. ஷ்ருத்த அர்தாபத்தி 'தேவதத்தன் என்பவன் ஒன்றும் உண்பது இல்லை ஆனால் உடல் பருமனாக இருக்கின்றான். இவன் இரவில் உண்கின்றான்' இவையே அர்த்தாபத்தி . **சம்பவம்** பிரத்தம் என்ற எடைக்கு நான்கு குடவம் என்கின்ற விதைகள் என்று அதன் அளவு இருக்கிறது. கிலோவிற்கு இத்தனை கிராம் என்பது போல். **அபாவம்** என்பது **பிராகபாவம், அன்னியோன்யாபாவம், அத்யன்தாபாவம் மற்றும் சர்வாபாவம்**. இதில் பிராகபாவம் என்பது 'தேவதத்தன் இப்போது குமாரனாக இருக்கின்றான். அவனுடைய யௌவன வயசின் (யுவா அலத்தையின்), பிராகபாவம் (முன்இல்லாமை) அவனில் உள்ளது'. 'களிமண்ணில் பானையின் அபாவம்' என்பது போல். அன்யோன்யாபாவம் 'துணியல் பானை இருப்பது இல்லை, பானையிலும் துணி இருப்பது இல்லை', இதன் தன்மை இல்லை என்பது. அத்யன்தாபாவம் என்பது 'முயல் கொம்பு, மலடி மகன், ஆகாய தாமரை' முதலியவைகள் போன்றே ஒருபொழுதும் இவைகள் இருத்தல் முடியாது. சர்வாபாவம் என்பது பிரத் யக்ஷ அபாவம் அதாவது 'உடைந்த பானை' போன்று அல்லது 'எரிந்த துணியைப்' போன்று பானையோ அதன் தன்மையோ, துணியோ அதன் தன்மையோ ஒரு பொழுதும் ஏற்பட முடியாது என்பதால் , எப்படி காய்ந்து

போன வாடிய பயிரைக் கண்டு மழையின் அபாவம் அறியப்படுகின்றது என்பதனை போன்று அபாவங்கள் பலவகை நான்காவது பிரமாணம் **பிரதிபா** 'தக்ஷினத்தில் ( தென் இந்தியா) விந்திய மலையும், உத்திரத்தின் இரு சமுத்திரத்தின் இடையில் உள்ள இடமானது மனத்திற்கு இனிமையான இடம்'. இப்படி இனிமையான இடம் அந்த இடமானது அந்த அழகானது நல்ல குணங்கள் உடையது என்று பிரதிபா அதாவது ஒரு ஞானம் உண்டாகின்றது. இதுவே பிரதிபா என்ற பிரமாணம். **ஐதிக்கயம்** என்பது 'வட விருட்சத்தில் ஆலமரத்தில் யக்ஷினி இருக்கிறாா்' 'வேப்ப மரத்தில் பேய் இருக்கின்றது'. என்பது போன்று உலகத்தில் சாமானியமாக கூறப்படுகிறது. **உபமானம்** என்பது 'மாட்டை போன்றது காட்டு எருமை' 'கடல் என்பது ஒரு பெரிய ஓடை போன்றது', போன்ற என்ற சொல் கொண்டு சித்தரிக்கப்படும். வாக்கியங்கள் இந்த ஆறு பிரமாணங்களும் நம்முடைய சாங்கிய மதத்தில் ஏற்கப்படும் பிரமாணங்களில் (மூன்று மட்டுமே மற்ற பிரமாணம் இதிலேயே) அடங்கிவிடும் என்பதால், அது எப்படி என்றால் அர்த்தாபதி என்பது அனுமானத்தில் செய்யப்படமுடியும் என்பதால். சம்பவம், சுபாவம், பிரத்திபா, ஐத்திஹ்யம் மற்றும் உபமானம் ஆப்தவசனத்திலும் செய்யப்படுவதால் வேறு பிரமாணம் அவசியமற்றுப்போகிறது. இந்த மூன்று மட்டுமே மற்றவைகளுக்கும் (பிரமாணத்திற்கு) ஆதாரமாக இருப்பதால் இந்த மூன்றும் நிருபனமாகின்றது. இந்த பிரமாணத்தில் பிரமேயம் ஆகின்ற பிரதானம், புத்தி, அகங்காரம், பஞ்சதன்மாத்திரை, ஏகாதச இந்திரியம் , பஞ்ச பூதங்கள் மற்றும் புருஷன் ஆகியவை ஆன இந்த இருப்பத்துஐந்து தத்துவங்களும் சிலது பிரத்தியக்ஷத்தினாலும், சிலது அனுமானத்தினாலும், மற்றவை ஆப்த்தவசனத்தினாலும் நிருபிக்கப்படுகிறது. || 4 ||

இந்த சொல்லப்பட பிரமாணங்களின் இலட்சணம் என்னவென்றால் அடுத்த ஸ்லோகமானது அதனை கூறுகின்றது.

**प्रतिविषयाध्यवसायो दृष्टं त्रिविधमनुमानमाख्यातम् ।**
**तल्लिड़लिड़्गपूर्वकमाप्तश्रुतिराप्तवचनं तु ।।५।।**

**ப்ரதிவிஷயாத் யவஸாயோ த்ருஷ்டம் த்ரிவிதமனுமானமாக்யாதம் |**
**தல்லிங்கலிங்கி பூா்வகமாப்த ஷ்ருதிராப்தவசனம் து || 5 ||**

இந்திரியத்தோடு விஷயம் சேர்ந்த நிலையில் உண்டாகும் ஞானம் பிரத்யக்ஷம், அனுமானம் மூன்றுவகையாக கூறப்பட்டுள்ளது, அது, லிங்க (குறி), லிங்கி (குறியுடையது) (வியாப்யம், வியாபகம்) உடையதானதாகும், ஆப்தர்களால் (வேதம் அறிந்தவர்களால்) கேட்டறியப்பட்ட ஞானம் ஆப்தவசனம்( சப்த) ஆகும்.

**பாஷ்யம்**

இந்தப் பிரமாணங்களின் இலட்சணம் கூறப்படுகின்றது. ஒவ்வொரு விஷயங்களும் அதாவது ஸ்ரோத்ததிரம் முதலிய இந்திரியங்களின் சப்தம் உணர்ச்சி முதலிய விஷயங்களின் ஞானமானது **திருஷ்டம்** பித்தியக்ஷ பிரமாணம் எனப்படுகிறது. அனுமானமானது மூன்று வகை அது **பூர்வவத், சேஷவத், சாமான்யவத்திருஷ்டம** என்பது. பூர்வத் என்பது 'எப்படி கருநீல மேகத்தை கண்டு மழை பெய்யும் என்பதை முன்பு உண்டாகிய அனுபவத்தை கொண்டு சொல்வது'. சூரியன் ஆனது நன்றாக பிரகாசிக்கும் போது மழை பெய்யாது என்ற அனுபவத்தினால் கூறும் இது பூர்வவத் என்பது. இரண்டாவது சேஷவத் 'சமுத்திரத்தில் இருந்து ஒரு கை நீரை எடுத்து அதனை பருகினால் அது உப்புத்தன்மை உள்ளதால் சமுத்திரம் முழுவதும் உப்புத்தன்மை உள்ளது என்று சொல்கின்றோம்', பருகிய கை நீரினால் இதனை சொல்கின்றோம் . அதனால் சேஷவத் (மீதியும் இப்படியே). மூன்றாவது சாமான்யவத்திருஷ்டம் 'தேவதத்தன் ஒரு ஊரில் இருந்து மற்றொரு ஊருக்கு செல்வதை கண்டு சொல்கின்றோமோ அதுபோல நிலா, நட்சத்திரம' இவை சாமானியதோதிருஷ்டம். அது போலவே 'ஒரு மரத்தில் இருந்து பூக்கள் உண்டாயிருப்பது கண்டு அபேத ஜாதியைக் (அதே வகை) கண்டு பூக்கள் உண்டாயிருக்கும்' என்று அனுமானம் செய்வது சாமான்யவத் திருஷ்டம் என்பது. இந்த அனுமானமானது **லிங்கபூர்வகம், லிங்கிபூர்வகம்** . லிங்கபூர்வகம் என்பது குறிப்பின் மூலம் தெரிகிறதோ அவை . ஒரு தண்டத்தினை கண்டு சன்யாசியினை அனுமானம் செய்வது போல் அல்ல குறிக்கப்பட்டதை கண்டு குறிப்பை அனுமானம் செய்வது எப்படி என்றால் ஒரு சன்னியாசியை கண்டு அவரின் தண்டம் முதலிய குறிப்பை அறிவது. ஆப்தவசனம் என்ற மூன்றாவது பிரமாணம். ஆப்தர் என்றால் ஆச்சாரியர்கள், ஸ்ருதி என்றால் வேதம்., இந்த ஆப்த ஸ்ருதி என்பதே ஆப்தவசனம் என சொல்லப்படுகிறது. இவைகளுக்கு மூன்று இலட்சனம் சொல்கின்றோம். || 5 ||

இவைகளில் எந்த பிரமாணத்தினால் எவை நிரூபிக்கப்படுகிறது என்று அடுத்த ஸ்லோகத்தில்

**सामान्यतस्तु दृष्टादतोन्द्रियाणां प्रतीतिरनुमानात्।**
**तस्मादपि चासिद्धं परोक्षमाप्तागमात् सिद्धम् ।।६।।**

**ஸாமான்யதஸ்து த்ருஷ்டாத திந்திரியானாம் ப்ரதிதிரனுமானாத் |**
**தஸ்மாதபி சாஸித்தம் பரோக்ஷமாப்தாகமாத் ஸித்தம் || 6 ||**

சாமான்யமானது திருஷ்டத்தாலும் (பிரத்யக்ஷத்தாலும்) செய்யப்படும் அனுமானத்தில் இந்திரியங்களால் அறியப்படாத விஷயங்களின் ஞானம்

உண்டாகின்றது. அதனாலும், அறியப்படாது இருப்பது (பிரத்யக்ஷமாகாதது) ஆப்த வாக்கியத்தால் உண்டாகின்றது (அறியப்படுகின்றது).

**பாஷ்யம்**

அங்கு என்ன அனுமானத்தில் எதை சித்தம் செய்யப்படுகிறது என்றால் சாமான்யத்தில் காணப்படுகின்ற விஷயங்கள் எல்லாம் அனுமானத்தினாலும் , இந்தரியங்களின் வசத்தினை தாண்டி இருக்கும் விஷயங்களின் இருப்பினை அனுமானத்தினாலும், பிரதான, புருஷன் இவைகள் இந்திரியங்களை கடந்து இருப்பதால் சாமான்யமயமான அனுமானத்தில் நிரூபிக்கப்படுகிறது. எப்படி என்றால் மகதாதி லிங்கமானது முக்குணம் உள்ளது. அப்படி முக்குணம் உள்ள இந்த காரியங்களின் காரணமானது முக்குணம் உடையதாக இருக்க வேண்டும். இதனால் சைத்தன்யம் இல்லாதவை சைத்தன்யம் உடைய ஒன்று பிரகாசம் அடைகின்றதோ இதைக் கண்டு அதிஷ்டாதாவான (அதிகாரியான) வேறு ஒரு புருஷன் இருக்கின்றான் என்றும் வியக்தமானது பிரத்யக்ஷமாக சாதிக்கப்படுகின்றது. இவைகள் இரண்டாலும் (பிரத்யக்ஷம், அனுமானத்தினால்) நிரூபிக்க முடியாதவை. பரோக்ஷமான (பிரத்யக்ஷம் அல்லதது) சப்த பிரமாணத்தினால் (வேதத்தினால்) நிருபனம் ஆகின்றது. எப்படி இந்திரன், தேவதத்தன் போன்றவைகளின் ஆப்த ஆகமத்தால் நிரூபிக்கப்படுகிறது. || 6 ||

**अतिदूरात् सामीप्यादिन्द्रियघातान्मनोऽनवस्थानाच्च।**
**सौक्ष्म्याद् व्यवधानादभिभवात् समानाभिहारात् ।।७।।**

**அதிதூராத் ஸாமீப்யாதிந்திரிய காதான்மனோऽனவஸ்தானாச்ச |**
**ஸௌக்ஷ்ம்யாத் வ்யவதானாதபிபவாத் ஸமானாபிஹாராத் || 7 ||**

அதிக தூரத்திலிருப்பதால், அதிகமாக நெருக்கத்திலிருப்பதால், இந்திரியமானது அழிந்தால், மனமானது நிலையற்றிருப்பதால், சூக்ஷ்முமானதாக இருப்பதால், தடையிருப்பதால், மூடலிருப்பதால், சாமானமானதுடனிருப்பதால் ( என்று எட்டுவகையாக விஷயமிருந்தும் அறியபடாது போகும்).

**பாஷ்யம்**

சிலர் சந்தேகிக்க வாய்புள்ளது. பிரதானமோ, புருஷனோ அறியப்படுவது இல்லை. அதனால் , எது அறியப்படுவது இல்லையோ அது சாதாரணமாக இந்த உலகத்தில் இல்லாதது என்று காணப்படுகிறது. இந்த பொதுவான நியமத்தினால் பிரதானமும், புருஷனும் இல்லை என்று ஆகின்றது. உதாரணத்திற்கு இரண்டாவது தலையோ அல்லது மூன்றாவது காலோ இருப்பது காணப்படுவது இல்லை என்பது

போல் , என்று சந்தேகம் கொண்டால் ,அதற்கு பதில் பொருட்களானது (விஷயமானது) இருந்தும் எட்டு காரணங்களினால் அவைகளின் (அல்லது அவையின்) இருப்பானது அறியப்படுவது இல்லை. அது எவ்வாறு என்றால் , முதல் காரணம் **அதிதூரத்** (வெகு தொலைவில்) உள்ளதால் ஒரு பொருளானது அறியப்படுவது இல்லை. உதாரணம் வேறு தேசத்தில் உள்ள சைத்திரன், மைத்திரனோ. இன்னொரு உதாரணம் வெகு தொலைவில் உள்ள நட்சத்திரங்கள், கிரகங்கள்இதுபோல இரண்டாவது காரணம். **சாமிப்யாத்** (மிக அருகில் உள்ளதாவும்) ஒரு பொருளானது அறியப்படுவது இல்லை. எப்படி இமைகளில் உள்ள ரோமங்களானது காணப்படுவதில்லையோ அப்படி. மூன்றாவது காரணம் **இந்திரிய அபிகாதாத்** எப்படி இந்திரியங்களானது ஒன்றோ (அ) பல இந்திரியங்களோ பழுதடைந்தால் அவைகள் விஷயத்தை கிரகிக்கும் தன்மையானது அடைவதில்லை. எப்படி காது பழுதடைந்தால் சொற்கள் கேட்பது இல்லையோ அதுபோல நான்காவது காரணம் **மனோ அனவஸ்தானாத்** மனது ஆனது வேறு சிந்தனையில் ஆழ்ந்து இருக்கும் பொழுது இந்திரியங்கள் நன்றாக இருந்தாலும் அதற்கு முன்பே விஷயமும் இருந்தாலும். அந்த விஷயமானது கிரகிக்கப்படுவதில்லை என்பதால் மனதின் இருப்பு அவசியம். ஐந்தாவது காரணம் **சௌக்ஷ்மியாத்** அதாவது பொருளானது மிகவும் சூட்சுமாக இருந்தாலும் அது அறியப்படுவது இல்லை எப்படி ஆகாயத்தில் இருக்கும் பரம அனுக்கள் அறியப்படுவது இல்லையோ அப்படியே. ஆறாவது காரணம் **வியவதாணாத்** எப்படி ஒரு தடையிருப்பதால் அந்த தடையின் அப்புறம் இருக்கும் பொருட்களானது அறியப்படுவது இல்லையோ உதாரணம் கதவிற்கு அப்பால் உள்ள பொருட்கள் ஏழாவது காரணம் **அபிகாதாத்** வேறு ஒரு சூரிய ஒளியினால் மூடப்பட்டதால் வானத்தில் நட்சத்திரங்கள் காணப்படுவது இல்லை என்பது போல எட்டதாவது காரணம் **சமணபிதாணாத்** ஒரே வகையான பொருட்களின் இடையில் இருக்கும் பொழுது ஒரு விஷயமானது பிரித்தடைய கடினமாக இருக்கின்றது. எப்படி கடல் நீரில் விழுந்த மழை நீரோ அல்லது புறா கூட்டத்தில் விடப்பட்ட ஒரு புறாவோ என்பது போல இப்படி இந்த எட்டு வகையான காரணத்தினாலும் அல்லது இதனில் ஏதாவது ஒன்றினாலோ அல்லது பலவகைகளினாலோ ஒரு விஷயமானது உண்டாயிருந்த போதிலும் அறியப்படுவது இல்லை. || 7 ||

இப்படி எட்டுவகையான காரணங்கள் முந்தைய சுலோகத்தில் கொடுக்கப்பட்டாலும் பிரதானம் அல்லது புருஷன் இதில் எந்த காரணத்தினால் அறியப்படுவது இல்லை என்பதை விளக்க அடுத்த சுலோகம்.

**सौक्ष्म्यात्तदनुपलब्धिर्नाभावात्कार्यतस्तदुपलब्धेः ।**
**महदादि तच्च कार्यं प्रकृति विरूपं सरूपं च ।।८।।**

**ஸௌக்ஷ்ம்யாத்ததனுபலப்திர்னாபாவாத் கார்யதஸ்தது பலப்தே: |**
**மஹதாதி தச்ச கார்யம் ப்ரக்ருதி விரூபம் ஸரூபம் ச || 8 ||**

சூக்ஷ்மமானதால் பிரதானம் மற்றும் புருஷனின் இன்மை ஆகும், இல்லாததால் அல்ல, காரியமாக அது இருப்பது அறியப்படுவதால், அந்த காரியமான மகத் முதலியவையோ பிரகிருதியை போன்றும் , வேறாகவும் உள்ளது.

**பாஷ்யம்**

இப்படி எட்டு காரணங்களும் கூறப்பட்டாலும் இதனால் என்ன அறியப்படுகிறது. பிரதானமோ, புருஷனோ இந்த எட்டு வகையான காரணங்கள் எதனாலும் அறியப்படுவது இல்லை. அல்லது எதனால் அறியப்படுகிறது என்று கேள்வி கேட்டால் அதற்கு பதில் அந்த பிரதானமானது மிகவும் சூக்ஷ்மமானதால் அதன் அடைவு அல்லது அறியப்படும் தன்மை உண்டாகிறது இல்லை. எப்படி பரமானுக்களானது ஆகாயத்தில் இருந்தாலும் அறியப்படுவது இல்லையோ அதுபோல. அது எப்படி அறியப்படுவது என்றால் அதற்கு பதில் காரியமாக அவை இருத்தல் அறியப்படுகிறது. காரியத்தைக் கண்டு இந்த காரியத்திற்கு ஒரு காரணமானது இருத்தல் வேண்டும் என்பதால் அந்த காரணம் பிரதாணம் என்று அறியப்படுகிறது. இந்த பிரதானத்தில் காரியம் என்னென்னவென்றால் முன்பே கூறியதுபோல புத்தி, அகங்காரம், ஐந்து தன்மாத்திரைகள், 11 இந்திரியங்கள், 5 மகா பூதங்கள் இவைகள். அதன் காரியம் இந்த பிரதானத்திலிருந்து வேறானது. இந்த காரியத்தோடு வேறு ரூபமாகவும் அதனோடு சமான ரூபமாகவும் இருத்தலும் காணப்படுகிறது. இரண்டும் எப்படி சாத்யம் என்றால் எப்படி இந்த உலகத்தில் தந்தைக்கு சமானமாக மகன் இருக்கின்றானோ அவரை போன்று இல்லாத மற்ற குணங்களும் அவனிடம் காணப்படுவது போல். இவைகளில் எது பிருக்கிருதியோடு சமானரூபமாகவும் வேறுபட்ட ரூபமாகவும் காரியம் இருக்கின்றது என்பதை பின்னால் விளக்க கூறுவோம். அடுத்து பிரக்கிருதியாக (காரணமாக) இருந்து இந்த மகத் முதலியவைகளை உண்டு செய்தது என்று காண்டோம். இந்த பிரதானமானது சத்தாக (இருத்தல் உடையதாக) அல்லது அசத்தாக (இருத்தல் இல்லாததாக) எப்படி ஏற்கப்படுகின்றது என்ற கேள்வி எழுகின்றது. இந்த கேள்விக்கு காரணம் பௌத்த மதத்தால் சூன்யவாதத்தை அவர்கள் ஏற்பதால் **ஆதௌ அந்தௌ யன்னாஸ்தி மத்தியேபி தத் ததா** என்ற நியதிக்கு ஏற்ப முன்பும் பின்பும் எது இல்லையோ இடையலும் அது இல்லை என்று காரியத்தில் சிருஷ்டிக்கும் முன்பும் காரியத்திற்கு நாசத்திற்கு பின்பும் சூன்யமாக காணப்படுவதால் இடையலும் இல்லாமையே பொருட்களின் இயல்பாக இருக்கின்றது என்பது பௌத்தர் வாதம் எப்படி இல்லாமையில் இருந்து தோன்ற முடியும் என்றால் எப்படி பீஜத்தில் (விதை) இருந்து ஒரு முளையானது முளைக்கின்றதோ அப்படியே சூன்யமானது எப்படி ஏற்கப்படும் என்ற கேள்விக்கு பௌத்த சூன்யவாதிகள் பீஜத்தில் இருந்து முளையானது வந்தாலும் அந்த பீஜத்தில் இருந்தே அது வந்ததால் அதுவே சூன்ய வாதத்தினை நிலை நாட்டாது. வேதாந்திகளோ சத்பிரம்மத்தில் இருந்தே விவர்த்தமாக இந்த ஜகத்தானது உண்டாயிற்று என்று கூறுகின்றனர். இவர்கள் சத்காரியவாதிகள் ஆவர்.

பௌத்தர்கள் அசத்காரியவாதிகள் ஆவார்கள். நையாயிர்கள், வைசேஷிகர்கள் இருத்தல் குணமுடைய பரமாணுவில் இருந்தே இந்த சிருஷ்டியை ஏற்பதால் அவர்களும் சத்காரிய வாதிகள் ஆகின்றனர். சாங்கிய மதத்திலோ இந்த பிருகிருதியில் இருந்து மகதாதி காரியங்கள் உண்டாயுற்று என்று ஏற்கின்றனர். அதில் இந்த பிருக்கிருத்தியானது இருத்தல் உடையதாக இருப்பதால் அதில் இருந்து மகத் முதலிய இருத்தல் உள்ள காரியமே உண்டாவதாகி ஏற்பதாலும் சாங்கியர்களும் சத்காரியவாதிகள் என்றே ஏற்கப்படுகின்றனர். || 8 ||

இதற்கு (இந்த சத்காரியத்தை ஏற்பதற்கு) என்ன காரணம் என்பதை அடுத்த சுலோகத்தில் பார்போம்.

**असदकरणादुपादानग्रहणात् सर्वसम्भवाभावात्।**
**शक्तस्य शक्यकारणात् कारणभावाच्च सत्कार्यम् ।।६।।**

**அஸத கரணாதுபாதானக்ரஹனாத் ஸர்வஸம்பவாபாவாத் |**
**ஷக்தஸ்ய ஸக்யகாரணாத் காரணபாவாச்ச ஸத்கார்யம் || 9 ||**

காரியமானது சத் (இருத்தலுடையது) ஆகும். அசத்திலிருந்து உண்டாவது காணப்படுவதில்லாததால், உபாதான காரணத்தின் இருத்தலிருப்பதாலும், எல்லா காரணத்திலும் எல்லா காரியமும் உண்டாவது இயலாததாலும், சாமர்த்தியம் உள்ளதே உத்தப்தி செய்ய இயலும் என்பதாலும், காரணத்தன்மையுள்ளதாலும் சத்காரியம் ஆகும்.

**பாஷ்யம்**

இந்த மகதாகி காரியங்கள் என்று கூறப்பட்டவை பிரதானத்தில் சத்தாகவா அல்லது அஸத்தாகவா இருக்கின்றது என்ற கேள்விக்கு, இங்கு சாங்கியர்களால் சத்காரியம் ஏற்கப்படுவது முன்பே குறிப்பிட்டதால் போல் அசத்காரியத்தை ஏற்பவர்கள் சத் அசத்தாக முடியாது என்றால் அசத்தும் சத்தாவது முடியாது என்ற நியமத்தினாலும் இங்கு சந்தேகங்கள் பல எழுவதால் சத்காரியத்தினை ஏற்பதற்கு காரணங்கள் கொடுக்கப்படுகின்றது. முதல் காரணம் **அசதகிரகணாத** காரணங்கள் சத்தானது அசத்திலிருந்து உண்டாவது பார்க்கப்படுவது இல்லை என்பதால் சத்காரியம் ஏற்கப்படுகிறது. உதாரணத்திற்கு கல்லில் இருந்து எண்ணெய் உண்டாவது இல்லை என்பதால் காரணத்தில் இருத்தல் இருந்தாலே காரியத்தில் அவை வரும் என்பதால் சத்தானது காரியம் ஆவதற்கு முன்பே பிரதானத்தில் இருப்பதால் காரியம் சத்தாகவே இருக்கின்றது. இரண்டாவது காரணம் **உபாதன கிரகணாத்** உபாதான காரியங்களின் இருத்தல் காணப்படுவதாலும் எப்படி இந்த உலகத்தில் ஒரு பொருளை அடைய விரும்பினால் அதற்கான உபாதான காரணங்களை விரும்பி அடைகின்றனரோ எப்படி தயிர் உண்டாக்க விரும்பும்

ஒருவர் அதற்கு உபாதானமான காரணமான பாலினை அடைகின்றனர். தண்ணீரை அல்ல. மூன்றாவது காரணம் **சர்வ சம்பவ அபாவாத்** எல்லா இடத்திலும் இருத்தல் இயலாது என்பதாலும் , எப்படி தங்கமானது வெள்ளியில் இருத்தல் இல்லை என்பது போன்று இதனால் எல்லா இடத்திலும் எல்லாவும் இல்லாததாகவும்.சத்காரியம் நிரூபணம் ஆகிறது. இது மட்டும் அல்லாது நான்காவது காரணம் சத்தஸ்ய சத்ய காரணம் இரு பொருளை உண்டாக்க தகுதியானவர் இருத்தல் காணப்படுகிறது. எப்படி ஒரு பானை பிடிப்பவர் அதறகாக களிமண், சக்கரம், தடி, கயிறு முதலியவைகளை அடைகினறாரோ இந்த பொருட்கள் இருந்தாலே பானையானது உண்டாக்கப்படும் என்பதாலும் சத்காரியம் உறுதியானகிறது. ஐந்தாவது காரணம் காரணபாவாத் சத் பாவம் (காரணம்மானது) எப்படி உள்ளதோ அப்படியே காரியமும் எப்படி அரிசி நெல்லை விதைத்தால் அரிசியே பயிர் ஆகின்றதோ கோதுமை பயிறிட்டால் கோதுமை வருகின்றது. இதனால் சத் காரியம் நிரூபிக்கப்படுகின்றது. அசத்காரியம் என்று கூறினால் அரிசி நெல் விதைத்தால் அதிலிருந்து கோதுமையோ கரும்போ உண்டாகும் என்பதால் சத்காரியம் நிரூபணம் ஆகின்றது. || 9 ||

இந்த பிரதானத்தில் இருந்து மகதாதி காரியங்கள் உண்டாகின்றது கூறப்பட்ட போது அந்த காரியமானது பிருக்கிருத்தியைப் போன்றும் அல்லாத ரூபம் உடையதும் அது போன்று ரூபம் உள்ளதாகவும் இருக்கின்றது என்று கூறப்பட்டது அது எப்படி வேறு ஆக இருக்கின்றது என்பதை கூற அடுத்த சுலோகம்.

**हेतुमदनित्यमव्यापि सक्रियमनेकमाश्रितं लिङ्गम्।**
**सावयवं परतन्त्रं व्यक्तं विपरीतमव्यक्तम् ।।१०।।**

**ஹேதுமதநித்யமவ்யாபி ஸக்ரியமனேகமாஷ்ரிதம் லிங்கம் |**
**ஸாவயவம் பரதந்த்ரம் வ்யக்தம் விபரீதமவ்யக்தம் || 10 ||**

வியக்தமானது (உலகம்) காரணமுடையது, அநித்தியம், வியாபிதிருப்பதல்லாதது, செயலுடையது, அநேகம் ( ஒன்றல்லாதது), சார்ந்திருப்பது, லிங்கம் ( லயமடைவது), பாகங்களுடையது, மற்றதினால் செயல்புரிவது ஆகும். அவ்வியக்தமோ இதற்கு எதிரானதாக இருப்பது.

**பாஷ்யம்**

பிரகிருதி, விகிருதி, விரூபம், சரூபம் என்று எட்டாவது சுலோகத்தில் சொல்லப்பட்டது. அது எப்படி விரூபம் ஆகின்றது (வேறு ரூபம் ஆகின்றது) வியக்தம், மகத் முதலிய காரியங்களும், அவ்வியக்தமும் பிரதானமுமாக இருக்கின்றது. 1. **ஹேதுமத்** ( காரணமுடையது) இதற்கு இருப்பதால் இதற்கு

**உபகாரணம், நிமித்தகம், காரணம்** முதலியன ஒரு பொருள் மட்டும் பல சொற்கள். இந்த வியக்ததம்மான மகத் முதலியவைகளுக்கு பிரதானம் என்கிற காரணம் இருப்பதால் இவை ஹேதுமத் ஆகின்றது. வியக்தம் என்பது இந்த பூதங்கள் வரையில் உள்ள காரியங்கள், இவை காரணம் உடையது என்றால், புத்தி தத்துவம் பிரதானத்தில் இருந்து வந்ததால் அது ஹேது உடையதாகின்றது. அதில் இருந்து அகங்காரம் அந்த அகங்காரத்தில் இருந்து பஞ்சதன்மாத்திரைகள் அதில் இருந்து 11 இந்திரியங்கள் என்று இவைகளின் காரணா காரிய பாவம் இருப்பதால் ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் இருப்பதால் இவை ஹேதுமத் ஆகின்றது. இது மட்டும் அல்லாது **அநித்தியம்** அதாவது எது வேறு ஒன்றில் இருந்து உற்பத்தியாகின்றதோ அது நித்தியமர்னதன்மை அல்லாததால் இருக்கின்ற தன்மையை அடைகின்றது. உதாரணத்திற்கு களிமண்ணில் இருந்து உண்டான பானையானது உண்டாகின்ற காரணத்தால் அநித்தியம் ஆகின்றது. மூன்றாவது வேறு ரூபம் ஆனது **அவ்வியாபி** ( எல்லா இடத்திலும் பரவி இருக்குந்தன்மை இல்லாத ) வியக்தமானது ஒரு இடத்தில் வரையறுக்கப்பட்டதாக இருக்கின்றது. அடுத்தது **சகிரியம்** அதாவது இது பலவிதமான முன்பு கூறப்பட்டபடி 13 வகைகளான கருவிகளை காரணத்துடன் இருப்பதால் இவைகள் சூட்சம சரீரத்தை சார்ந்து செயல் படுவதாலும் இவை கிரியை உடையது என்று ஆகின்றது. அடுத்து **அனேக்கம்** (ஒன்று அல்லாத பலவாக) புத்தி, அகங்காரம், பஞ்ச தன்மாத்திரைகள் 11 இந்திரியங்கள், பஞ்ச மகாபூதங்கள் முதலியவை இருப்பதால். அடுத்தது **ஆஷ்ருத்தம்** (வேறு ஒன்றை சார்ந்து இருப்பதால்) தன்னுடைய காரணத்தை சார்ந்து இருப்பதால் , எப்படி என்றால் பிரதானத்தை சார்ந்து இருக்கின்றது. புத்தி, புத்தியை சார்ந்து இருப்பது அகங்காரம், அகங்காரத்தை சார்ந்து இருப்பது 11 இந்திரியங்கள், தன்மாத்திரைகள், அந்த தன்மாத்திரைகள் மகாபூதங்களும் சார்ந்திருக்கின்றது என்பது போல இது மட்டும் அல்லாது **லிங்கம்** இங்கு லிங்கம் என்பது குறிப்பு அல்ல, லயம் அடையக்கூடிய தன்மை உள்ளதாக என்று பொருள் ஆகும். லயம் ஆகும் சமயத்தில் ஐந்து மகாபூதங்களும் அதனதன் தன்மாத்திரைகளில் லயம் அடைகிறது. அவையும் 11 இந்திரியங்களில். அவைகள் அகங்காரத்தில், அகங்காரம் புத்தியில்,. அந்த புத்தியும் பிரதானத்தில் லயம் அடைகிறது. அடுத்த காரணம் **சாவயவம்** சப்தம், ஸ்பர்சம் , ரசம், ரூபம், கந்தம் ஆகிய அவையவங்கள் உடையதால் , அடுத்த காரணம் **பரதந்திரம்** (தானே ஒரு செயலை செய்யாததினால்) எப்படி பிரதானத்தினால் புத்தி, இதிலிருந்து அகங்காரம் அகங்காரத்தில் இருந்து தன்மாத்திரைகள் இதுபோலவே அவை வேறு ஒன்றை சார்ந்துள்ளது தனிமையாக செயல்படுவது இல்லை இதனால் வியக்த்தமானது அதன் குணங்களோடு விளக்கப்பட்டது.

**வீபரீதம் அவ்வியக்கதம்** என்று கூறப்பட்டது. அடுத்த வரியில் சொல்லப்படுகிறது கூறப்பட்டுள்ள குணங்களுக்கு எதிராக உள்ள தன்மை அவ்வியக்ததிற்கு வியக்தமானது காரணம் உடையதாக இருந்தால் அவ்வியக்தம் காரணம் இல்லாதது. பிரதானத்தை விடவும் முதன்மையாக ஒன்றும் இல்லாததால்

பிரதானமானது பிருக்கிருதியாக மட்டும் இருப்பதாகவும் விக்கிருத்தியாக இல்லாததாக கூறப்பட்டதால் அது ஒரு காரணமும் இல்லாதது ஆகின்றது. அடுத்தது அநித்தியம் வியக்தம் என்று கூறப்பட்டது அவ்வியக்தமானது பிரதானமோ நித்தியம். வேறு ஒன்றில் இருந்தும் உண்டாகாத காரணத்தினால்., மகத் முதலியவை வேறு ஒன்றிலிருந்து உண்டானதால் அநித்தியம் ஆகின்றது. அது இல்லாததால் நித்தியம். அடுத்து வியக்தமானது பரவி இல்லாது இருப்பது, பிரதானம் பரவி இருப்பது எல்லா இடத்திலும் இருக்கும் காரணத்தினால், அடுத்து வியக்தம் கிரியை உடையது. அவ்வியக்தமானது கிரியை அற்றது எல்லா இடத்திலும் பரவி இருக்கும் காரணத்தினாலே கிரியை அற்றது ஆகின்றது. தன்னிலையே கிரியை ஏற்காத காரணத்தினால் வியக்தம் அனேகம் என்று கூறப்பட்டது. பிரதானமோ ஏகம். அது வியக்தம் ஆகியவற்றுக்கு காரணமாக இருப்பதால் இந்த மூன்று உலகத்திற்கும் பிரதானமே காரணம் என்பதால் பிரதானம் ஏகமாக இருக்கிறது. அடுத்து வியக்தம் சார்ந்துள்ளது என்று கூறப்பட்டது. அவ்வியக்தமான பிரதானமோ எதையும் சார்ந்து இருப்பது இல்லை. காரியமாக இல்லாத காரணத்தினால் பிரதானத்தைக் காட்டிலும் வேறு ஒன்று உயர்ந்ததாக இல்லாத காரணத்தினால் அடுத்து வியக்தாமானது லயம் ஆகும் தன்மை உடையது என்று கூறப்பட்டது. அவ்வியக்தமான பிரதானமோ நித்தியமாக இருப்பதால் மகத் முதலியவை போல் பிரளயத்தில் அழியாததால் அது அலிங்கம். அடுத்து வியக்தமானது அவயங்கள் உடையது என்று கூறப்பட்டது. ஆனால் அவ்வியக்தமோ அவயங்கள் அற்றது. சப்தம், ஸ்பரிசம், ரசம், ரூபம், கந்தம் முதலிய அவயவங்கள் பிரதானத்தில் இல்லை என்பதால் வியக்தமானது பரதந்தரம் இல்லாதது என்று கூறப்பட்டது. ஆனால் அவ்வியக்தமோ சதந்தரமாக உள்ளது. தானே சுதந்திரமாக செயல்படும் என்பதால். || 10 ||

**त्रिगुणमविवेकि विषयः सामान्यमचेतनं प्रसवधर्मि।**
**व्यक्तं तथा प्रधानं तद्विपरीतस्तथा च पुमान्।।११।।**

**த்ரிகுணமவிவேகி விஷய: ஸாமான்யமசேதனம் ப்ரஸவதர்மி |**
**வ்யக்தம் ததா ப்ரதானம் தத் விபரீதஸ்ததா ச புமான் || 11 ||**

வியக்தம் மற்றும் பிராதனமும் முக்குணமுடையது, விவேகமில்லாதது, விஷயமானது, சாமானியமானது (சாதாரணம்), சைத்தன்யமற்றது, உற்பத்தி செய்யக்கூடியதும் ஆகும். அதுபோல புருஷர் இதற்க்கு எதிரானவராக இருப்பார்.

**பாஷ்யம்**

வியக்தம் மற்றும் அவியக்தம் வைதர்மிகத்தை பத்தாவது சுலோகத்தில் கண்டோம். இப்போது அதனுடைய சமான தர்மத்தை கூறுகின்றோம்.

வியக்தம்மான சத்வம், ரஜஸ், தமஸ்: வியக்தமானது விவேகம் இல்லாதது. விவேகம் என்றால் இது வியக்தம் , இது குணம் என்று பிரித்தறியும் தன்மை இல்லாதது. இவை ஆடு, மாடு என்று தெரியாத தன்மையை உடையது வியக்தம். மூன்றாவது விஷயம் போகியம் எல்லா புருஷர்களுக்கும் இது போகியம் ஆவதால் இது விஷயம், அடுத்து வியக்தம் ஆனது சாமான்யம் பொருள் கொடுத்து வேலை வாங்கப்படும். ஒரு வேலையாலை போன்று மிகவும் சாதாரணமானது அடுத்து வியக்தம் அசேத்தனம் அதாவது சகம் துக்கம், மோகம் இதை அறிவது இல்லை, அது மட்டும் இல்லாமல் பிரசவ தர்மம் உடையது அதாவது புத்தியில் இருந்து அகங்காரம், அகங்காரத்தில் இருந்து பஞ்ச தன்மாத்திரைகளை உண்டு செய்கிறது. இப்படி கற்பிக்கப்பட்டவை வியக்த தர்மங்கள் ஆகும்.

இவைகள் போலவே அவ்வியக்தமும் அதாவது பிரதானமும், வியக்த்தம் எப்படியோ பிரதானமும் அப்படியே என்று பொருள் . வியக்தமானது மூன்று குணம் அது போலவே அவ்வியக்தமும் மூன்று குணம் . எதனால் இந்த மகதாதிகள் மூன்று குணம் என்று கூறப்பட்டது. என்றால், எப்படி இந்த குணத்தை காரணம் கொண்டதோ அந்த குணங்கள் காரியமும் கொண்டதாக இந்த உலகத்தில் நாம் காண்கிறோம். உதாரணம் கருப்பு நல் கொண்டு உருவாக்கப்பட்ட துணி கருப்பாகவே இருப்பதுபோல் வியக்த்தமும் அவ்வியக்தமும் என்று பர்த்தோம். அதுபோலவே பிரதானமானது குணங்களையும் மற்ற விஷயங்களையும் பிரித்தறிய கூடிய தன்மை இல்லாததால் பிரதானமும் அவிவேகி விவேகமற்றது. வியக்தம் விஷயம் பிரதானமும் எல்லா புருஷர்களுக்கும் விஷயம் ஆவதால் வியக்தத்தை போலவே பிரதானமும் விஷயம் ஆகின்றது. வியக்தமானது எப்படி சாமான்யம் ஆகின்றதோ அதுபோலவே பிரதானமும் மிகவும் சாதாரணமாக இருக்கின்றது. வியக்தம் சேதனதன்மை இல்லாததன்மையால், பிரதானமும் சேதனதன்மை இல்லாதது அதனால் சுகம், துக்கம் மற்றம் மோகத்தை அது அறிவதில்லை.

பிரதானம் சேதனதன்மை அற்றது என்றால் அது எவ்வாறு அறியப்படுகின்றது என்றால் , அனுமானத்தினால் என்று பதில், எப்படி எங்கு அசேத்தனமான அதாவது சைத்தன்யமற்ற களிமண்கொண்டு சைத்தன்ய மற்ற பானை ஆனது உண்டாக்கப்படுகறதோ அது போல என்று அனுமானம் , வியக்த்தம் பிரசவதர்மி, உண்டாக்கும் தன்மை உள்ளது. அது போலவே பிரதானத்தில் இருந்து புத்தி உற்பத்தியாவதால் அதனால் வியக்தம் (பிரதானமானது) அதற்குள்ள சமான தர்மம் விவாதிக்கப்பட்டது .

புருஷனானவன் இவைகளுக்கு விபரீதமாக (விரோதமாக) இருப்பது என்று எது கூறப்பட்டதோ அது விளக்கப்படுகிறது எப்படி என்றால் வியக்தாமானதும் அவ்வியக்தமானதும் திருகுணம். ஆனால் புருஷன் குணமற்றவன். வியக்தம் அவ்வியக்தமானதும் விவேக்கம் அற்றது. ஆனால் புருஷனானவன் விவேக்கம் உள்ளவன் வியக்தம் மற்றும் அவ்வியக்தம் விஷயம் ஆனால் புருஷன்

விஷயமல்லாதவன். அடுத்தது வியக்தம் அவ்வியக்தமானது சாமான்யமானது. ஆனால் புருஷனானவன் சாமான்யமல்லாதவன். வியக்தமும் அவ்வியக்தமும் அசேத்தனம். புருஷனானவன் சேதனம் உடையவன். சுகம் , துக்கம், மோகம் என்ற உணர்வை அறிகின்றான். அதனால் புருஷன் சேதனம் உடையவன். வியக்தம் அவ்வியக்தமனாது பிரசவதர்மி அதாவது உண்டாக்கும் தன்மையுள்ளவன் என்பதாலேயே **தத் விபரீத்த பூமான் ததாசபுமான்** இதற்கு விளக்கம் போன ஸ்லோகத்தில் பிரதானம் ஹேது (காரணம்) இல்லாதது என்று கூறப்பட்டது . அது போலவே புருஷனும் காரணம் அற்றவன். எங்ஙனம் என்றால் (காரணம்) ஹேது குணங்கள் உடையது வியக்தம் விரோதமான குணங்கள் உடையது அவ்வியக்தம் என்பதால் வியக்தம் ஹேத்து உடையது. அவ்வியக்தம் ஹேத்துவற்றது. அதுபோல புருஷனும் காரணம் இல்லாதவன். எதனால் காரணம் இல்லாதவன் என்றால் அவன் உண்டாவது இல்லை. வியக்தமான அநித்தியம் பிரதானமோ நித்தியம் அதுபோல புருஷனும் நித்தியம். வியக்தமானது எல்லா இடத்திலும் வியாபித்து இருப்பது இல்லை. ஆனால் பிரதானமோ எல்லா இடத்திலும் வியாபித்து இருப்பது அதுபோல் எல்லா இடத்திலும் புருஷன் வியாபித்து இருப்பவன். வியக்தமானது கிரியை உடையது பிரதானம் கிரியை இல்லாதது. அதுபோல புருஷன் கிரியை அற்றவன் எல்லா இடத்திலும் வியாபித்து இருப்பதால். வியக்தமானது அனேகம் அவ்வியக்தமானது ஏகம். அதுபோல புருஷனும் ஏகம்.

இந்த இடத்தில் சிறிய விளக்கம். புருஷன் அனேகன் என்பதை 18 வது சுலோகத்தில் பார்போம். அதனால் மற்ற தன்மைகளை சமானமாக கொண்டதாக இருந்தாலும் புருஷன் அனேக்கன். இங்கு கூறப்பட வேண்டும்.

அடுத்து வியக்தமானது வேறு ஒன்றை சார்ந்து இருப்பது இல்லை. அது போல புருஷனும் வேறு ஒன்றினையும் சார்ந்து இருப்பவன் அல்ல. வியக்தம் லீனம் உடைய தன்மை உடையது. பிரதானமோ வேறு ஒன்றில் லீனம் அடையும் தன்மை இல்லாதது அதற்க்கு உண்டாக்கும் தன்மையில்லாததால் அதுபோலவே புருஷனும் , வியக்தம் அவயவம் உடையது. அவ்வியக்தம் அவயவம் அற்றது. புருஷனும் அவயவயவன் இல்லாதவன். வியக்தம் பரதந்தரம் ஆனது அதாவது சுதந்தரமானது அல்ல அவ்வியக்தம் சுதந்திரமானது. அதுபோலவே புருஷன் சுதந்திரமானவன் இப்படி இவை இருக்கின்றன. || 11 ||

இப்படி முன்பு திரிகுணம் என்று கூறப்பட்டது இந்த திரிகுணம் என்ன, அவைகளின் இலட்சணம் (குறிப்பு) என்ன, அவைகளின் வேலை , செயல் எது என்றால்.

**प्रीत्यप्रीतिविषादात्मकाः प्रकाशप्रवृत्तिनियमार्थाः ।**
**अन्योऽन्याभिभावाश्रयजननमिथुनवृत्तश्यच गुणाः ।।१२।।**

**ப்ரீத்யப்ரீதிவிஷாதாத்மகா: ப்ரகாஷப்ரவ்ருத்தி நியமார்தா: |**
**அன்யோன்யாபிபவாஷ்ரய ஜனன மிதுன வ்ருத்தஸ்ச குணா: || 12 ||**

குணங்களானது சுகம், துக்கம் மற்றும் மோகரூபமானது பிரகாசம், பிரவிருத்தி, ஸ்திதி செய்வது தொழில், ஒன்று மற்றொன்றினை சூழ்ந்து சார்ந்து, தோற்றல், சேர்ந்து கொள்ளும் விருத்தியுடையது.

**பாஷ்யம்**

வியக்தம் , அவ்வியக்தம் மற்றும் புருஷனும் விரோத தர்மங்கள் மற்றும் சமானதர்மங்கள் காண்பிக்கபட்டபின் இந்த சுலோகத்தில் திரிகுணமானது என்ன என்பதை விளக்கமாக பார்போம். இந்த திரிகுணமானது என்னென்ன தன்மை (அவைகளின் தன்மைகள் என்ன) என்று கூறப்படுகிறது. **பிரீத்தி** (சுகம்), **அப்பிரீத்தி** (துக்கம்) மற்றும் **விஷாத** (மோகம்) இவைகளில் சத்துவம் பிரகாசம் செய்யும் தன்மை உடையவை. ரஜஸ் பிரவிருத்தி செய்யும் தன்மை உடையது. தமஸ் நியமம் ( சித்தி) தன்மை உடையது. **அன்யோன்யோ அபிபவ,** ஒன்றை மற்றொன்று மறைக்கின்றது. பிரீத்தி மற்றும் அப்பிரீத்தி ஆகிய தர்மங்கள் ஒன்று மற்றொன்றை மூடி மறைக்கின்றது. எப்படி என்றால் சத்துவமானது ஓங்கி இருக்கும் பொழுது ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவைகளின் குணங்கள் தன்னுடைய குணமான சுகம் பிரகாசம் செய்யும் தன்மை ஆகியவைகளால் அது மூடி மறைக்கிறது. ரஜஸ் ஆனது ஓங்கி இருக்குமானால் சத்துவம், தமஸ் ஆகியவைகளின் தர்மங்களை மறைத்து துக்கம், பிரவிருத்தி குணங்களை உண்டு செய்கின்றது. அதுபோல தமஸ் ஓங்கி இருக்கும் பொழுது ரஜஸ் ஆகியவைகளின் குணங்களை மறைத்து மோகம் மற்றும் ஸ்திதி செய்யும் தன்மை செய்து மூடி மறைக்கின்றது.

அடுத்து **அன்யோன்யோ ஆஸ்ரயம்,** ஒன்று மற்றொன்றினை சார்ந்திருப்பது. இரண்டு அனுக்களால் சேர்வதால் உண்டாவது. எப்படி ஒன்றினை மற்றொன்றினை சார்ந்திருப்பது இருப்பதால் துவியனுக்காக ஆகின்றதோ என்று இங்கு பொருள் **அன்யோன்யோ ஜனக** எப்படி களி மண்ணில் இருந்து பானை உண்டாகின்றதோ அதுபோல **அன்யோன்யோ மிதுநாத்** ஒரு பெண் ஒரு ஆண் இடையே சேர்க்கையோ அதுபோல இந்த முக்குணங்களின் சேர்க்கை இவை கூறப்பட்டுள்ள இந்த சுலோகத்தில் அன்யோன்யோமாகி சேர்வதால் எவ்வாறு எல்லாவற்றிலும் செல்கிறது. ரஜஸ் ஆனது சத்துவங்களின் சேர்க்கையால் உண்டானது. சத்துவத்தினுடன் சேர்வதால் ரஜஸ் உண்டாகிறது. தமசும் இவைகளுடன் சேர்வதால் (சத்துவ ரஜஸ் இவைகளுடன் தமஸ் சேர்வதால்) அதாவது சத்தவ மற்றும் ரஜஸின் சேர்க்கையால் உண்டாவது தமஸ் என்பது. இவைகளின் துவக்கமோ அல்லது சேர்க்கையோ அல்லது பிரிவோ எப்போதும் அறியப்படுவதில்லை. அதாவது ஒன்றை மற்றொன்று உதவி செய்து உண்டாக்குவது என்று பொருள். ( **அன்யோன்யோ விருத்தய** ) அதாவது குணங்கள்

குணங்களிடத்தில் இருப்பது என்பது போல் ஒன்று மற்றொன்றில் இருக்கின்றது எப்படி ஒரு அழகான குணம்முடைய பெண்களால் எல்லோருக்கும் இன்பத்தை கொடுப்பதாக இருப்பதால் அதே பெண்மணி மனைவிகளுக்கு துன்பத்தை கொடுப்பவளாக, அழகு மற்றும் குண காரணமாக துன்பத்தை உண்டாக்குவதற்க காரணமாக இருக்கின்றாள். இதுபோல் சத்துவம், ரஜஸ் மற்றும் தமஸ் இவைகளின் விருத்திகளுக்கு காரணமாக இருக்கின்றது. எப்படி ராஜாவானவன் பிரஜைகளை காப்பதிலும், துஷ்டர்களை நிராகரிப்பதை போலவும் ஆகிய செயல்களால் நல்லோருக்கு இன்பம் தருகின்றான். தீயவர்களுக்கு துன்பம் மோகம் கொடுக்கின்றான். இப்படி ரஜஸ் சத்துவம் தமஸின் விருத்தியை உண்டாக்குகின்றது. அதுபோல தமஸோடு சுவரூபத்தினால் மூடப்பட்டது சத்துவம் மற்றும் ரஜஸ் இவைகளின் விருத்திகளை உண்டு ப்ண்னுகின்றது. எப்படி மோகமானது வானத்தை மூடி உலகத்தில் உள்ளவர்களுக்கு இன்பத்தை கொடுக்கிறது. உழவர்களுக்கு உழவு செய்யும் செயலை உண்டு செய்கின்றது. அதுபோல மோகத்தில் உள்ளவர்களுக்கு மோகத்தை உண்டு செய்வதால் ஒன்று மற்றொன்றின் விருத்தியை உண்டாக்குகின்றது என்று உறுதி ஆகின்றது. || 12 ||

அடுத்த இந்த மூன்று குணங்களின் செயல்களை விளக்கும் சுலோகம்.

**सत्वं लघु प्रकाशकमिष्टमुपष्टम्भकं चलञ्च रजः।**
**गुरू वरणकमेव तमः प्रदीपवच्चार्थतो वृत्तिः।।१३।।**

**ஸத்வம் லகுப்ரகாஸகமிஷ்டமுபஷ்டம்பக சலஞ்ச ரஜ: |**
**குரு வரணகமேவ தம: ப்ரதீபவச்சார்ததோ வ்ருத்தி: || 13 ||**

சத்துவம் லேசானது, பிராகாசம் செய்வது, என்றும் ரஜசானது காரியத்தில் (அதனதன்) பிரவிருத்திக்கும் பிரயோஜகமுடையதும், செயலுடையதும் என்றும், தமஸானது கனமானதும் மூடல் செய்யும் தன்மையுடையது என்றும் ஏற்க்கப்படுகின்றது, இதன் செயல்பாடு தீபத்தினைப்போன்றது.

**பாஷ்யம்**

சத்துவம் உத்கடமான நிலையில் இருக்கும் பொழுது அங்கமானது மென்மையாகவும் புத்தியானது பிரகாசமானதாகவும் இந்திரியங்கள் சந்தோஷமாக ஆகின்றது. ரஜசானது ஓங்கியிருக்கும் பொழுது ஒவ்வொரு இந்திரியத்தினையும் செயலுக்கு தூண்டுவதாக இருக்கிறது. அது மட்டும் அல்லாது சஞ்சலமாக உடைய மனத்தை உற்பத்தி செய்கின்றது. தமஸானது ஓங்கி இருக்கும் பொழுது அங்கங்கள் மிகவும் கடினமானதாகவும் கணம் உடையதாகவும் இருக்கின்றது. இந்திரியங்கள் மூடப்பட்டதாக (மறைக்கப்பட்டதாக) இருக்கிறது. அதாவது தன் காரியத்தில் பரவிருத்திக்கும் தன்மை இல்லாததாக இருக்கின்றது. சரி ஆனால் குணங்கள்

ஒன்று மற்றொன்றினை காட்டிலும் விரோத தர்மத்தை உடைய குணத்தை உடையதால் எங்ஙனம் இவை காரியத்தை செய்யும் . அது எதனால், எப்படி, என்றால் தீபத்தை போல என்று பதில். எப்படி தீபமானது ஒன்று மற்றொன்றினை விரோதமாக கொண்ட பொருளாக இருந்தாலும் எண்ணெய், திரவம், அக்கினி ஆனது எரிக்கும் தன்மை, திரி ஆனது பிரவிருத்தி தன்மை இருந்தாலும் இவை மூன்றின் சேர்க்கையால் பிரகாசத்தினை உண்டு செய்கின்றது. இதுபோல விரோதமாக இருந்தாலும், சத்துவம் , ரஜஸ், தமஸ் தன்னுடைய செயலை உண்டாக்குகின்றது. || 13 ||

அடுத்து அவ்விவேக்கம் , விஷயம், அசேத்தனம் போன்ற தர்மங்கள் உடைய பிரதானத்தை குறித்து 11 வது சுலோகத்தில் கண்டோம். அவைகளின் நிரூபணம் எவ்வாறு ஆகிறது.

**अविवेकयादिः सिद्धिस्त्रैगुण्यात्तद्विपर्ययाभावात् ।**
**कारणगुणात्मकत्वात् कार्यस्याव्यक्तमपि सिद्धम् ।।१४।।**

**அவிவேக்யாதி: சித்திஸ்த்ரைகுண்யாத்தத் விபர்யயாபாவாத் |**
**காரணகுணாத்மகத்வாத் கார்யஸ்யாவ்யக்தமபி ஸித்தம் || 14 ||**

விவேகமற்றது முதலிய தர்மங்களின் நிரூபணம் முக்குணத்தால் என்கிற காரணத்தால் ஆகும். அதன் விபரீதமானது காணப்படுவதில்லாததால், காரியமானது காரணத்தின் குணத்தையுடையதாக இருப்பது காணப்படுவதால், காரியமமானது அவ்வியக்தமே என்பதும் நிரூபணமாகின்றது.

**பாஷ்யம்**

திரிகுணம் அவிவேக்கி விஷயகம் என்று பிரதானம் மற்றும் வியக்தம் விளக்கப்பட்டது. அதில் பிரதானம், மகத் முதலியவை முக்குணங்கள் உடையது. விவேக்கம் இல்லாதது ஆகியவை எவ்வாறு அறியப்பட்டது என்று கேட்டால், முக்குணமுடையதால் விவேக்கமற்ற முதலியவைகள் நிரூபிக்கப்படுகிறது. மகத் மற்றும் வியகத்திலும் இது நிரூபணம் ஆக முடியாது என்றால் இதற்கு விரோதமான வேறு தன்மைக்ள உள்ள ஒன்றின் இருப்பு இல்லததால் என்று நிரூபணம் ஆகின்றது. எங்கு நூல் உள்ளதோ அங்கு துணியானது இருத்தல் காணப்படுகிறது. நூல் ஓர் இடத்திலும் துணியாவது ஓர் இடத்திலும் காணப்படுவதில்லை. வியக்தம், அவ்வியக்தம் இதனால் நிரூபணம் ஆகின்றது. பிரதானமானது தூரத்தில் இருப்பது வியக்தமானது அருகில் இருப்பது. எவர் வியக்தத்தை காண்கின்றாரோ அவர் பிரதானத்தையும் காண்கின்றார். இதைத்தவிர வேறு ஒன்று இல்லாததால் என்று அவ்வியக்தமானது நிரூபணம் ஆகின்றது.

மற்றொரு காரணமும் உண்டு, உலகத்தில் காரணம் எந்த தன்மை உடையதாக இருக்கின்றதோ அதுபோலவே காரியமும் இருப்பது காணப்படுகின்றது. எப்படி கருப்பு நூலினால் உண்டாக்கப்பட்ட துணியானது கருப்பாகவே இருக்கிறதோ, அதுபோலவே மகது முதலிய லிங்கமானது விவேக்கம் அல்லாத விஷயமாக சாமானியம்மாக சேதனம் இல்லாததாக பிரசவதர்மியாக காணப்படுவதால் அது போவவே அவ்வியக்தமும் என்று நிரூபணம் ஆகின்றது. || 14 ||

அவ்வியக்தமும் காரணம் என்று நிரூபணம் செய்யப்பட்டாலும் அதன் அவசியம் குறித்து கேள்வி எழுகிறது.

**भेदानां परिमाणात् समन्वयाच्छक्तितः प्रवृत्तेश्च।**
**कारणकार्यविभागादविभागाद् वैश्वरूपस्य।।१५।।**

**பேதானாம் பரிமாணாத் ஸமன்வயாச்சக்தித: ப்ரவ்ருத்தேஸ்ச |**
**காரணகார்ய விபாகாதவிபாகாத் வைஸ்வரூபஸ்ய || 15 ||**

**कारणमस्त्यव्यक्तं प्रवर्तते त्रिगुणतः समुदयाच्च।**
**परिणामतःसलिलवत् प्रतिप्रतिगुणाश्रयविशेषात्।।१६।।**

**காரணமஸ்த்யவ்யக்தம் ப்ரவர்ததே த்ரிகுணத ஸமுதயாச்ச |**
**பரிணாமத ஸலிலவத் ப்ரதிப்ரதி குணாஷ்ரயபிடோஷாத் || 16 ||**

பலவகையான பிரிவுகள் இருப்பதால் மூலமான காரணம் பிரகிருதியே ஆகும், இதற்க்கு காரணம் (ஹேது), வரையறுக்கப்பட்டதால், முக்குணமும் சமமாக இருப்பதால், காரியம் மற்றும் காரணம் எனும் பிரிவு தெளிவாக இருப்பதால், ஜகத்தின் மறைவு இருப்பதால் ( பிரளயத்தில்) இந்த அவ்வியக்தத்தின் பிரவிருத்தியானது, முக்குணத்தாலுண்டாவது , அவைகளின் சேர்க்கையால் , நீரைப்போன்று (அது சேருமிடத்தின் தன்மையை அடைவது போன்று) முக்குணத்தின் தன்மையானதாக தங்கள் தங்கள் குணத்தோடு பிரவிருத்திக்கின்றது.

**பாஷ்யம்**

முக்குணங்கள் உடைய விவேக்கம் உடைய வியக்தத்தின் சித்தியானது (நிரூபணம்) வேறுபட்ட தன்மை உடையது இல்லாததால் என்று கூறப்பட்டது. இதுபோலவே காரணம் குணம் உடையதால் காரியம் அவ்வியக்தமானது சித்தம் என்று கூறப்பட்டது. இது ஒரு பொய்யான காரணம் ஆகும். இந்த உலகத்தில் எது கிடைப்பது இல்லையோ அது இல்லை என்று நியமம் இருப்பதால் **என்று கூறினால், அது சரியல்ல**. பொருள் இருந்தாலும் சூக்குமம் முதலிய காரணங்களால்

அது அடையப்படாது (காணப்படாது) இருப்பது போலவே பிரதானமும் இருக்கிறது, அடையப்படுவது இல்லை. அது எப்படியென்றால், உலகத்தில் எங்கு செயல்புரிபவர் இருக்கின்றாரோ அவரின் மாற்றமானது நாம் காண்கின்றோம் . எப்படி குயவன் ஆனவன் களிமண் கொண்டு அதன் மாற்றத்தினாலேயே பானையை உண்டு செய்கின்றானோ அதுபோலவே மகத் முதலிய மாற்றங்களை கொண்டு பிரதானம் புத்தி அகங்காரம் தன்மாத்திரைகள் ஐந்தும் இந்திரியம் பதினொன்றும், மகாபூதம் ஐந்தும் ஆகிய பல வகை மாற்றங்களை உண்டு செய்வதால் பிரதானம் என்கின்ற காரணம் ஒன்று இருக்கிறது என்று நிச்சயம் ஆகின்றது. எது இந்த வியக்தமான மாற்றங்களை உண்டு செய்கின்றது என்று; இப்படி பிரதானத்தை ஏற்காமல் போனால் இந்த மாற்றம் உடைய மகத் முதலியவைகளின் வியக்தமும் இல்லாது போகும். ஆனால் வியக்தம் இருப்பது காணப்படுவதால் பிரதானமும் இருக்கிறது என்று காணப்படுகிறது- சமன்வயாத், இங்கு உலகத்தில் மிகவும் பிரசித்தியாக காணப்படுவது எப்படி விரதத்தை கைகொண்ட ஒரு சிறுவன் ஆனவனது சிகை முதலியவைகளை கண்டு நாம் சம்மந்தம் செய்து அறிகின்றோம், இவனுடைய தாய் தந்தையர் பிரமணராக இருக்க வேண்டும் என்று. அது போலவே மகதாதி முக்குணம் உடையதைக்கண்டு இதற்கு காரணம் இருக்கவேண்டும் என்று சம்மந்தம் செய்து அதனால் பிரதானம் இருக்கிறது என்று உறுதி செய்கின்றோம். அதுமட்டுமல்லாது இந்த உலகத்தில் எவர் எதனை செய்ய சக்தி உடையவராக இருக்கிறாரோ அவர் அச்செயலை பிருவிருத்திப்பது காணப்படுகிறது. எப்படி குயவனானவன் பானை செய்வதில் சாமார்த்தியம் உள்ளதால் பானை செய்வதில் பிரவிருதிக்கிறான், அதைவிடுத்து துணி நெய்வதிலோ, ரதம் உண்டாக்குவதிலோ அவர் பிரவிருத்திப்பது இல்லை என்பதால், பிரதானம் இருப்பது அறியப்படுகிறது. அது மட்டும் அல்லாது காரணம் மற்றும் காரியத்தின் பிரிவு இருப்பதால் எப்படி பானையானது பால், தயிர், தேன் முதலியவைகளை தாங்க சாமர்த்தியம் உடையதாக இருக்கிறது என்று காண்கின்றோம். ஆனால் , அதன் காரணமான பானையை செய்யும் களிமண் இவைகளை தன்மை தாங்கும் தன்மை இல்லாததால் களிமண் பானையை உண்டு செய்யும் தன்மை உள்ளதால் பானையானது களிமண்ணை உண்டு செய்ய முடியாது என்பதால், மகது முதலிய லிங்கத்தை கண்டு அனுமானம் செய்யப்படுகிறது. இதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும், எதன் காரியமாக இந்த வியக்தம் இருக்கிறதோ என்று அதுபோலவே, இந்த ஜகத் (இந்த உலகம்) வியக்தமாக இருப்பதால் உலகத்தின் மூலம், ஸ்வரூபம் (அதன் தன்மை) வைஸ்வ ரூபம் , இதன் பிரிவு இல்லாததால் பிரதானம் இருக்கின்றது. எதில் இருந்து இந்த மூன்று உலகமும் ஐந்து மகா பூதங்களால் உண்டு செய்யப்படுகிறதோ.

மகா பூதங்களினால் இந்த மூன்று உலகம் உண்டு செய்யப்படுகிறது. இந்த ஐந்து மகா பூதங்களும் நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றம் ஆகாயம் ஆனவை, எப்படி பிரளய காலத்தில், எப்படி உண்டாயிற்றோ, அதே கிரமத்தில் லயமும் அடைவது காணப்படுகிறது. இந்த மகா பூதங்களின் தன்மை தன்மாத்திரைகளில்

இந்த தன்மாத்திரைகள் 11 இந்திரியங்களிலும் அகங்காரத்தில், அகங்காரம் புத்தியில், அந்த புத்தியும் பிரதானத்தில் என்று இந்த மூன்று உலகமும் பிரளய காலத்தில் பிரதானத்தில் லயத்தினை அடைகிறது. அதனால் வியக்தம் மற்றும் அவ்வியக்தத்திற்கு காரணமாக இருக்கிறது என்பதால் அவ்வியக்தம் பிரதானம் என்று நிரூபணம் ஆகிறது. || 15 || || 16 ||

**सङ्घातपरार्थत्वात् त्रिगुणादिविपर्ययादधिष्ठानात्।**
**पुरुषोऽस्ति भोक्तृाावात् कैवल्यार्थं प्रवृत्तेश्च।१७।।**

**ஸங்காதபரார்தத்வாத் த்ரிகுணாதி விபர்யயாதாதிஷ்டானாத்|**
**புருஷோSஸ்தி போகத்ருபாவாத் கைவல்யார்தம் ப்ரவ்ருத்தேஸ்ச || 17 ||**

புருஷன் இருக்கிறார், இதற்க்கு காரணம், சைத்தன்யமற்ற ஜடமான விஷயங்கள் மற்றதிற்க்கு ஆவதால், முக்குணங்களினை காட்டிலும் வேறானதானதால், அதிஷ்டானமானதால் (ஆதாரமானதால்), போக்தா (அனுபவிப்பவர்) வாக இருப்பதால், மோக்ஷத்திற்க்கு . பிரவிருத்தி ( முயர்ச்சி) காணப்படுவதாலும்.

**பாஷ்யம்**

முன்பே இரண்டு சுலோகத்தில் பிரதானம் இருக்கிறது என்று நிச்சயிக்கப்பட்டது. அடுத்து புருஷன் இருக்கின்றான் என்று நிரூபிக்க (**சங்காத்த பரார்த்தவாத்**) வியக்தம். அவ்வியக்தம் புருஷனின் ஞானத்தால் மோட்சம் என்று கூறப்பட்டது. அதில் வியக்தம், அதற்கு பிறகு அவ்வியக்தம் இவைகளை நிரூபித்த பின் புருஷனும் சூக்குமமாக இருப்பதால் அவனையும் அனுமானத்தினால் நிரூபணம் செய்ய காரணங்கள் கொடுக்கப்படுகிறது. **சங்காத்த பரார்தத்வாத்** முதல் காரணம் மகத் முதலியவைகளின் கூட்டமானது எதற்காக இருக்கிறதோ அது புருஷன் என்பதற்காக என்று அனுமானம் செய்யப்பகிறது. காரணம் அவை ஒரு கட்டிலைப்போல சேதனம் இல்லாதது எப்படி கட்டில் அதற்கு மேல் விரித்திருக்கும் மெத்தை, தலையனை, போர்வைகளின் சேர்க்கையானது தணக்கானது இல்லாததாலும் அவை வேறு ஒருவருக்காக, வேறு புருஷனுக்காக என்பதாலும் இங்கு இதனை அனுபவிக்க ( மகதாதி கூட்டத்தினை) ஒரு புருஷன் இருக்கின்றான் என்பது நிரூபணம் ஆகின்றது. எவருடைய அனுபவத்திற்காக இந்த ஐந்து மகாபூதங்களும் கொண்ட சரீரம் ஆனது போக ஆயத்தனம் என்று கூறப்பட்ட அனுபவிக்க பாத்திரமாக இருக்கின்றதோ அவர் அந்த புருஷன் அனுபவிக்க அந்த மகத் கூட்டங்கள் இருக்கின்றது. அடுத்த காரணம் **த்ரயிகுணயாதி வியபாயயாத்** திரிகுணம் அவ்விவேக்கி என்று கூறப்பட்டது ( **தத் விபரீத ததாச பூமான்**) என்று கூறப்பட்டதால் இந்த முக்குணம் மற்ற

விவேக்கமுடைய சேதமான புருஷன் இருக்கின்றான் என்று அறியப்படுகிறது. மூன்று காரணம் **அதிஷ்டானம்,** எப்படி தாண்டவும், ஓடவும், குதிக்கவும் சமார்த்தியம் உள்ள குதிரைகளின் ரதமானது ஒரு சாரதியனால் அடக்கப்பட்டதாக பிரவிருத்திக்கிறதோ அது போல இந்த சரீரம் ஆனதும் ஒரு புருஷனின் காரணமாக பிரவிருத்திக்கிறது. **சஷ்டி தந்திரம்** என்னும் நூலிலும் இதே கூறப்பட்டுள்ளது (**புருஷம் அதிஷ்டம் பிருவிருத்ததே**) என்று புருஷனால் ஆளப்பட்டதாகி பிரதானம் பிரவிருத்திக்கிறது. நான்காவது காரணம் **போக்துருத்துவாத்** எப்படி இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, காரம், கசாயம் முதலிய அறுசுவைகள் கூடிய உணவினை வேறு ஒருவர் ருசித்து அறிகிறாரோ அதுபோல மகத் முதலியவைகளை அனுபவிக்க, மகத் முதலியவை அனுபவிக்கும் தன்மை அற்றதாக இருப்பதால், அவைகளை அனுபவிக்க வேறு ஒரு ஆத்மா இருப்பது அவசியம் ஆகிறது. எவருடைய அனுபவித்திற்க்காக மகத் முதலியவை பிரவிருத்திக்கிறதோ. ஐந்தாவது காரணம் **கைவல்யார்த்தா பிரவிருத்தேச்ச** மோக்ஷத்திற்காகவும் இந்த ஆத்மாவனது பரவிருத்திப்பதால் அனுமானம் செய்யப்படுகிறது. எல்லோரும் பாமரர், படித்தவர் முதலிய எல்லோரும் சம்சாரத்தின் பாரத்தில் இருந்து விடுதலை அடைய விரும்பும் காரணத்தால் , விடுதலை அடையும் ஆத்மா என்பது இருக்கிறது. இப்படி கூறப்பட்ட காரணத்தினால் இந்த உடலைத்தவிர வேறு ஒரு ஆத்மா இருக்கிறது நிரூபணம் ஆகிறது. || **17** ||

இப்படி ஆத்மாவது இருத்தல் நிரூபிக்கப்பட்ட பிறகு அது ஒவ்வொரு சரீரத்திலும் வேறு வேறாக அல்லது ஒன்றாக இருப்பதா என்று கேள்வி.

**जननमरणकरणानां प्रतिनियमादयुगपत्प्रवृत्तेश्च।**
**पुरुषबहुत्वं सिद्धं त्रैगुण्यविपर्ययाच्चैव।।१८।।**

**ஜனனமரணகரணானாம் ப்ரதிநியமாத யுகபத்ப்ரவ்ருத்தேஸ்ச |**
**புருஷபஹூத்வம் ஸித்தம் த்ரைகுண்யவிபர்யயாச்சைவ || 18 ||**

புருஷன் பல என்று (அனுமானத்தால்) நிருபணமாகிறது, பிறப்பிறப்பு என்பது ஒவ்வொருவருக்கும் வேறானதால், ஒரே நேரத்தில் முயர்ச்சியனது எல்லோருக்கும் இல்லாததால், முக்குணங்களின் வேறுபாடு காணப்படுவதாலும் (பல வகையான மனிதர் இருப்பதால்).

**பாஷ்யம்**

புருஷன் எல்லா சரீரத்திலும் ஒருவனாக மணிகளில் நூல் போன்று இருக்கின்றானா அல்லது ஒவ்வொரு சரீரத்திலும் வேறுவேறாக இருக்கின்றானா என்ற கேள்விக்கு இப்படி கூறப்பட்டுள்ளது. ஜனனம், மரணம் மற்றும் காரணங்கள்

ஒவ்வொன்றும் நியமிக்கப்பட்டதால் ஒரு ஆத்மா என்று ஏற்றால் ஒருவர் பிறந்தால் எல்லோரும் பிறப்பதும், ஒருவர் மரணம் எய்தால் எல்லோரும் மரணம் அடைவதும், ஒருவரின் இந்திரியமானது பழுதுபட்டால் மற்றவர்களுடைய இந்திரியங்களானது பழுதடைவதாக இருப்பதும் காணப்படுவது இல்லை என்பதால், இவைகள் நியமம் இருக்பதால் புருஷன் பல என்று நிரூபணமாகின்றது. அது மட்டும் அல்லாது இரண்டாவது காரணம் ஒரே நேரத்தில் ஒருவரும் தர்மங்களில் ஒரே மாதிரி தர்மங்களில் பிரவிருத்தி செய்வதில்லை. என்பதால் சிலர் தருமங்களும் சிலர் அதர்மங்ளிலும் சிலர் வைராக்கிய விஷயத்திலும் வேறு சிலரோ ஞான விஷயத்திலும் பிரவிருத்தி செய்வது காணப்படுவதால் இதனால் புருஷன் அனேகன் என்று நிரூபணம் ஆகிறது. அது மட்டும் அல்லாது முக்குணங்களின் மாற்றத்திலும் ஏற்றத்தாழ்விலும் ஒருவர் சுகத்தினை அடைபவராக இருப்பதாகவும் வேறு ஒருவர் மோகத்தினை அடைவதாகவும் இருப்பதாகவும் , சத்துவ, ரஜஸ், தமஸ் ஆகியவைகளின் மாற்றத்தினாலும் புருஷன் **அனேகன்** ( பல ) என்று நிரூபணம் ஆகின்றது. **|| 18 ||**

**तस्माच्च विपर्यासात्सिद्धं साक्षित्वमस्य पुरूषस्य।**
**कैवल्यं माध्यस्थ्यं द्रष्टृत्वमकर्तृ भावश्च।।१६।।**

**தஸ்மாச்ச விபர்யாஸாத் ஸித்தம் ஸாக்ஷித்வமஸ்ய புருஷஸ்ய |**
**கைவல்யம் மாத்யஸ்த்யம் த்ரஷ்ட்ருத்வமகர்த்ருபாவஸ்ச || 19 ||**

இப்படி முக்குணமல்லாததானதால் இந்த புருஷனானவர் சாக்ஷியாக(ஞான சுவரூபமாக) இருப்பதும், மோக்ஷநிலையை அடைந்தவராகவும் , நடுநிலை வகிப்பவராகவும், பார்பவராகவும், செயலற்றவராகவும் உள்ளதும் (அனுமானத்தால்) நிரூபணமாகிறது.

**பாஷ்யம்**

புருஷனானவன் **அகர்த்தா** என்பன முதலாக விளக்கப்பட்டது. முன்பு கூறப்பட்ட மூன்று குணங்களும் இல்லாதவனாக முக்குணங்களுக்கு விபரீதமாக உள்ள குணமற்ற தன்மை உடையவனாகவும், விவேகம் உள்ளவனாகவும், போக்தா ஆனவனாகவும் முதலிய குணங்களால் புருஷனானவன் விளக்கப்பட்டான். அப்படிபட்ட சத்துவ, ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுக்கும் சாட்சியானவன் என்பது இந்த புருஷன் என்று நிரூபணம் ஆகின்றது. குணங்களே செயலில் ஈடுபடுகின்றது. சாட்சி அங்ஙனம் இல்லை, சாட்சியானது பிருவிருத்தியிலும் இயங்காது. அது மட்டுமல்லாது **கேவலம்** என்ற மோட்ச நிலையில் இந்த புருஷன் இருக்கின்றான். அதாவது முக்குணங்களை அடுத்து வேறானவனாக இருக்கின்றான். அந்தமட்டும் இல்லாது நடுநிலைமை வகிப்பவன் போன்று

மத்தியஸ்தத்தன்மை நிலை உடையவனாக இந்த புருஷன் இருக்கின்றான். ஒரு **பரிவ்ராஜ்யனை** போல எப்படி பரிவ்ராஜன் கிராமங்களின் பிக்ஷை செய்வதற்காக செல்லும் சமயத்தில் மத்தியஸ்தனமாக மட்டும் இருந்து, விருப்பு, வெருப்பு இல்லாமல் இருப்பது போன்று, புருஷனும் குணங்களின் மத்தியஸ்தனாக இருக்கின்றான். இதனால் புருஷன் மத்தியஸ்த சுபாவம் உடையதனால் அவன் திருஷ்டனாகவும், கர்த்தா அல்லாதவனாகவும் உள்ள நிலையும் நிரூபணமாகின்றது. சத்துவ, ரஜஸ், தமோ குணங்களும் கருமங்களை செய்வதற்கு பிரவிர்த்திக்கிறது. புருஷன் அதில் பிரவிர்த்திப்பதில்லை. என்பதால் பிருவிருத்தி, நிருவிருத்தி அற்றவனாக சாட்சியாக புருஷன் இருக்கின்றான்.
**|| 19 ||**

புருஷன் கர்த்தா இல்லை என்பது நிரூபணம் ஆனாலும் சைத்தன்யம் உடைய நான் செய்கின்றேன் என்ற ஞானம் உண்டாவதால் புருஷனானவன் கர்த்தா இல்லை. இது எங்ஙனம் கூறப்பட்டது என்பதற்கு அடுத்த சுலோகம்.

**तस्मात् तत्संयोगादचेतनं चेतनावदिव लिङ्गम्।**
**गुणकर्तृत्वे च तथा कर्तेव भवत्युदासीनः।।२०।।**

**தஸ்மாத் தத்ஸம்யோகாத சேதனம் சேதனாவதிவ லிங்கம் |**
**குணகர்த்ருத்வே ச ததா கர்தேவ பவத்யுதாஸீன || 20 ||**

புருஷன் சைத்தன்யமுடையவரானதால், அவருடைய சேர்க்கையால் சைத்தன்யமற்றதும், புத்தி முதலியவை, சைத்தன்யமுடையது போல தோன்றுகின்றது. அதுபோல, குணங்களின் செயல் மட்டுமே இருந்தபோதிலும் புருஷனானவர் உதாசீனரானாலும், செய்பவர் போன்று ஆகின்றார்.

**பாஷ்யம்**

கர்த்தா அல்லாதவனான புருஷன் எங்ஙனம் நான் அறிகின்றேன் முதலிய ஞானத்தை அடைகின்றான். நான் தர்மம் செய்கின்றேன் முதலிய செயல்களால் அந்த செயல் செய்பவனாக அந்த புருஷன் எங்ஙனம் இருக்கின்றான், கர்த்தாவாகவும், கர்த்தா அல்லாதவனாகவும் புருஷன் இருக்க முடியாது என்ற நிலையில் இங்கு புருஷன் சைத்தன்யம் உடையவன் அந்த சைத்தன்யத்துடன் கூட இருப்பதால் (சேர்ந்து இருப்பதால்) மகது முதலிய **லீனம்** அடையும் தன்மை உடையவை சேத்தனத்தை உடையது போல் ஆகின்றது. எப்படி இந்த உலகத்திலும் பானையானது குளிர்ந்த நிலையில் உள்ள பொருட்களுடன் சேர்ந்து குளிர்மையாகவிம் சூடு கூடிய பொருட்களுடன் சேர்ந்து சூடாகவும் ஆகிறதோ, அப்படி மகத் முதலியவைக்கு லீனம் அடையும் தன்மை உடையவை. அந்த புருஷனது சேர்க்கையால் சைத்தன்யம் உடையதுபோல் ஆகிறது. அதனால்

குணங்கள் இந்த தானத்தினை செய்கின்றேன். தர்மம் செய்வேன், அதர்மம் செய்தேன் என்ற ஞானத்தினை அடைகின்றது. புருஷன் இல்லை. உலகத்தில் புருஷனே செய்பவனாகவும் செல்லுதல் போன்ற செயல்களில் இருப்பது காணப்படுகிறது என்றாலும் புருஷனானவன் கர்த்தா இல்லை. அது எப்படி முடியும் என்றால் குணங்கள் அதனுடைய சேர்க்கையால் கர்த்தாவாக இருந்த போதிலும் புருஷனானவன் உதாசினனாக இருந்த நிலையில் கர்த்தாவை போல இருக்கின்றான். கர்த்தா ஆவது இல்லை. எப்படி திருட்டுக்கூட்டத்துடன் பிடிபட்ட ஒருவன் திருடன் என்றே அறியப்படுகின்றானோ அப்படி மூன்று குணங்களானது செயல்பட்டு இருப்பதாலும் சேர்க்கையில் இருப்பதாலும் புருஷனானவன் கர்த்தாவாக ஏற்கப்படுகின்றான். இதனால் வியக்தம், அவ்வியக்தம் மற்றும் ஞ இவைகளுடைய பிரிவானது விளக்கப்பட்டது. இதனை அறிந்தால் மோக்ஷம் என்று முன்பு கூறப்பட்டது.

இந்த பிருக்கிருதியுடன் புருஷனும் எதனால் ஏற்பட்டது என்றால்.

**पुरुषस्य दर्शनार्थं कैवल्यार्थं तथा प्रधानस्य।**
**पङ्ग्वन्धवदुभयोरपि संयोगस्तत्कृतः सर्गः।।२१।।**

**புருஷஸ்ய தர்ஸனார்தம் கைவல்யார்தம் ததா ப்ரதானஸ்ய |**
**பங்கஙவந்தவது பயோரபி சம்யோகஸ்தத்க்ருத : ஸர்க: || 21 ||**

புருஷனானவர் அனுபவிப்பதற்க்கும் பிரதானத்தின் மோக்ஷத்திற்க்கும் (பிரதானத்திலிருந்து, சம்பந்தத்திலிருந்து) இவை (பிரதான, புருஷன்) யின் சேர்க்கையானது முடவன் குருடனின் சேர்க்கயைப்போல ஆகும்.

**பாஷ்யம்**

புருஷனானவன் இந்த பிரதானத்துடன் சேர்வது அதன் **தர்சணத்திற்காக** மகது முதலிய காரியங்கள் தொடங்கி பூத சிருஷ்டி வரை இந்த பிருக்கிருதியானது புருஷன் காணவேண்டும் என்று உருவாகின்றது. பிரதானமும் புருஷனுடன் சேர்வது கைவல்லியத்திற்காக (மோட்க்ஷத்தின்) இந்த **சையோகம்** ( சேர்க்கை) எப்படி ஒரு குருடனும், முடவனும் தனியாக சென்றால் பல கஷ்டங்கள் (இன்னல்கள்) அடைய வேண்டி இருக்கும். இவர்கள் தன்னுடைய சொந்தக்காரர்களினால் விலக்கப்பட்டு தனியாக இருக்கும் நிலையில் வேறு ஒரு கிராமம் செல்லும் ஆசையுடன் இவர்களுடைய சேர்க்கையானது செல்லுதற்கும் தர்சணத்திற்கும் ஆகின்றது. குருடனுடைய தோளில் ஏறி முடவனானவன் வழிகாட்டுவதால் அவர்கள் தங்களுடைய இடத்தை அடைகின்றனர். புருஷன் தர்ஷண சக்தி உடையவனாக இருப்பதால் முடவனைப் போல் எந்த செயலும் செய்யாமல், காண்பவனாக இருக்கின்றான். பிரதானமானது செயல்கூடியவனாக

இருப்பதால் குருடனைப்போல் செயல்படுபவனாக இருக்கின்றது. தர்சனம் செய்பவராக இல்லை. இவர்களுடைய சேர்க்கை குருடன், முடவன் இவர்களுக்கு விரும்பிய இலக்கினை அடைய இந்த சேர்க்கை உதவுகின்றதோ அப்படியே பிரதானம் புருஷனுடைய மோட்சத்தினை உண்டாக்கி அதற்கு பின் நிவிர்த்தி ஆகின்றது. புருஷனும் பிரதானத்தை கண்டபின் மோட்சத்தை அடைகின்றான். இவை இரண்டும் தங்களின் இலக்கினை அடைந்து பிரிகின்றது. இந்த சேர்க்கையினாலேயே சிருஷ்டி ஆனது உண்டாகின்றது. எப்படி ஒரு ஆண், பெண் சேர்க்கையால் குழந்தை உற்பத்தி ஆகின்றதோ அதுபோல பிரதானம் புருஷனுடைய சேர்க்கையினால் இருந்த சிருஷ்டி ஆனது உற்பத்தி ஆகின்றது.

சிருஷ்டி ஆனது எப்படி உற்பத்தி அகின்றது என்றால்.

**प्रकृतेर्महांस्ततोऽहङ्कारस्तस्माद् गणश्च षोडशकः।**
**तस्मादपि षोडशकात्पञ्चभ्यः पञ्च भूतानि।।२२।।**

**ப்ரக்ருதேர்மஹான்ஸ்ததோSஹங்காரஸ்தஸ்மாத் கணஷ்ச ஷோடமக: |**
**தஸ்மாதபி ஷோடஷகாத்பஞ்சப்ய : பஞ்ச பூமதனி || 22 ||**

பிரகிருதியிலிருந்து மஹத் (புத்தி) அதிலிருந்து அஹங்காரம், அதிலிருந்து பதினாரு வகையான சிருஷ்டியும் உண்டாகின்றது, அவைகள் பதினாரிலிருந்தும் ஐந்து தன்மாத்திரைகளும் ஐந்து பூதங்களும் உண்டாகின்றன.

**பாஷ்யம்**

பிருக்கிருதியில் இருந்து எப்படி சிருஷ்டி உண்டாகின்றது என்பதனை விளக்குகின்றது. **பிருக்கிருதி, பிரதானம், பிரம்மம், அவ்வியக்தம், பகுதானாக்கம், மாயா** இவைகள் எல்லாம் ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள். இப்படிப்பட்ட ஞானம் உடையதாக பிருக்கிருத்தில் இருந்து மகத் உற்பத்தி ஆகின்றது. **மகத், புத்தி, ஆசுரி, மதி , கியாதி, ஞானம், பிரக்ஞா** ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள். அந்த மகத்தில் இருந்து அகங்காரம் உற்பத்தி ஆகின்றது. **அகங்காரம் , பூதாதி, வைகிருத்தக, தேஜசக, அபிமானக** ஆகியவை அகங்காரத்தை குறிக்கும் பல சொற்கள். இந்த அகங்காரத்தில் இருந்து இந்த 16 கூட்டங்களானது உண்டாகின்றது. அந்த 16 கூட்டங்களானது 5 தன்மாத்திரைகள், சப்ததன்மாத்திரைகள், ஸ்பர்சதன்மாத்திரைகள், ரூபதன்மாத்திரைகள், ரசதன்மாத்திரை மற்றும் கந்ததன்மாத்திரை அதில் இருந்து 11 இந்திரியங்கள் ஸ்ரோத்தரம், துவக், சக்சுசி, த்வக் மற்றும் கிராணம் (கண், காது, மூக்கு, வாய் மற்றும் உணர்வு (தோல்) )ஆகிய புத்தி இந்திரியம், சொல் முதலிய கர்ம இந்திரியம் . மனம் கர்மம், ஞானம் இரண்டாகவும் (இந்திரியம) காணப்படும் இந்த 16 கூட்டங்களும் அகங்காரத்தில் இருந்து உற்பத்தி ஆகின்றது. அந்த 16 கூட்டத்தில் இருந்து ஐந்து

தன் மாத்திரைகள் இருந்தும் இந்த ஐந்து மகா பூதங்கள் உற்பத்தி ஆகின்றது. சப்ததன்மாத்திரையில் இருந்து ஆகாசம், ஸ்பர்சதன்மாத்திரையில் இருந்து வாயு, ரூபதன்மாத்திரையில் இருந்து நெருப்பு, ரசதன்மாத்திரையில் இருந்து நீர், மற்றும் கந்ததன்மாத்திரையில் இருந்து நிலம் ஆகிய இந்த ஐந்து மகா பூதங்களும் உற்பத்தி ஆகின்றது. || **22** ||

மகத் தத்துவம் அல்லது புத்தி தத்துவம் என்பது என்ன அதன் லக்ஷணம் என்ன என்று அடுத்த சுலோகத்தில் பார்க்கப்படும்.

**अध्यवसायो बुद्धिधर्मो ज्ञानं विराग ऐश्वर्यम्।**
**सात्त्विकमेतद्रूपं तामसमस्माद्विपर्यस्तम्।।२३।।**

**அத்யவஸாயோ புத்தி தர்மோ ஞானம் பிராக ஐஷ்வர்யம் |**
**ஸாத்விகமேதத்ரூபம் தாமஸமஸ்மாத்விபர்யஸ்தம் || 23 ||**

நிச்சயிப்பது புத்தி (லக்ஷணம்), இதில் சாத்விகமான தர்மம், ஞானம், வைராக்யம் மற்றும் ஐஷ்வர்யமும் குணங்களாகும், தாமஸ குணமானது இதற்க்கு எதிரானது.

**பாஷ்யம்**

வியக்தம், அவ்வியக்தம் மற்றம் ஞ இவற்றால் மோட்சம் என்று கூறப்பட்டது இதில் மகத் முதலிய பூதங்கள் வரை உள்ள 23 தத்துவங்களும் வியக்தம் என்று விளக்கப்படடது. அவ்வியக்தமும் அவ்வாறே விளக்கப்பட்டது. புருஷனும் (**அவ்யக்தாத் பரார்தத்துவாத்**) முதலிய காரணத்தினால் வியாக்யானம் செய்யப்பட்டுவிட்டது. இப்படி 25 தத்துவங்களையும் எவர் இந்த மூன்று லோகத்தையும் வியாபித்து இருப்பதாக அறிகின்றாரோ அவர் மோட்சம் அடைந்தவர் ஆவார். இதில் எந்த சந்தேகமும் இல்லை. இது முன்பே சொல்லப்பட்டது. 25 தத்துவங்கள் ஆவது பிருக்கிரத்தி, புருஷன், புத்தி, அகங்காரம் , ஐந்து தன்மாத்திரைகள், 11 இந்திரியங்கள், 5 மகா பூதங்கள் ஆகியவை. பிருக்கிருத்யில் இருந்து மகத் உற்பத்தியாகின்றது என்று பார்த்தோம். அதன் லட்சணம் **அத்யவசாயோ** என்றால் அறியும் தன்மை உள்ளது. ஒரு விதையில் ஒரு மரம் விளையும் தன்மை உள்ளது. இது பானை போன்ற ஞானங்களை பிரித்தறிகின்றது. இது புத்தியின் இலட்சணம். இந்த புத்தியானது 8 அங்கங்கள் சாத்விகமான 4 அங்கம் மற்றும் தாமஸமான 4 அங்கம் என்று அதில் **சாத்விகமான 4 அங்கங்கள் தர்மம், ஞானம், வைராக்யம் மற்றும் ஐஸ்வர்யம் என்பது**. தர்மம் என்பது தயைபுரிவது, தானம் செய்வது இயமம், நியமம் போன்றவற்றை பராமரிப்பது. இயமம், நியமம் ஆகியவை பதஞ்சலியின் யோகசூத்திரத்தில் விளக்கப்பட்டது போல இங்கும் ஏற்கவேண்டும். அகிம்சா,

சத்யம், அஸ்தேயம் , பிரம்மசரியம், அபரிகிரஹம் இவைகள் இயமம் (துன்புருத்தாமை, உண்மை பேசல், திருடாமை, பிரம்மச்சரியம், பிறர் பொருளில் ஆசையின்மை,) நியமம் சுத்தமாக இருப்பது, சந்தோஷமாக இருப்பது, தபஸ் செய்வது , சுவாத்யாயம் செய்வது, சாஸ்திர அத்யாயம் செய்வது, ஈஸ்வரனை வணங்குவது நியமங்கள் . **ஞானம் , பிரகாசம், ஆகமம்** முதலியன ஒரு பொருள்படும் பல சொற்கள். இந்த ஞானமானது இரண்டு வகைப்படும். ஆப்பியன்தரம் , பாஹ்யம் (உள்ஞானம் மற்றும் வெளிஞானம்) இதில் வெளி ஞானம் என்பது **வேதம், சிக்ஷை , கல்பம், வியாக்கரணம், நிருக்தம், ச்சந்தஸ், ஜோதிசம்** முதலிய ஆறு அங்கம் உள்ளது. **புராணம், நியாயம், தர்ம சாஸ்திரங்களும்** ஆகும். உள்ஞானம் என்பது பிருக்கிருத்தி மற்றும் புருஷனுடைய ஞானம் அதாவது இது பிருக்கிருத்தி, சத்துவ, ராஜஸ, தமஸின் சமான அந்தஸ்தை உடையது, புருஷன் குணமற்றவன் வியாபித்து இருப்பவன் சேதனன் முதலியவைகளுடன் கூடியவன் என்று இதில் வெளிஞானத்தினால் மரியாதையும் மதிப்பும் உண்டாகும். உள்ஞானத்தினால் மோட்சம் உண்டாகும். வைராக்கியம் என்பது இரண்டு வகைப்படுகிறது. வெளி மற்றும் உள் என்று. வெளி வைராக்கியமானது பார்க்கும் பொருட்களில் விருப்பமின்மை, பொருள் ஈட்டுதல், காத்தல், அதன் அழிவு முதலிவைகளில் உள்ள தோஷங்களை பார்ப்பதினால் உண்டாகும் விரக்தி. உள்வைராக்கியமானது மோட்சம் அடையும் ஆசை உள்ளவர்களுக்கு உண்டாவது. ஐஸ்வர்யம் என்பது ஈஸ்வரத்தன்மை, அவை எட்டு வகைப்படுகிறது. அவையாவன **அனிமா, மகிமா, லகிமா, ப்ராப்த்தி, ப்ராகாமியம், ஈஸித்துவம், வசித்துவம் மற்றும் எத்தரகாமவசித்துவம்**. ஒவ்வொன்றாக விளக்கமாக காண்போம். அனிமா என்பது மிகமிக சிறியதாக அனுவின் அளவிற்கு சூக்ஷ்மமாக மாறி இந்த உலகத்தில் பிரவிருத்தி செய்வது. மகிமா அதற்கு விபரீதமானது மிகமிக வலிமையாக ஆவது. லகிமா மிகவும் மென்மையானதாகி மகரந்தத்தின் மேலும் இருக்கும் தன்மையை அடைவது. பிராப்த்தி என்பது எங்கும் எப்போதும் எந்த வசியத்தையும் அடையும் தன்மையை ஆசைப்பட்டாலும் அதை அடைவது. ஈஸித்துவம் என்பது இந்த மூன்று உலகத்தினையும் ஆட்சி செய்யும்தன்மை. வசிதுவம என்பது எல்லாவற்றையும் தன்வசமாக்குவது. ஏத்திரகாமவசித்துவம் என்பது மிகவும் வலியதான பிரம்மம்முதல் மிகவும் சிறியமதான பூச்சிவரை (துரும்பு வரை) எங்கு ஆசை உண்டாகின்றதோ அங்கு செல்லுதல், வருதல் முதலிய வியவகாரங்கள் செய்வது. இந்த நான்குமே புத்தியின் சாத்விகமான, குணங்கள் எனப்படுவது. அதாவது, சத்துவம் ஓங்கியிருக்கும் பொழுது, ரஜஸ் மற்றம் தமஸ் அடங்கி இருக்கும் பொழுது புருஷனுக்கு உண்டாகும் புத்தி குணங்கள். ஆனால் தமஸானது ஓங்கி இருக்கும் பொழுது, ரஜஸ் மற்றும் சத்தம் அடங்கி இருக்கும் பொழுது கூறப்பட்டதற்கு விபரீதமாக அந்த புத்தியின் குணங்கள் இருக்கும். அதாவது தர்மத்திற்கு விபரீதமான அந்த புத்தியின் குணங்கள் இருக்கும். அதாவது தர்மத்திற்கு விபரீதமான அதர்மம் வைராக்கியத்திற்கு விபரீதமான அவைராக்கியம் . ஞானத்திற்கு விபரீதமாக அஞ்ஞானம் காணப்படும். இப்படி

சாத்வீகம், தமஸம், புத்தி குணங்கள் எட்டு வகை. அங்கங்கள் உடையதாக புத்தி இருக்கின்றது. || **23** ||

அடுத்தது அகங்காரமான என்ன என்ற விளக்கப்படுகிறது.

**अभिमानोऽहङ्कारस्तस्माद् द्विविधः प्रवर्तते सर्गः।**
**एकादशकश्च गणस्तन्मात्रः पञ्चकस्यैव।।२४।।**

**அபிமானோ ஸங்காரஸ்தஸ்மாத் த்விவித ப்ரவர்ததே ஸர்க |**
**ஏகாதஷகஷ்ச கணஸ்தன்மாத்ர பஞ்சகஸ்யைவ || 24 ||**

அபிமானமானது அஹங்காரம், அதிலிருந்து இரண்டுவகையான சிருஷ்டி உண்டாகின்றது, அது, பதினோரு வகையான இந்திரியமும் (புத்தி இந்திரியம்-5, கர்ம இந்திரியம் -5, மனது-1) தன்மாத்திரையான ஐந்தும்.

**பாஷ்யம்**

புத்தி லக்ஷணத்தை கூறியபிறகு அதிலிருந்து உண்டாகும் அகங்காரமானது கிரம பிராப்த்தியாக விளக்கப்படுகிறது. 11 இந்திரியங்கள் மற்றும் தன் மாத்திரைகள் ஐந்தும் இந்த அகங்காரத்தில் இருந்து உருவாகிறது. 5 ஞானந்திரியம், 5 கர்மேந்திரியம் மற்றும் மனதும், சப்தம், ஸ்பர்ஸம், ரூபம், ரஸம் மற்றும் கந்தம் தன் மாத்திரைகளும் அகங்காரத்திலிருந்து உற்பத்தி ஆகின்றது.
|| **24** ||

இப்படி அகங்காரத்தில் இருந்து இரண்டுவகையான சிருஷ்டிகள் என்ன உண்டாகும் என்றால்

**सात्त्विक एकादशकः प्रवर्तते वैकृतादहङ्कारात्।**
**भूतादेस्तन्मात्रः स तामसस्तैजसादुभयम्।।२५।।**

**ஸாத்விக ஏகாதஷக ப்ரவர்ததே வைக்ருதாதஹங்காரத் |**
**பூதாதேஸ்தன்மாத்ர ஸ தாமஸஸ்தே ஜஸாதுபயம் || 25 ||**

வைகிருதம் எனப்படும் சாத்விகமான அஹங்காரத்திலிருந்து சத்துவ குணம் கூடியதான பதினோரு இந்திரியங்கள் உண்டாகின்றன. பூதாதியான தாமஸமான அஹங்காரத்திலிருந்து ஐந்து தன்மாத்திரைகளும் தாமஸமான குணம் கூடியதாக உண்டாகின்றது, தைஜஸமான ரஜோ குணமான அஹங்காரத்திலிருந்து ரஜோகுணம் கூடியதான இருவகையான சிருஷ்டியும் உண்டாகின்றது.

**பாஷ்யம்**

எப்படி இந்த சிருஷ்டியானது இந்திரியம் மற்றும் தன்மாத்திரைகளை உண்டாக்குகின்றது என்றால் சத்துவத்தினையும் மூடப்பட்டதாக அதாவது சத்துவம் ஓங்கி உள்ளபோது மற்ற ரஜஸ், தமஸ் அடங்கி இருக்கும் பொழுது அந்த சாத்விகமான அகங்காரத்தில் இருந்து எதனை பூர்வ ஆச்சாரியர்கள் **வைக்கிருத்தம்** என்று கூறுகின்றார்களோ அந்த சாத்விகமான அகங்காரத்தில் இருந்து 11 இந்திரியங்களும் உண்டாகிறது. சாத்விகமானது என்பதால் தன்தன் இஷ்டத்திற்கு விஷயங்களில் பிருவிருத்தி செய்யும் சாமர்த்தியம் உடையதாக இருக்கின்றது. பிருவிருத்தி என்பது இங்கு பிரகாசம் செய்யும் பொருளிள் எடுக்க வேண்டும். **பூதாதி** எனப்படும் தாமஸமான அகங்காரத்திலோ அதாவது தமஸ்ஸானது ஓங்கி இருக்கும் பொழுது சத்துவம், ரஜஸ்ஸானது அடங்கி இருக்கும் பொழுது அந்த அகங்காரத்தில் இருந்து பூர்வாச்சாரியர்களாலே கூறப்பட்ட பூதாதி எனப்படும் தமஸ்ஸ அகங்காரத்தில் இருந்து ஐந்து தன்மாத்திரைகளும் உற்பத்தி ஆகின்றது. **தைஜசாதுபயம்** என்று கூறப்பட்டுள்ளது. அதாவது சத்துவமானது மற்றும் தமஸமானது அடங்கி இருக்கும் பொழுது ரஜஸானது ஓங்கி இருக்கும் பொழுது அந்த அகங்காரத்திற்கு தைஜசம் என்று பூர்வாச்சரியாகள் பெயர் கூறுகின்றனர். அப்படிப்பட்ட தைஜசத்தினால் இரண்டு வகை சிருஷ்டியும் உண்டாகிறது. அது எங்ஙனம் என்றால் சாத்வீகமான அகங்காரமும், தமஸான அகங்காரமும் தானே கிரியை ( செயல்) செய்யும் சக்தி இல்லாதது இருப்பதால் அசை தைஜசமான ரஜஸ் அகங்காரத்தின் உதவி கொண்டு 11 இந்திரியங்கள் மற்றும் 5 தன் மாத்திரைகளின் சிருஷ்டியை உண்டு செய்கிறது என்பதால் இந்த ரஜஸின் அகங்காரத்தினால் இரண்டு வகை சிருஷ்டியும் உண்டாகிறது. || **25** ||

புத்தி அல்லது ஞான இந்திரியம் மற்றும் கர்ம இந்திரியமும் எது எது என்றால்

**बुद्धीन्द्रियाणि चक्षुःश्रोत्रघ्राणरसनस्पर्शनकानि।**
**वाक्पाणिपादपायूपस्थान कर्मेन्द्रियाण्याहुः।।२६।।**

**புத்தீந்த்ரியாணி சக்ஷு ஷ்ரோத்ரக்ராணரஸனஸ்பர்ஷனகானி |**
**வாக்பாணி பாதபாயூபஸ்தான் கர்மேந்திரியாண்யாஹு || 26 ||**

கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் த்வக் என்பது புத்தி இந்திரியம் எனப்படுகின்றது, வாக்கு, கை , பாதம், பாயு (குதம்) மற்றும் உபஸ்தம் (மூத்திர இந்திரியம்) ஆகியவை கர்மேந்திரியம் எனப்படுகின்றது.

**பாஷ்யம்**

சாத்வீகமான 11 இந்திரியங்கள் என்று கூறப்பட்டது வைக்கிருத அகங்காரத்தினால் உண்டானவை என்று அவை புத்தி மற்றும் கர்மேந்திரியங்கள் மற்றும் மனது அதில் **புத்திஇந்திரியமானது** கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் தொடு உணர்ச்சி செய்யும் தோல், எதனால் உணர்ச்சியானது அறியப்படுகிறதோ அது ஸபர்ஸன இந்திரியம். அதாவது தோல். இது போலவே மற்றவைகளையும் உணரும் தன்மையை கூறப்பட்டது. **கர்மேந்திரம்** எது என்றால் வாத, பான, பாது, பாயு, உபஸ்கா ஆகியவை ஐந்து எது கர்மத்தை செய்கின்தோ, அது கர்மேந்திரியம், வாயானது பேச்சுத் தொழிலை செய்கின்றது. கையானது கொடுத்தல், வாங்குதல் என்று பலகாரியங்களை செய்கின்றது. கால்கள் நடப்பது முதலியன. பாயுவானது (குதம்) மலம் விசர்ஜனத்தை செய்கின்றது. உபஸ்தம் ஆகிய மூத்திரயிந்திரியமானது ஆனந்தம் மற்றும் பிரஜா உற்பத்தியை செய்கின்றது.
**|| 26 ||**

இந்த பதினொன்று இந்திரியங்களில் பத்தினை கண்டோம். அடுத்ததாக உள்ள மனத்தினை விளக்க அடுத்த சூத்திரத்தைப் பார்ப்போம்.

**उभयात्मकमत्र मनः सङ्कल्पकमिन्द्रियञ्च साधर्म्यात्।**
**गुणपरिणामविशेषान्नानात्त्वं बाह्यभेदाश्च।।२७।।**

**உபயாத்மகமத்ர மன ஸங்கல்பகமிந்த்ரியஞ்ச ஸாதர்ம்யாத் |**
**குணாிமாணமவிஷேஷான்நானாத்வம் பாஹ்யபேதாஷ்ச || 27 ||**

இங்கு, சங்கல்பம் செய்வதானது மனது ஆகும். அது இருவகையான இந்திரியம் ஆகும். குணங்களின் மாற்றத்தின் விசேஷத்தினால் ( காரணத்தால்) அவை பல வகையாகவும், வெளியில் புண்ணிய பாவத்தால் பல வகை விஷயமும் ஆகின்றது.

**பாஷ்யம்**

புத்தியிந்திரம் மற்றும் கர்மேந்திரத்தினை அவைகள் பிரிவுகளாக உள்ள பத்தினையும் விளக்கமாக கண்டபின் பதினொரவதான மனது எப்படிப்பட்டது. அதன் சொரூபம் என்ன என்றால் அந்த இந்திரிய கூட்டங்களின் இரண்டுதன்மை உடையது. அதாவது புத்தியிந்திரத்துடன், புத்தியிந்திரியத்தைப் போலவும் (ஞான இந்திரியங்களின் மூலம் ஞானயிந்திரியங்கள் போலவும் இருப்பது) அது எப்படி என்றால் புத்தியிந்திரியம் ஒரு செயலை செய்வதற்காக அதனைப்பற்றிய விசாரம் செய்கிறது. அதனை கர்மேந்திரியமானது செய்கின்றது. என்பதால் எப்படி மனது இரண்டு வகைப்படுமோ **சங்கல்ப்பம்** செய்யும் தன்மை உடையதாகவும்,

இந்திரியமாக உடைய தன்மை இருப்பதால் இந்திரியங்கள் கூடியதான தர்மங்கள் என்றால் சாத்வீகமான அகங்காரத்தில் இருந்து உண்டாகும். புத்தி மற்றும் கர்மேந்திரியங்கள் மனதுடன் சேர்ந்து உற்பத்தி அகின்றது என்பதால் அது அதன் சமான தர்மம் மனமும், இந்திரியமும் என்று ஏறகப்படுகிறது. அவை விக்கிருதியான அகங்காரத்தில் இருந்து உற்பத்தி ஆவது என்பதால் இந்த மனது எப்படிப்பட்ட எண்ண அலைகளை உடையது என்றால் சங்கல்பம் செய்யும் எண்ண அலைகளை உடையது அதாவது இப்படி செய்யவேண்டும் . இப்படி செய்யக்கூடாது, இப்படி செய்யலாம் என்பன போன்றவை. புத்தி இந்திரியங்களுக்கு சப்தம் போன்றவை விருத்தி, கர்மேந்திரியங்களுக்கு வசனம் முதலியவை. இப்படி ஒவ்வொரு இந்திரியமும் வெவ்வேறு விஷயங்களை கிரகிப்பதாக எப்படி இருக்கின்றது, அவைகளை அவ்வாறு உண்டாக்கியது ஈஸ்வரனா அல்லது தன்னுடைய சுபாவமாவே உண்டானதா என்றால் பிரதான, புத்தி, அகங்காரம் முதலியவை அசாத்தியமானவை, புருஷனும் கருத்தா இல்லை என்று கூறியதால் என்ற கேள்வி எழுந்தால் சாங்கிய மதத்தில் சுபாவம் என்ற ஒரு காரணத்தை ஏற்கின்றனர். **குணப்பரிமானவிசேஷாத்** என்று அதனாலேயே கூறப்படடது . இந்த 11 இந்திரியங்களும், ஸ்பர்ஸம், சப்தம், ரூபம் , கந்தம், ரசம் முதலிய ஐந்தும் வசனம், கொடுத்தல்- வாங்குதல், நடத்தல், மலம் கழிதல், ஆனந்தம் அனுபவித்தல் ஆகிய ஐந்தும் மற்றம் சங்கல்பமானது மனதுகளுடைய காரியங்கள் ஆகிய இவைகள் வெவ்வேறான விஷயங்களை கிரகிக்கும் தன்மை உடைய இந்திரியங்களாக இருப்பதால். இதற்கு காரணம் அவைகளுடைய முக்குணத்தை உடைய மாற்றத்தினால் இந்த பலவகையாக இருப்பதாக காணப்படுகிறது. அது மட்டும் அல்லாமல் வெளிவிஷயங்களில் பிரிவும் காரணம் ஆகும். அதனால் இங்கு ஈஸ்வரனாலேயோ அல்லது அகங்காரத்தினாலேயோ அல்லது புத்தியினாலோ அல்லது பிரதானத்தினாலோ அல்லது புருஷாலேயோ இந்த பலவகைப்பட்டதமாக காணப்படாமல் சுபாவமாகவே இப்படி இருக்கின்றது என்று ஏற்கப்படுகிறது.

குணங்கள் அசேத்தனமானதால் பிருவிருத்தி செய்வது இல்லை. என்று எது கூறப்பட்டதோ அது தவறு. குணங்கள் பிருவிருத்தி செய்யும் எப்படி என்றால் பின்னர் வரும் சுலோகத்தில் பார்ப்போம். (**வத்சவிவிருத்தி நிமித்தம்**) இப்படி அசேதனமான குணங்களும் 11 இந்திரியங்களின் பலத்தில் பிருவிருத்தி செய்கின்றது. அது அதனதன் நிலையில் இருந்தபடி தன்னுடைய வேலைகளையே செய்கின்றது. கர்மேந்திரியங்களும் தன்னுடைய வேலையே சுபாவத்தினாலேயே செய்கின்றது. இது போலவே மற்ற சாஸ்திரத்திலும் **குணா குணேஷு வர்தன்தே** ( குணங்கள் குணங்களில் இருக்கின்றது) என்று குணங்களுடைய எந்த விருத்தியோ அது குணவிஷயமாக இருக்கும். இதனால் வெளி விஷயங்களை குணங்களாலேயே செய்யப்பட்டது என்று அறிய வேண்டும். பிரதானம் இவைக்கு காரணமாக இருப்பவை. **|| 27||**

அடுத்து ஞானேந்திரியம் மற்றும் கர்மேந்திரியமானவைகளை விசேஷமானவையை விளக்க.

**रूपादिषु पञ्चानामालोचनमात्रमिष्यते वृत्तिः।**
**वचनादानविहरणोत्सर्गानन्दाश्च पञ्चानाम्।।२८।।**

**ரூபாதிஷூ பஞ்சானாமாலோசனமாத்ரமிஷ்யதே வ்ருத்தி |**
**வசனாதானவிஹரணோத்ஸர்கானந்தாஷ்ச பஞ்சானாம் || 28 ||**

ஐந்து வகையான சப்தம் முதலிய விஷயத்தில் ஞானம் மட்டுமே செயலாக ஏற்கப்படுகின்றது. ஐந்து கர்மேந்திரியத்திற்க்கும் பேசுதல், ஏற்றல், செல்லுதல், தியாகம் செய்தல் மற்றும் ஆனந்தித்தல் ஆகிய செயல்கள் ஏற்க்கப்படுகின்றது.

**பாஷ்யம்**

இந்திரியங்கள் ஒவ்வொன்றின் விருத்தியானது என்ன என்ற கேள்வி உண்டாகின்றது. **அலோச்சன மாத்திரம்** என்ற மாத்திரம் சொல்லினை உபயோகிக்கின்றனர். அதனுடைய விசேஷமான விருத்தியை கூறுகின்றது மற்ற விசேஷமற்ற பொருளில்லிருந்து அதை வேறுபடுத்தி காண்பிப்பதற்காக **பிக்ஷா மாத்தரம் லப்யதே** ( பிச்சை மாத்திரம் கிடைக்கும்) வேறு ஒன்றும் விசேஷமாக கிடைக்காது என்று கூறுவதைப்போல . கண்களானது ரூபத்தை மட்டுமே அறியும் ரஸத்தினையோ அல்லது சப்தத்தினையோ அறியாது. இது போலவே மற்றவைகளும் இந்த மாத்திரம் என்ற சொல்லிலேயே அறியவேண்டும். கண்கள் ரூபத்தினை, நாக்கு ரசத்தினை, மூக்கு கந்தத்தினை , காதுகள் சப்தத்தை, தோல் உணர்ச்சிகளை அறிவதுபோல் புத்தி இந்திரியங்கள் விஷயங்களை கூறியபின் கர்மேந்திரியங்களின் விஷயத்தினை கூற வாயானது சொல்வதும், கைகளானது கொடுத்தலில் உதவுவதும், கால்களானது நடப்பதிலும், குதமானது கழிக்கப்படும் அனனத்தினை கழிவை மலமாக கழிப்பதிலும், மூத்திர இந்திரமானது பிளைளைபேறு மூலமாக ஆனந்த்தினை கொடுக்கும். || **28**||

அடுத்து மனம், புத்தி , அகங்காரத்தினை விளக்குவதற்கு.

**स्वालक्षण्यं वृत्तिस्त्रयस्य सैषा भवत्यसामान्या।**
**सामान्यकरणवृत्तिः प्राणाद्या वायवः पञ्च।।२६।।**

**ஸ்வாலக்ஷன்யம் வ்ருத்திஸ்த்ரயஸ்ய யைஷா பவத்யஸாமான்யா |**
**ஸாமான்யகரணவ்ருத்தி ப்ராணாத்யா வாயவ பஞ்ச || 29 ||**

மூன்றிற்க்கும் (புத்தி, அஹங்காரம் மற்றும் மனது) தங்களுடைய லக்ஷணத்தில் குறிப்பிட்ட செயல்களே ஏற்க்கப்படுகின்றது. இந்த விருத்தியும் அசாதாரணமாக இந்த கரணங்களின் செயலானது பிராணன் முதலிய ஐந்து வாயு ஆகும்.

**பாஷ்யம்**

புத்தி மற்றும் கர்மேந்திரியங்களின் செயல்களினை சொல்லியபின் புத்தி, அகங்காரம், மற்றும் மனம் இதனுடைய செயல்களை விளக்க **சுய இலட்சண சுபாவம்** அதாவது புத்தி அறிவதில் என்று லட்சணம் கூறப்பட்டது. அதுவே புத்தியின் விருத்தியாகும். அகங்காரத்திற்கு அபிமானமானது கூறப்பட்டது. அதுவே அதன் விருத்தி ஆகும். இப்படி இந்த மூன்றின் விருத்திகளும் இவைகளுடைய விசேஷமான விருத்திகள். சமான்யமான விருத்தியோ ஐந்து ஐந்து வாயுக்களின் பிராணன் முதலிய விருத்தியகள் அதாவது **பிராணன், அபாணன், சமாணன், உதாணன், வியாணன்.** இந்த ஐந்து வாயுக்களும் எல்லா இந்திரியங்களின் நடக்கும் சாமான்யமான விருத்தியே இந்த மூன்றின் விருத்தி, பிராணன் ஆனது மூக்கின் வழியாகவும், வாயின் வழியாகவும் உடம்பினுள் செல்லும் சென்று இந்த உடல் துடிக்க எந்த காற்றானது உபயோகமாக இருக்கின்றதோ அது பிராணன் அது இந்த 13 இந்திரியங்களுக்கும் சாமான்யமான விருத்தி. இந்த பிராணன் ஆனது கூண்டில் அடைப்பட்ட பருந்தினைப் போல எல்லாவற்றினையும் இது ஒன்றே ஆட்டிப்படைப்பதால் அது பிராணன் என்று கூறப்படுகிறது. அபாணன் ஆனது கீழே செல்லும் காற்று ஆகும். ஒரு பொருளினை அது செரிமானம் ஆனவற்றை கீழே கொண்டு செல்லுதல் அபாணனுடைய வேலையாகும். சமானன் ஆனது உடம்பில் நடுபாகத்தில் இருந்து கொண்டு கழிக்கப்பட்ட உணவுகைளின் சக்திகளை சமமாக எடுத்துக்கொண்டு எல்லா இந்திரியங்களுக்கும் கொடுப்பதால் அது சமானன் ஆகிறது. உதாணன் என்பது மேலே கொண்டு செல்லும். அதாவது வயிற்றில் இருந்து தலை வரை எடுத்துச்செல்லும் காற்றினுடைய பெயர் உதானன் ஆகும். வியானன் என்பது எல்லா இடங்களிலும் வியாபித்து இருப்பதால் இதை வியானன் என்கின்றோம். இந்த ஐந்து பிராணன் வரும் அதிர்வானது உண்டாகின்றது. அது அந்த செயலினை செய்வதற்காக சாமான்யமான ஒரு விருத்தி என்று கூறப்படுகின்றது. || **29**||

அப்படிப்பட்ட இந்த ஐந்து வாயுக்களும், கூறப்பட்ட 13 இந்திரியங்களும் சாமான்யமானது விருத்தி என்று கூறப்பட்ட பின்னர் அடுத்த வெளி இந்திரியங்களான பத்தும், மனம், புத்தி , அகங்காரம் ஆகிய இந்த நான்கிற்கும் இந்த செயலானது எப்படி நடக்கும் என்றால்.

**युगपच्चतुष्टयस्य तु वृत्तिः क्रमशश्च तस्य निर्दिष्टा।**
**दृष्टे, तथाप्यदृष्टे त्रयस्य तत्पूर्विका वृत्तिः।।३०।।**

**யுகபச்சதுஷ்டயஸ்ய து வ்ருத்தி க்ரமஷஷ்ச தஸ்ய நிர்திஷ்டா |**
**த்ருஷ்டே ததாப்யத்ருஷ்டே த்ரயஸ்ய தத்பூர்விகா வ்ருத்தி || 30||**

பார்க்கப்படும் விஷயங்களில் அந்த நான்கின் (வெளி இந்திரியம், புத்தி, அஹங்காரம், மனது) செயலானது ஒரே நேரத்திலும், கிரமமாகவும் கூறப்பட்டுள்ளது, அதுபோல பிரத்யக்ஷமாகாத இடங்களிலும் த்ருஷ்ட நிலையைப்போலவே மூன்றின் (புத்தி, அஹங்காரம், மனது) செயலும் ஆகும்.

**பாஷ்யம்**

புத்தி, அகங்காரம் மற்றம் மனதும் 10 இந்திரியங்களும் இதன் சம்பத்தினால் இந்த 4 க்கும் இவைகளுடன் விருத்தியானது ஒவ்வொரு அறியப்பட்ட விஷயத்திலும் ஒரே நேரத்தில் நடக்கும். புத்தி, அகங்காரம் , மனம் மற்றும் கண் ஆனது ஒரே நேரத்தில் ரூபத்தை பார்க்கின்றன. இது கண் போன்றவை முதலாக, புத்தி , அகங்காரம், மனம் மற்றும் நாக்கானது ஒரே நேரத்தில் ரசத்தினை (சுவை) அறிக்கின்றது. இது இனிப்பி, பசப்பு முதலியவைகளாக புத்தி, அகங்காரம், மனம் மற்றும் மூக்கானது சேர்ந்து ஒரே நேரத்தில் வாசனையை நுகர்கின்றது. இது நாற்றம் , வாசனை என்று முதலியவைகளால். அது போலவே காதும், தோல் இந்திரியங்களும் இந்த நான்கிலும் கிரமமாகவும் விருத்தி உண்டாகும். அது எப்படியென்றால் யாரோ ஒருவர் ஒருவழியாக செல்லும் பொழுது தூரத்தில் காணப்படும் ஒரு பொருளினை இது புருஷானா அல்லது தூணா என்று சந்தேகம் வரும் பொழுது அங்கு இருக்கம் லிங்கத்தினைக் கண்டு, அது மரமாக இருந்தால் பறவை இல்லையா என்று, இப்படி அது பறவையாக இருந்தால் மரமாகவும், மரமாக இல்லாது இருந்தால் மனிதனாகவும் தன்னுடைய சந்தேகத்தை நிச்சயித்தது போல அதனால் நிச்சயமான புத்தி உண்டாவது போல், எப்படி இது மனிதன்தான், அல்லது மரம்தான் என்று அகங்காரம் அதை நிச்சியம் செய்கிறது. இப்படி புத்தி, அகங்காரம் ,மனம் கிரகமமாக விருத்தி உண்டாவது காணப்படுகிறது. எப்படி ரூபத்தில் சந்தேகம் ஏற்படுகின்றதோ அதுபோலவே சப்தம் முதலியவைகளிலும் என்று அறிய வேண்டும் திருஷ்ட விஷயத்திலும், அதிருஷ்ட விஷயத்திலும் இப்படியே அதிர்ஷ்டமாக அதாவது இருந்த காலத்தில் அல்லது வரும் காலத்திலும் உள்ள விஷயமானது புத்தி, அகங்காரம், மனம் மற்றும் கண்களானது ரூபத்தினை அந்த கண்கள் மூலமாகவும் அதாவது கண்களின் உதவியாலேயே , புத்தி, அகங்காரம், மனம் காண்கின்றது. அப்படியே கந்தமும், மூக்கு, ரசம், நாக்கின் மூலமாக காண்கிறது. வர்த்தமானத்திலும் (நிகழ்காலத்திலும்) அது கிரமமாக நடக்கும் என்று விளக்கப்பட்டது. **|| 30 ||**

அடுத்தது இந்த நான்கு வகை காரணங்களும் ஒன்றை ஒன்று எதிர்பார்த்தா அல்லது எதிர்பார்க்காமலேயா ஒரு வேலையில் ஈடுபடுகின்றது என்றால்.

**स्वां स्वां प्रतिपद्यन्ते परस्पराकूतहेतुकां वृत्तिम्।**
**पुरूषार्थ एव हेतुर्न केनचित् कार्यते करणम्।।३१।।**

**ஸ்வாம் ஸ்வாம் ப்ரதிபத்யந்தே பரஸ்பராகூத ஹேதுகாம் வ்ருத்திம் |**
**புருஷார்த ஏவ ஹேதுர்ந கேனசித் கார்யதே கரணம் || 31 ||**

கரணங்களின் பரஸ்பரமான எந்த பெயரோ (லக்ஷணமோ) அப்படியே அதனதன் செயலும் ஆகின்றது. புருஷார்த்தமான போகம் மற்றும் மோக்ஷமே இதன் காரணமாகவும், வேறு சைத்தன்யமான இந்திரியத்தால் செயல்படுவதில்லை.

**பாஷ்யம்**

புத்தி, அகங்காரம், மனம் இவைகள் தங்கள் தங்கள் விருத்தியகளில் கூறப்பட்டபடி அவைகள் செயலில் ஈடுபடுகின்றது. இதன் செயல் எதற்காக என்றால் புருஷனுடைய போகத்திற்காகவும், மோக்ஷத்திற்காகவும் ஆகும். இதனால் ஒவ்வொரு காரணமும் புருஷனுக்காகவே செயலில் ஈடுபடுகின்றது என்று தெளிவாகின்றது. அவைகள் அனைத்தும் எப்படி தானே செயலில் ஈடுபட முடியும் என்றால் புருஷனுக்காகவே மட்டும் இவைகள் செயலில் ஈடுபடுகின்றது. இது புருஷனாலேயோ, ஈஸ்வரனாலேயோ செயலில் ஈடுபடுத்துவது இல்லை என்று அறியப்படவேண்டும். **|| 31 ||**

இந்த காரணங்கள் எத்தனை வகைப்படும், அவைகளின் காரியங்கள் என்ன என்றால்

**करणं त्रयोदशविधं तदाहरणधारणप्रकाशकरम्।**
**कार्यं च तस्य दशधा हार्यं धार्यं प्रकाश्यञ्च।।३२।।**

**கரணம் த்ரயோதஷவிதம் ததாஹரணதா ரணப்காஷகரம் |**
**கார்யம் ச தஸ்ய தஷதா ஹார்யம் தார்யம் ப்ரகாஷ்யஞ்ச || 32 ||**

கரணமான இந்திரியங்கள் பதிமூன்று வகையாகும். அது கிரகித்தல் , தாரணை செய்தல் மற்றும் பிரகாசித்தல் ஆகும். அதன் காரியமானது பத்து வகையாகும். கிரகித்தல், தாரணை செய்தல் மற்றும் பிராகாசித்தல் என்று.

**பாஷ்யம்**

புத்தி முதலிய காரணங்கள் எத்தனை வகை என்றால் காரணம் 13 வகைப்படுகிறது என்று அறியப்பட வேண்டும். மனம் , புத்தி , அகங்காரம் ஆகிய மூன்றும் , 5 ஞானேந்திரியங்கள், 5 கர்மேந்திரியங்கள் என்று 13 வகைப்படுகின்றது. அதனுடைய வேலை என்னவென்றால் **கிரகனம், தாரணம்** கர்மேந்திரியம் செய்கின்றது. ஞானேந்திரியமானது **பிரகாசம்** செய்கின்றது. அவைகளுடைய காரியம் எத்தனை வகைப்படுகிறது என்றால் 10 வகைப்படுகிறது. சப்தம், ஸ்பர்ஸம், ரூபம், ரசம் மற்றம் கந்தம், வசனம், ஆதானம்(கொடுத்தல் வாங்குதல்), செலுத்துதல், மலம் கழித்தல், ஆனந்தத்தை அடைதல் என பத்து வகைகளும் இவைகளுக்கு காரியங்கள், பத்தியிந்திரத்தினால் பிரகாசம் செய்யப்படுபவை கர்மேந்திரியத்தினால் கிரகணம் செய்து தாரணம் செய்கின்றது என்று இதன் காரியங்கள் இந்த 13 வகை காரணங்களும் உள், வெளி என்று இரண்டு வகைப்படுகின்றது. || **32** ||

**अन्तःकरणं त्रिविधं दशधा बाह्यं त्रयस्य विषयाख्यम्।**
**साम्प्रतकालं बाह्यं त्रिकालमीयन्तरं करणम्।।३३।।**

**அந்தக்கரணம் த்ரிவிதம் தஷதா பாஹ்யம் த்ரயஸ்ய விஷயாக்யம் |**
**ஸாம்ப்ரதகாலம் பாஹ்யம் த்ரிகாலமாப்யந்தரம் கரணம் || 33 ||**

அந்தக்கரணம் மூன்று வகை, பத்துவகையாக வெளியில் மூன்றிற்கும் விஷயத்தினை சமர்பித்தலை செய்கின்றது. வெளிகரணமானது நிகழ்காலத்தை மட்டுமே கிரகிக்கின்றது, உள்காரணமானதோ முக்காலத்தையும் (காலத்திலும்)

**பாஷ்யம்**

புத்தி, அகங்காரம், மனம் ஆகிய மூன்றும் **அந்தக்கரணம்** (உள்) என்று சொல்லப்படுகிறது. புத்தி இந்திரியம் 5, கர்மேந்திரியம் 5 ஆகிய 10ம் **பாஹ்யக்கரணம்** ( வெளி) காரணங்கள் ஆகும். இந்த வெளிக்காரணங்கள் 3 அந்த காரணங்களும் விஷயங்களை கொண்டு சென்று கொடுக்கின்றது. இவை நிகழ்கால விஷயங்களை மட்டுமே உரைக்ககூடியது. காதுகள் நிகழ்காலத்தில் நடப்பவைகளை மட்டுமே கிரகிக்கின்றது. எதிர்காலத்தையோ அல்லது இறந்தகாலத்தையோ இவை உணர்வது இல்லை. இப்படியே , கண், தோல்,. மூக்கு, நாக்கு போன்றவைகளும். இப்படி கர்மேந்திரியங்கள் ஐந்தும் நிகழ்காலத்தில் உள்ளதையே செய்கின்றது. கையானது நிகழ்காலத்தில் நடப்பவைகளை மட்டும் செய்கின்றது. எதிர்காலத்தையோ அல்லது இறந்தகாலத்தையோ அது செய்வது இல்லை. அது போலவே கால்கள், குதம், சிறுநீர் கழிப்பது , வாய் போன்றவையும் நிகழ்கால விஷயங்களை மட்டும் செய்து முடிக்கும். இறந்தகால விஷத்தையோ

எதிர்கால விஷயத்தையோ அது கொடுப்பது இல்லை. இப்படி வெளிக்காரணங்கள் நிகழ்காலத்தை மட்டுமே சார்ந்திருப்பதாக கூறப்பட்டது. புத்தி, அகங்காரம், மனமானது அதாவது அந்தகாரனமோ மூன்று காலத்தையுமே அது கிரகிக்கின்றது. புத்தி நிகழ்காலத்தை உடைய பானையை அது உணர்கின்றது. அப்படியே இறந்தகாலத்தையும், எதிர்காலத்தையும் சார்ந்து உள்ளதையும் அது உணர்கின்றது. அகங்காரமும் நிகழ்காலத்தில் உள்ள விஷயங்களை கண்டு அபிமானம் கொள்கின்றது. அப்படியே எதிர்காலத்தையும், இறந்தகாலத்தையும் சார்ந்து இருக்கும். விஷயங்களையும் அது கிரகிக்கும் தன்மை உடையது. அப்படியே மனமும் நிகழ்காலத்தை குறித்த விஷயத்தை அது சங்கல்பம் செய்கின்றது. அது போலவே எதிர்காலத்தையும், இறந்தகாலத்தையும், அது சங்கல்பம் செய்து இயக்கும் ஆற்றலை அடைகின்றது. **|| 33 ||**

இப்படி இந்திரியங்கள் ஞானம், கர்மம், ஆகிய 10 வகைகளும் எந்த எந்த விஷயங்கள் அது கிரகிக்கிறது என்றால்.

**बुद्धीन्द्रियाणि तेषां पञ्च विशेषाविशेषविषयाणि।**
**वाग्भवति शब्दविषया शेषाणि तु पञ्चविषयाणि।।३४।।**

**புத்தீந்த்ரியாணி தேஷாம் பஞ்ச விஷேஷாவிஷேஷவிஷயாணி |**
**வாக்பவதி ஷப்தவிஷயா ஷேஷாணி து பஞ்ச விஷயாணி || 34 ||**

இந்த பத்து வெளி இந்திரியங்களில் ஐந்து புத்தி இந்திரியமானது விசேஷமான (தூல) விஷயத்தையும், அவிசேஷமான (சூக்கும) விஷயத்தையும் கிரகிக்கின்றது. அதில் வாக்கு மட்டுமே சப்தம் எனப்படும் விஷயத்தை கிரகிக்கின்றது, மற்றவையோ ஐந்தும் கூடியதாக (சப்தம் முதலிய) கிரகிக்கின்றது.

**பாஷ்யம்**

இப்படி இந்திரியங்களானது எத்தனை விசேஷம் கூடிய விஷயங்களையும் எத்தனை விசேஷம் அல்லாத விஷயங்களையும் கிரகின்றது என்றால் புத்தி இந்திரியங்கள் அவைகளின் விசேஷம் கூடிய விஷயங்களை கிரகிக்கின்றது. மனுஷர்களுடைய விசேஷமுடைய விஷயமானது சப்தம், ஸ்பர்ஸம், ரசம், ரூபம், மற்றும் கந்தம் ஆகியவை. இவைகளுக்கு உண்டாகும் சுகம், துக்கம், மோகம் ஆகிய விஷயங்களான புத்தி இந்திரியத்தால் பிரகாசப்படுகின்றது. தேவர்களுக்கு துவேஷம் அல்லாத விஷயங்கள் பிரகாசிக்கின்றது. அப்படியே கர்மேந்திரங்களின் இடையில் வாக்கானது சப்த விஷயமானது, தேவர்களுக்கும் மனுஷர்களுக்கும் வாக்கானது பேச்சினை செய்கின்றது. ஸ்லோகம் முதலியவைகளின் உச்சாரணம் செய்வதைப் போல இதனால் தேவர்கள் மற்றும் மனுஷர்களுக்கு வாக் இந்திரியமான ஒரு போலவே உள்ளது. வாக்கினைத் தவிர

கை, கால், குதம், மூத்திர இந்திரியம் முதலியவைகளும் அதன் அதனுடைய விஷயங்களை செய்கின்றது. கைகள் கிரகிக்கின்றது. கால்கள் நடக்கின்றது. குதம் மலத்தை விசர்ஜனம் செய்கின்றது. உபஸ்தம் ஆனந்தத்தை அடைவிக்கின்றது என்று. || **34** ||

அடுத்து இந்த 13 வகைக்களுக்கான இந்திரியங்களை என காரணங்களும் 10 வகை இந்திரியங்கள் பிரதான மற்றதாக, 3 வகைகள் இந்திரியங்கள் (காரணங்கள்) பிரதானம் உள்ளதாகவும், இருப்பது கூறப்படுகிறது.

**सान्तःकरणा बुद्धिः सर्वं विषयमवगाहते यस्मात्।**
**तस्मात् त्रिविधं करणं द्वारि द्वाराणि शेषाणि।।३५।।**

**ஸாந்தகரணம் புத்தி ஸர்வம் விஷயமவகாஹதே யஸ்மாத் |**
**தஸ்மாத் த்ரிவிதம் கரணம் த்வாரி த்வாராணி ஷைஷணி || 35 ||**

எதனால், மனது மற்றும் அஹங்காரமான அந்தக்கரணம் கூடியதான புத்தி எல்லா விஷயத்தையும் அறிகின்றதோ, அதனால் மூன்று வகை கரணங்களும் செயலுடையது மற்றவையோ செயல் ஆகின்றது.

**பாஷ்யம்**

அகங்காரம், மனம் மற்றும் புத்தியானது எதனால் எல்லா விஷயங்களையும் அறிகின்றது ( மூன்று காலத்திலும் சப்தம் முதலிய விஷயங்களை அறிகின்றது) என்பதால் மூன்று வகை காரணங்களும் **துவாரி** அதாவது முக்கியமானது. மற்ற பத்து வகையான ஞான இந்திரியம், கர்மேந்திரியமானது **துவாரம்** முக்கியமற்ற காரணம் என்று அறியவேண்டும் || **35** ||

இதில் கூறப்பட்ட காரணங்களில் எவை எப்படிப்பட்ட குணங்களை கூறியது.

**एते प्रदीपकल्पाः परस्परविलक्षणा गुणाविशेषाः।**
**कृत्स्नं पुरुषस्यार्थं प्रकाश्य बुद्धौ प्रयच्छन्ति।।३६।।**

**ஏதே ப்ரதீபகல்பா பரஸ்பரவிலக்ஷணா குணவிஷேஷா |**
**க்ருத்ஸ்னம் புருஷஸ்யார்தம் ப்ரகாஷ்ய புத்தௌ ப்ரயச்சந்தி || 36 ||**

இவை ஒன்று மற்றொன்றிற்கு வேறானதான விஷயத்தை கிரகிக்கும் குணத்தின் மாற்றமானது, பணிரெண்டும் (கர்ம இந்திரியம்-5, புத்தி இந்திரியம் -5, மனது மற்றும் அஹங்காரம்) முழுவதுமாக விஷயத்தினை பிரகாசித்து புத்திக்கு சமர்பிக்கின்றது.

**பாஷ்யம்**

கூறப்பட்ட காரணங்கள் கூடிய குண விசேஷமானது என்னென்ன விஷயங்கள் கூடியது என்றால் தீபத்தை போன்ற விஷயங்களை பிரகாசிக்கும் தன்மை உடையது. ஒவ்வொன்றுக்கும் மற்றொன்று சமானமற்றதாக தன்மை உடையது. குணத்தினால் அது உண்டானது. இவைகள் எல்லாம் அதாவது புத்தி இந்திரியம், கர்மேந்திரியம், அகங்காரம் , மனம் ஆகியவை எல்லாம் தன்னுடைய செயல்களை செய்து புருஷனுடைய புத்திக்கு அவைகள் காண்பிக்கின்றது. இந்த புத்தியில் இருந்து அந்த புருஷனானவன் சுகம், துக்கம், மற்றும் மோக ரூபமாக அதை அடைகின்றான். || **36** ||

புத்தி மற்றவை காட்டிலும் முக்கியமானதாக இருப்பதற்கு காரணம்.

**सर्वं प्रत्युपभोगं यस्मात् पुरुषस्य साधयति बुद्धिः।**
**सैव च विशिनष्टि पुनः प्रधानपुरुषान्तरं सूक्ष्मम्।।३७।।**

**ஸர்வம்ப்ரத்யுபபோகம் யஸ்மாத் புருஷஸ்ய ஸாதயதி புத்தி |**
**ஸைவ ச விஷிநஷ்டி புன ப்ரதானபுருஷாந்தரம் ஸுக்ஷ்மம் || 37 ||**

எதனால் புத்தியானது எல்லாவற்றையும் (சுகம், துக்கம், மோகம்) அறிகின்றதோ, புருஷனுக்கு அதனை சமர்பிக்கின்றதோ அப்படிப்பட்ட புத்தியே மீண்டும் சூக்குமமான பிரதான புருஷரின் பிரியையும் உண்டு செய்கின்றது.

**பாஷ்யம்**

எல்லா இந்திரியங்களும் உண்டானது முக்காலத்திலும் இந்த புத்தியானது உபயோகம் செய்வதால் அதாவது தேவர்கள், மனுஷர்கள் மற்றும் ஊர்வன, பறப்பன போன்றவைகள் புத்தி இந்திரியத்தின் வழியாக அந்த காரணம் கூடியதான புத்தி எதனால் அடைகின்றதோ அதனால் இது பிரதானம் மற்றும் புருஷன் ஆகியவற்றின் விஷயங்களின் பிரிவினை உண்டாக்குகின்றது. இது பிரதான மற்றும் புருஷனுடைய பேதம் (பிரிவை) அதாவது, புருஷன் பல என்பதால் இது அறியப்படவேண்டும். சூக்சுமான இந்த புத்தி இந்திரியம் தபஸினால் இதை அடையபபெறுகின்றது. இந்த பிருக்கிருத்தி சத்துவம் மற்றும் தமஸ் ஆகியவைகளின் சாம்ய அவஸ்த்தையில் உண்டாவது இந்த புத்தி,

அகங்காரம், இது பஞ்ச தன்மாத்திரை, இவை 11 இந்திரியங்கள், இது பஞ்ச மகாபூதங்கள், இவைகளுடன் வேறாக இருப்பது புருஷன் என்ற இந்த பேதத்தினை இந்த புத்தி போதிக்கின்றது. || **38** ||

எவையினை பிரித்தறிவதால் மோக்க்ஷமானது உண்டாகிறதோ விசேஷ விஷயங்கள் மற்றும் அவ்விசேஷ விஷயங்கள் என்று கூறப்பட்டது என்னென்ன என்றால்.

**तन्मात्राण्यविशेषास्तेभ्यो भूतानि पञ्च पञ्चभ्यः।**
**एते स्मृता विशेषाः शान्ता घोराश्च मूढाश्च।।३८।।**

**தன்மாத்ராண்யவிஷேஷாஸ்தேப்யோ பூதானி பஞ்ச பஞ்சப்ய |**
**ஏதே ஸ்ம்ருதா விஷேஷா ஷாந்தா கோராஷ்ச மூடாஷ்ச || 38 ||**

தன்மாத்திரைகள் சூக்குமமானது அதனிலிருந்து ஐந்து வகையான பூதங்களும் ஸ்தூலமாகும் என்று கூறப்பட்டுள்ளது. இவை சாந்தமாகவும், துக்கம் தருவதாகவும், மோகத்தினை அளிப்பதாகவும் ஆகின்றது.

**பாஷ்யம்**

முன்பு கூறப்பட்ட விசேஷம் மற்றும் அவிசேஷ விஷயங்கள் என்னென்ன என்றால் அவைகளாவன, எதில் இருந்து இந்த தன்மாத்திரைகளும் அகங்காரத்தில் இருந்து உற்பத்தி ஆகின்றதோ சப்ததன்மாத்திரம், ஸ்பர்சதன்மாத்திரம், ரூபதன்மாத்திரம், ரசதன்மாத்திரம் , கந்ததன்மாத்திரம் என்று இவைகள் அவிசேஷ விசயங்கள் என்று கூறப்படுகின்றது. தேவர்களுக்கு இவைகளான சுகமான இலட்சணம் உடையதான விஷயங்கள், துக்கம் மற்றும் மோகம் இல்லாததானது அதில் இருந்து அதாவது பஞ்சதன்மாத்திரைகளில் இருந்து பஞ்சமகாபூதங்களும், பிருத்திவி , நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் முதலியவை உற்பத்தி ஆகின்றது. இவை விசேஷ விஷயங்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது கந்த தன்மாத்திரையில் இருந்து பிருத்திவி, ரச தந்மாத்திரையில் இருந்து நீர், ரூப தன்மாத்திரையில் இருந்து நெருப்பு, ஸ்பர்ச தன்மாத்திரையிலிருந்து வாயு, சப்த தன்மாத்திரையில் இருந்து ஆகாசம், இவைகள் அனைத்தும் ஒவ்வொரு தன்மாத்திரையில் இருந்து உற்பத்தி ஆகும் . மகா பூதங்களாவன விசேஷங்கள் என்று சொல்லப்படுகின்றது. இவை மனுசர்களுக்கு சாந்தமகாவும் அதாவது சுகமாகவும், கோரமாகவும் அதாவது துக்கமாகவும், மூடமாகவும் அதாவது மோகத்தை உண்டு பண்னுவதாக உள்ளது.. ஆகாசமானது எப்பொழுது ஒருவருக்கு அவகாசத்தை உண்டாக்கி, அதாவது காலி இடத்தை உண்டாக்கி, வீடு முதலியவைகளை வருவிக்க இடத்தை கொடுத்து அதனால் சுகம் கூடியதான சாந்தம் கொடுக்கின்றன. அதே ஆகசமானது குளிர் மற்றும் வெப்பம்

கூடியதான மழை கூடியமதாக இருக்கும் பொழுது துக்கம் சேர்ந்து கோரமாக உள்ளது. அதே ஆகாசமனாது வழியில் செல்பவர்களுக்கு ( ஒரு காட்டில் வழிதவறியவர்க்கு) திசை தெரியததால் மோகத்தை விளைவிக்கும் தன்மையை கொடுக்கின்றது. இப்படியே வாயுவும் சாந்தம் , கோரமாகவும், மற்றும் மூடமாகவும் உண்டாக்கின்றது. வாயு அதன் தர்மத்தினை குளிர்ச்சி சாந்தமாகவும் அதாவது சுகமாகவும் , அதிக குளிர்ச்சியின் போது துக்கமாகவும் , அதே வாயுவில் தூசி, துகள்களால் மனிதர்களுக்கு மூடத்தனத்தை உண்டாக்குகின்றது. இப்படியே அக்னி முதலியவைகளும் அறிய வேண்டும். || **38** ||

சாங்கியத்தில் விசேஷமானது மூன்று வகைப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அவையாவன பின் வருபவைகள் என்று சொல்லப்படுகிறது.

**सूक्ष्मा मातापितृजाः सह प्रभूतैस्त्रिधा विशेषाः स्युः।**
**सूक्ष्मास्तेषां नियता मातापितृजा निवर्तन्ते।।३९।।**

**ஸூக்ஷ்மா மாதாபித்ருஜா ஸஹ ப்ரப்ருதைஸ்த்ரிதா விஷேஷா ஸ்யு|**
**ஸூக்ஷ்மாஸ்தேஷாம் நியதா மாதாபித்ருஜா நிவர்தந்தே || 39 ||**

சூக்குமு சரீரமானது (ஸ்தூல தேகத்திலிருந்து) தாய் தந்தையிரிலிருந்து உண்டாகின்றது, மரம் முதலியவையுடன் சேர்ந்ததாக ஸ்தூலமானது மூன்று வகை ஆகும். இவைகளின் இடையில், சூக்குமமானது நித்தியமாகவும், ஸ்தூலமானது அநித்தியமாகவும் ஆகின்றது.

**பாஷ்யம்**

சூக்ஷுமமான தன் மாத்திரைகள் ஆகியவைகளால் உண்டாகும் இந்த சூக்ஷுசுமமான சரீரமானது மகத் முதலிய லிங்கம் கூடியதாக எப்பொழுதும் இருக்கின்றது. சம்சாரத்தையும் செய்கின்றது என்பதால் இவை சூக்ஷுமம். அதோடு தாய் தந்தையினரால் உண்டாகும் இந்த ஸ்தூல சரீரமானது எப்படி ருது காலத்தில் தாய் தந்தை ஆகிய இருவரின் சேர்க்கையால் முட்டை மற்றும் விந்து சேர்க்கையால் உண்டாகும் இந்த உதர சூக்ஷும சரீரம் கூடியதாக இந்த சரீரம் உண்டாகின்றது. இந்த சூக்ஷும சரீரமானது தாய் உண்னும் உணவு வகைகள் ரசங்களினால் தொப்புள் கொடியின் சம்பந்தம் உள்ள குழந்தைக்கு இந்த ரசமான உணவு சென்று அடைகின்றது. அப்படி ஆரம்பித்த இந்த சரீரமானது சூக்ஷும் கூடிய உடல் ஸ்தூலமானது இது மூன்று வகையான விசேஷயங்கள் உடையது. அதாவது மூக்கு, வயிறு, கைகால்கள், தலை முதலிய கூடியதாக உள்ள பஞ்ச பூதங்களின் காரியங்களான ரத்தம், மாமிசம், மஜ்ஜ, விந்து ஆகியவை கூடியதாக ஆகாசத்தினால் அவகாசம் உள்ளதாகவும், காற்றினால் வளர்வதால் நெருப்பினால் பக்குவம் அடைவதால். நீரினால் ஒன்று சேர்வதால் , நிலத்தினால் தாரனை

செய்யப்படுவதால். இவற்றின் ஒவ்வொன்றும் சேர்ந்து எல்லா அவையங்கள் கூடியதாக தாயின் வயிற்றில் இருந்து வெளிவந்து அடைகின்றது. சூக்க்ஷும சரீரமாக உள்ளதாக, அவைகள் எது நித்தியமானது எது அநித்தியமானது என்றால் தூக்க்ஷுமமானது அவைகளில் நித்தியம், எவை அநித்தியம் என்றால் சரீரம் என்பது அதர்மத்தோடு கூடியதால் பசு, மிருகம், பக்க்ஷி, ஊர்வன, புல், பூண்டு வகைகளான இந்த உலகத்தில் பறவி இருக்கின்றது. தர்மங்கள் இருக்கின்ற போது இந்திரனின் சொர்க்கத்தில் சென்று அடைகின்றது. இப்படி கூறப்பட்ட சூக்க்ஷும சரீரமானது சம்சாரத்தை செய்கின்றது. எது வரை ஞானம் உண்டாகவில்லையோ அதுவரை இந்த சரீர துக்கமானது வளர்கிறது. ஞானம் உண்டானபின் இந்த அநித்தியமான ஸ்தூல சரீரத்தை விட்டு மோக்ஷத்தை அடைகின்றது. அதனால் இந்த சூக்க்ஷுமமனாது நித்தியமாகிறது. தூக்க்ஷுமசரீரம் தியாகம் செய்து இந்த பிராணானது எப்பொழுது தியாகம் செய்யப்படுகின்றதோ அப்பொழுது தாய்தந்தையினால் உண்டான இந்த சரீரமும் நிவிருத்தி அடைகின்றது. இங்கேயே அதனதன் பூதங்களில் சென்று லீனம் அடைகிறது. || **39** ||

சூக்க்ஷும சரீரத்தைப் பற்றி அடுத்து விசாரம் செய்யப்படுகின்றது.

**पूर्वोत्पन्नमसक्तं नियतं महदादिसूक्ष्मपर्यनतम्।**
**संसरति निरूपभोगं भावैरधिवासितं लिङ्गम्।।४०।।**

**பூர்வோத்பன்னமஸவதம் நியதம் மஹதாதி ஸுக்ஷ்ம பர்யந்தம் |**
**ஸ்ம்ஸரதி நிருபபோகம் பாவைரதிவாஸிதம் லிங்கம் || 40 ||**

சூக்ஷ்ம சரீரமானது முதன்முதலில் பிரதானத்திலிருந்து உத்பத்தியடைந்தது, அது பரமாணு, பல் முதலியவற்றில் பிரவேசிக்கும் சக்தியுடையது, நித்தியமானதும் ஆகும். மஹத் முதல் சூக்குமமான தன்மாத்திரை வரையில் பல நிலைகளை அடைகின்றது, அது தர்மம் முதலிய எட்டுமுடையதாக போகமல்லாததாக சம்ஸாரத்தினை அடைகின்றது.

**பாஷ்யம்**

சூக்க்ஷுமமானது எப்படி சம்சாரத்தை செய்கின்றது என்றால் லோகமானது உற்பத்தி ஆவதற்கு முன்னால் , பிரதானத்தின் சிருஷ்டி துவங்குவதற்கு முன்பு, சூக்க்ஷும சரீரம் உற்பத்தி ஆகின்றது. அது மட்டும் அல்லாது அது எதனுடன் சேர்வது அல்லாமல் தாழ்ந்த தேவர்கள் மனுஷர்கள் ஆகிய பிறவிகளை அடைவதாகவும், சூக்க்ஷுமமானது ஒரு இடத்திலும் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமல் இந்த சம்சாரத்தினை அது செய்கின்றது. எதுவரை ஞானமானது அடையப்படவில்லையோ அதுவரை அது மோக்க்ஷம் அடையாது. மகத் முதலிய, புத்தி, அகங்காரம், மனது, பஞ்ச தன்மாத்திரைகள் ஆகிய சூக்க்ஷுமமான தன்

மாத்திரைகள் வரை இந்த மூன்று லோகத்தினையும் அவை அடைகின்றது. இந்த சூக்க்ஷும சரீரமானது போம் இல்லாததாக தாய், தந்தையினரால் உண்டான சரீரமானதும் கூடியதாக செயல் மற்றும் தர்மம், அதர்மம் கூடியதாக இது இருப்பதால் போகத்தினை செய்ய சாமர்த்தியம் உடையதாக இருக்கின்றது. தர்மம் முதலிய பாவங்களை அது அனுபவிப்பதாக இருக்கின்றது. பிரளய காலத்தில் மகத் மற்றும் சூக்க்ஷுமமானது வரை எல்லாம் லீனம் அடைகின்றது. அது சம்சாரம் இல்லாததாக இருக்கின்ற அது சிருஷ்டி உண்டாகும் வரை இருக்கும். பிருகிருதியின் மோகத்தினால் பந்தத்தை அடைந்ததாக அது சம்சாரத்தில் உள்ள செயல்களின் சாமர்த்தியம் இல்லாததாக இருக்கின்றது. அது மீண்டும் சிருஷ்டி காலத்தில் சம்சாரத்தினை அடைவதாக இருக்கின்றது. அகங்காரம் மற்றம் 11 இந்திரியங்கள் கூடிய புத்தியானது ஸ்தூல சரீரத்தில் செல்லுதல் வருதல் முதலிய பிரிவை உடையதாக ஏற்கப்படுகின்றது. **|| 40 ||**

இதற்கு என்ன காரணம். இது இப்படி ஏற்கப்படுவதால் சூக்க்ஷும சரீரத்தை ஏற்கப்படுவதற்கு காரணம் என்ன.

**चित्रं यथाश्रयमृते स्थाण्वादिभ्यो विना यथा छाया।**
**तद्वद्विना विशेषैर्न तिष्ठति निराश्रयं लिङ्गम्।।४१**

**சித்ரம் யதாஷ்ரயம்ருதே ஸ்தாண்வாதிப்யோ வினாயதாசாயா |**
**தத்வத்வினா விஷேஷைர்ந திஷ்டதி நிராஷ்ரயம் லிங்கம் || 41 ||**

எப்படி படமானது சுவரில்லாமல் ( சார்ந்திருப்பதில்லாமல்) இருக்காதோ, எப்படி நிழலானது தூண் முதலியவை இல்லாமல் உண்டாகாதோ அப்படியே லிங்கமும் சூக்கும சரீரமில்லாமல் இருத்தல் இயலாது.

**பாஷ்யம்**

கிரியை கூடியதாக இந்த 13 காரணங்களும் சம்சாரத்தை செயலாக ஏற்பதால் இவை எதற்காக எந்த பிரயோஜனத்திற்காக என்று கேட்டால், சித்திரமானது சுவரில்லாமலே இருத்தல் முடியாதோ, சுவரானது அழிந்து போகும் பொழுது சித்திரமானது அழிந்து போவது போல், ஒரு தூண் முதலியவை இல்லாது நிழல் இல்லாதது முடியாதோ, எப்படி குளிர் இல்லாமல் நீர் இருத்தல் முடியாதோ, நீரும் குளிரும் இல்லாது எப்படி இருக்காதோ, நெருப்பானது எப்படி வெப்பம் இல்லாமலும், காற்றானது எப்படி ஸ்பர்சம் இல்லாமலும் இருக்க முடியாதோ அப்படி விஷேசம் இல்லாத தன்மாத்திரைகள் அல்லாது இருத்தல் முடியாது. அதாவது இந்த சரீரம் ஐந்து பூதங்கள் கூடியதாக உள்ளதும் இந்த விசேஷமான சரீரம் இல்லாமல் இந்த சூக்க்ஷுமமான சரீரம் இருத்தல் முடியாது என்பதால் இந்த 13 வகை

இந்திரியங்களும் சூக்க்ஷூம சரீரத்தையே சார்ந்திருப்பதால் சூக்க்ஷூம சரீரமானது ஏற்கப்படுகின்றது. **|| 41 ||**

இந்த சூக்க்ஷூம சரீரம் எதனால் ஏற்கப்படுகின்றது என்றால்.

**पुरुषार्थहेतुकमिदं निमित्तनैमित्तिकप्रसङ्गेन।**
**प्रकृतेर्विभुत्वयोगान्नटवद् व्यवतिष्ठते लिङ्गम्।।४२।।**

**புருஷார்தஹேதுகமிதம் நிமித்தநைமித்திக ப்ரஸங்கேன |**
**ப்ரக்ருதேர்விபுத்வயோகான்நடவத் வ்யவதிஷ்டதே லிங்கம் || 42 ||**

புருஷனுடைய (தன்னுடைய) போக மற்றும் மோக்ஷம் எனும் பிரயோஜனத்திற்க்கு இந்த சூக்குமசரீரமானது நிமித்தம் மற்றும் நைமித்திக காரணத்தால் பிரகிருதி வியாபகமானதால் நடிகரைப்போல சம்ஸாரத்தினை அடைகின்றது.

**பாஷ்யம்**

எதனால் இந்த சூக்க்ஷூமசரீரம் ஏற்கப்படுகின்றது என்றால் இந்த 13 காரணங்களும் அந்த சூக்க்ஷூமத்தினையே சார்ந்திருப்பதனால் அது இல்லாமல் இருத்தல் முடியாது என்பதால். புருஷனுடைய அடையப்படவேண்டிய விஷயங்களை அடைவிக்கவும் இந்த பிரதானமானது பிரவிருத்தி செய்கின்றது. பிருவிருத்தி இரண்டு வகைப்படுகின்றது. ஒன்று சப்தம் முதலியவற்றினை அடைவிப்பதாகவும், இரண்டாவது குணம் முதலியனவற்றை அடைவிப்பதாகவும் இருக்கின்றது. சப்தம் ஆகியவைகள் அடைவிப்பது பிரம்மாதி லோகங்களின் கந்தம் முதலியவற்றை போகமாக அனுபவிக்கக் கூடியது. **குணபுருஷான்தரமானது** மோட்சம் என்ற நிலையை அடைவிப்பது என்பதால் புருஷனுக்காக, புருஷன் அடையப்படுவதை அடைவிப்பதற்காக, இந்த சூக்க்ஷூம சரீரமானது பிரவிருத்திக்கின்றது. இது நிமித்தமாகி, தர்மம் முதலியவைகளும் நைமித்திகமான மேலே செல்லுதல், கீழே செல்லுதல் ஆகியவைகள் கூடியதாகவும் சம்சாரத்தில் ஈடுபடுகின்றது. இந்த பிருகிருதியானது விபுவாக இருப்பதால் எப்படி இராஜாவானவன் தன்னுடைய இராஜ்ஜியத்தில் அவன் அதிகாரம் வியாபித்து இருப்பதால் எங்கு எதனை அவன் ஆசைப்பட்டாலும் அங்கங்கு அதது நடக்கின்றது. அவன் செய்து முடிக்கின்றான். அதுபோலவே பிருக்கிருத்தியானது (இயற்கை) எங்கும் வியாபித்து இருப்பதனால் நிமித்தம் மற்றம் நைமித்தகம் ஆகிய இரண்டுடன் மூலமாகவும் அது வேறுவேறு தேகத்தினை அடைவதற்கான வியவஸ்தையை செய்கின்றது. சூக்க்ஷூமமான இந்த லிங்கமானது பரமணுவில் உண்டான இந்த தூக்க்ஷூம சரீரமானது பதிமூன்று வகை காரணங்கள் கூடிய மனுஷ, தேவ மற்றும் ஊர்வன பிறவிகளை அடைகின்றது. எப்படியென்றால் எவ்வாறு

நடனம் செய்பவர் திரைக்கு பின்னால் மறைந்து தேவனராகவும், விதூஷனனாகவும் வெளியில் தோன்றுகின்றாரோ அவ்வாறு லிங்கமானது நிமித்தம் மற்றும் நைமித்திக்க காரணங்களால் அனுவில் தோன்றி யானை, பெண், ஆண் முதலியதாக ஆகின்றது. || **42** ||

**सांसिद्धिकाश्च भावाः प्राकृतिका वैकृताश्च धर्माद्याः।**
**दृष्टाः करणाश्रयिणः कार्याश्रयणिश्च कललाद्याः।।४३।।**

**ஸாம்ஸித்திகாஷ்ச பாவா ப்ராக்ருதிகா வைக்ருதாஷ்ச தர்மாத்யா |**
**த்ருஷ்டா காரணாஷ்ரயிண கர்யாஷ்ரயிணஷ்ச கலலாத்யா || 43 ||**

தர்மம் முதலிய நிலைகளானது சாம்ஸித்திகமான பிரகிருதியினால் உண்டாவதானதால் சுபாவமானதாகவும், சுபாவமற்றதான அசாம் ஸித்திகம் எனப்படும் வைகிருதம் என்றும் ஆகின்றது, தர்மம் முதலியவை கரணமான புத்தியை சார்ந்திருப்பது என்று காணப்படுவதால், கலலம் முதலிய (குமிழி) காரியமான ஸ்தூல சரீரம் சார்ந்திருப்பதாகவும் ஏற்க்கப்படுகின்றது.

**பாஷ்யம்**

**பாவங்களை** (தன்மைகளை) அடைந்து லிங்கம் சம்சாரம் செய்கின்றது என்று கூறப்பட்டது. அந்த பாவங்கள் யாது என்பது, பாவங்கள் மூன்று விதமாக ஏற்கப்படுகின்றது. **சாம் ஸித்திகம், பிராகிருதம்,, மற்றம் வைகிருதிகம்** என்று சாம்ஸித்திகமானது. **பகவான் கபிலர்** சிருஷ்டியின் துவக்கத்தில் தோன்றும் பொழுது நான்கு பாவங்களுடன் தர்மம், ஞானம், வைராக்கியம் மற்றும் ஐஸ்வர்யம் ஆகியவையுடன் தோன்றினார். பிரகிருதமானது பிரம்மாவுக்கு நான்கு மகன்கள் **சனகர், சனந்தனர், சனாதன மற்றம் சனத்குமாரர்** ஆகியவர்கள் உண்டாயினார்கள். அவர்களுக்கு பதினாறு வயது நிரம்பிய நிலையில் உண்டான சரீரத்தில் இந்த நான்கு வகை **பாவங்களும்** தோன்றியது என்பதால் பிராகிருதம், வைகிருதமானதோ எவ்வாறு ஆச்சாரியரின் கிருபையினால் நமக்கு ஞானம் உண்டாகின்றது . ஞானத்தால் வைராக்கியம் . வைராக்கியத்தால் தர்மம், தர்மத்தினால் ஐஸ்வர்யம் என்று அந்த ஆசாரியனுக்கும் வைகிருதமாகவே உண்டாயிற்று என்பதால் இவை இந்த பாவங்கள் வைகிருதம் என்று கூறப்படுகின்றது. எதனை அடைந்து லிங்கம் சம்சாரத்தினை செய்கினதோ, இந்த நான்கு பாவங்களும், சாத்வீகம், இதற்கு எதிரானது தாமஸம், முன்பே சாத்வீகம் இதன் ரூபம் தாமஸம் இதனிலிருந்து வேறுபாடானது என்று கூறப்பட்டது. இவ்வாறு எட்டுவகை ஆகின்றது. தர்மம், ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம், அதர்மம் , அஞ்ஞானம் , அவைராக்கியம் மற்றம் அனஐஸ்வர்யம் என்ற இவை எட்டு எங்கு இருக்கினறது என்றால் புத்தி என்கிற காரணத்தை சார்ந்திருப்பது ஆகும். இதுவே **அத்யவசாயோ புத்தி தர்ம** என்ற ஸ்லோகத்தில் கூறப்பட்டது. காரியமானது தேகம்

தாய், தந்தையினரால் உண்டானது என்று கூறப்பட்டது. அது முட்டை மற்றம் விந்துவின் பால் வளர்ச்சியை அடைகின்றது. கருவிலிருந்து நீர்குமிழி, அதிலிருந்து மாமிஸம், எலும்பு முதலியவை என்று அதற்கு பின்னர் , கௌமரம், யௌவனம், விருத்தம் முதலிய நிலைகள் உண்னுவதினாலும் , அருந்துவதினாலும் அடைாகின்றது என்பதால் காரியத்தை சார்ந்தது எனப்படுகிறது. உணவு முதலிய போகத்தினால் உண்டாகின்றது. || **43** ||

**धर्मेण गमनूर्ध्वं गमनमधस्ताद् भवत्यधर्मेण।**
**ज्ञानेन चापवर्गो विपर्ययादिष्यते बन्धः।।४४ ।।**

**தர்மேண கமனமூர்த்வம் கமனமதஸ்மாத் பவத்யதர்மேண |**
**ஞானேன சாபவர்கோ விபர்யயாதிஷ்யதே பந்த || 44 ||**

தர்மத்தினால் மேல் நிலையை அடைதலும், அதர்மத்தினால் கீழ்நிலையை அடைதலும் ஞானத்தினால் மோக்ஷமும், அஞ்ஞானத்தால் பந்தமும் ஏற்க்கப்படுகின்றது.

**பாஷ்யம்**

நிமித்தம் நைநிமித்திக பிரசங்கத்தினால் என்று எது முன்பே கூறப்பட்டதோ அது விளக்கப்படுகிறது. தர்மத்தை நிமித்தமாக கொண்டு மேலே செல்லுதல் அதாவது மேலே உள்ள 8 வகையான இடங்களுக்கு செல்லுதல் இவை **பிரம்ம லோகம், பிராஜாபதி லோகம், சோமலோகம், இந்திர லோகம், கந்தர்வ லோகம், யக்ஷ லோகம், ராக்க்ஷ லோகம், பிசாச லோகம்** முதலியவை இந்த சூக்சும சரீரமானது அடைகின்றது. பசு, பக்ஷி, மிருகம், ஊர்வன முதலிய அதர்மத்தினை நிமித்தமாக கொண்டு உண்டாகும் பிறவிகள். ஆனால் வேறு ஒன்றும் இருக்கின்றது. ஞானத்தினால் அதாவது இந்த 25 தத்துவங்களின் ஞானங்களால் அதை நிமித்தமாக கொண்டு மோக்க்ஷமானது உண்டாகின்றது. இந்த மோக்க்ஷமானது உண்டாவதினால் சூக்க்ஷுமசரீரமானது நிவிருத்தி அடைகின்றது. இதுவே பரமாத்மா என்று கூறுகின்றனர். அப்படி ஞானம் அடையாமல் இருந்தால் ஆஞ்ஞானத்தினால் அதை நிமித்தமாக கொண்டு உண்டாவதே இந்த பந்தம் ஆனது. **பிராக்கிருத்தம், வைக்கிருத்தம் மற்றும் தாக்ஷனம்** ஆகிய பந்தம் மேலே விளக்கப்படும். இதுவே சுலோகம் மூலம் கூறப்பட்டது. பிருக்கித்தினால் பந்தம், விக்கிருத்தினால் பந்தம், தக்ஷிணத்தினால் பந்தம் என்று இந்த பந்தத்தினால் கட்டுப்பட்டவர் வேறு எதனினாலும் விடுதலை அடைய முடியாது என்று || **44** ||

**वैराग्यात् प्रकृतिलयः संसारो भवति राजसाद्रागात्।**
**ऐश्वर्यादविघातो विपर्ययात् तद्विपर्यासः।।४५।।**

**வைராக்யாத் ப்ரக்ருதிலய ஸம்ஸாரோ பவதி ராஜஸாத்ராகாத் |**
**ஐஷ்வர்யாதவிகாதோ விபர்யயாத் தத்விபர்யாஸ || 45 ||**

வைராக்கியத்தால் பிரகிருதியில் லயமும் , ராஜஸமான ஆசையால் சம்ஸாரமும், ஐஷ்வர்யாத் ஆசைப்பட்டதையடைய தடையின்மையும், அனைஷ்வர்யத்தால் தடையும் உண்டாகின்றது.

**பாஷ்யம்**

மற்ற வேறு நிமித்தங்களும் இருக்கின்றன. உதாரணத்திற்கு சிலர் வைராக்கியத்தை அடைகின்றனர். தத்துவ ஞானம் அவர்களுக்கு இல்லை. அஞ்ஞானத்தினால் உண்டாகி வைராக்கியத்தினால் பிருக்கிருத்தியில் அவர்கள் லயம் அடைகினறனர். அதாவது இறந்த பிறகு 8 வகையான பிருக்கிருத்திகளிலும், பிரதானபுத்தி, அகங்காரம் மற்றும் தன் மாத்திரைகளின் அவர்கள் லயம் அடைகின்றனர். மோக்ஷம் அடைவது இல்லை. லயத்தில் இருந்து மீண்டும் பிறந்த சம்சாரத்தில் பந்தம் ஏற்படுகின்றனர். அதுபோலவே இந்த ராஜஸமானது ராகத்தினால் நான் யாகம் செய்கின்றேன். நான் தக்ஷினை கொடுகின்றேன். இதனால் நான் விரும்பிய லோகத்தினை அடைவேன். அந்த லோகத்தில் திவ்யமான சுகத்தினை அனுபவிப்பேன். முதலாவதாக ஆசைகொள்வதே ராஜஸத்தால் உண்டாவது. இதனால் சம்சாரம் உண்டாகிறது. இந்த எட்டுவகையான ஐஸ்வர்யங்களான அணிமா. மகிமா முதலியவை முன்பே கூறப்பட்டது. அந்த ஐஸ்வர்யங்களால் அது நிமித்தமாக கொண்டு, **அவிகாந்தம்** உண்டாகின்றது. அவிகாந்தம் என்பது ஆசைப்பட்ட செயல்களை அடைவது முதலியவை. இது ஒரு பந்தமே ஆகும். இதற்கு விபரீதமான விஷயங்களால் அதாவது அனைஸ்வர்யம் முதலியவைகளால் பலவகை தடைகள் உண்டாகின்றது. **|| 45 ||**

பிருக்கிருத்தியின் சிருஷ்டியைப்பற்றி அடுத்து சொல்லப்படுகின்றது.

**एष प्रतययसर्गो विपर्ययाशक्तितुष्टिसिद्धयाख्यः।**
**गुणवैषम्यविमर्दात् तस्य भेदास्तु पञ्चाशत्।।४६।।**

**ஏஷ ப்ரத்யயஸர்கோ விபர்யயாஷக்தி துஷ்டி ஸித்த யாக்ய |**
**குணவைஷம்யவிமர்தாத் தஸ்ய பேதாஸ்து பஞ்சாஷத் || 46 ||**

இந்த பிரத்யய (புத்தி) த்தின் சிருஷ்டியானது விபர்யயம், அசக்தி, துஷ்டி மற்றும் சித்தி என்று நான்கு வகைப்படுகின்றது. குணங்களின் ஏற்றத்தாழ்வினால் இது ஐம்பது வகைப்படுகின்றது.

**பாஷ்யம்**

இப்படி நிமித்தம் மற்றும் நைமித்திக்கம் என்ற 16 வகைகள் விளக்கபட்டது. அது எந்த வகையை சார்ந்து இருக்கிறது என்றால் எப்படி 16 வகையானவை பிரத்தியயத்தின் சிருஷ்டி என்று கூறப்பட்டதோ அதாவது பிரத்தியயம் என்றால் புத்தி என்று கூறப்பட்டது. அந்த **பித்தியய சர்கமானது** 4 வகை படுகின்றது. **விபர்யயம்** (சந்தேகம்) இது ஒரு அஞ்ஞானம் ஆகின்றது. உதாரணத்திற்கு ஒருவர் ஒரு தூணைக் கண்டதும் இது தூணா அல்லது புருஷனா என்ற சந்தேகிக்கினறார். இது விபர்யயம் ஆகும். **அசக்தையர்** என்பது அதே தூணை நன்றாகப்ப பார்த்து அதில் உள்ள உண்டாகம் சந்தேகத்தை தீர்க்க சாமர்த்தியம் இல்லாமல் இருக்கின்றார். இது இரண்டாவது வகை. மூன்றாவது வகையோ அந்த தூணில் அதனை அறியவோ சந்தேகப்படாமலே ஆசைப்படாமல் இதனால் என்ன இலாபம் என்று சிந்தித்தவர் மூன்றாம் வகையான **துஷ்ட்டி** ஆகும். நான்காம் வகையானவர் அங்கு அந்த தூணில் இருக்கும் கொடி முதலியவைகள் கண்டு இது தூணே என்று நிச்சயிப்பது **சித்தி** என்று அழைக்கப்படுகின்றது. இப்படி நான்கு வகையான பிரத்தியங்கள் எண்ண அலைகள் உண்டாகின்றது. இது முக்குணங்களின் வேறுபாட்டால் இவைகள் ஐம்பது வகையாக பிரிகின்றது. **|| 46 ||**

இவை என்னவென்று பார்ப்போம்.

**पञ्च विपर्ययभेदा भवन्त्यशक्तिश्च करणवैकल्यात्।**
**अष्टाविंशतिभेदा तुष्टिर्नवधाऽष्टधा सिद्धिः।।४७।।**

**பஞ்ச விபர்யயபேதா பவந்த்ய ஷக்திஷ்ச கரணவைகல்யாத் |**
**அஷ்டாவிம்ஷதிபேதா துஷங்டிர்நவதாஷ்டதா ஸித்தி || 47 ||**

விபர்யயமானது (தவறான அறிவு) ஐந்து வகைப்படும். கரணங்களின் (இந்திரியத்தின்) குறைபாட்டால், அசக்தியோ பதினெட்டு வகைப்படுகின்றது, துஷ்டி ஒன்பது வகையும் சித்தியானது எட்டு வகையும் ஆகின்றது. (என்று ஐம்பது வகையாகும்).

**பாஷ்யம்**

இந்த ஐம்பது வகைகள் என்னென்னவென்றால் சத்துவமானது உயர்ந்து இருக்கும்பொழுது ரஜஸ் மற்றும் தமஸ் அடங்கி இருக்கும் பொழுது அல்லது ரஜஸ்

உயர்ந்து மற்றவை அடங்கி இருக்கும் போதோ இல்லை தமஸ் ஓங்கி இருந்து மற்றவை தாழ்ந்து இருந்தாலோ இவைகள் **தமம், மோகம், மகாமோகம், தாமிஸ்ரம், மற்றும் அந்ததாமிஸ்ரம்** என்று ஐந்து பேதங்களாக விபர்யத்தின் பேதங்கள் உண்டாகின்றது. இவைகளின் மற்ற பிறவிகளை பின்னால் காண்போம். அசத்தியானது 28 வகையாகின்றது. இதுவும் பின்னால் விளக்கப்படும. துஷ்ட்டி ஒன்பது வகை இதில் வளர்வது சுரோத்தராவர்களுக்கு ரஜஸமயமான பிரிவுகள் உண்டாகின்றது. சித்தியானது எட்டுவகை சாத்விகமான ஞானம். இதுவும் மேல் பிறவியை அடைந்தவர்களுக்கே விபர்யயத்தின் ஐந்து தமம் மோகம் என்று கூறப்பட்டது. || **47** ||

அவைகளின் உட்பிரிவுகளின் சொல்லப்படுகிறது.

**भेदस्तमसोऽष्टविाो मोहस्य च दशविधो महामोहः।**
**तामिसोऽष्टादशाा तथा भवत्यन्धतामिस्रः।।४८।।**

**பேதஸ்தமஸோஷ்டவதா மோஹஸ்ய ச தஷவிதோ மஹாமோஹ |**
**தாமிஸ்ரோஷ்டாதஷதா ததா பவந்த்யந்ததாமிஸ்ர || 48 ||**

தமஸான அவித்தையின் பிரிவானது எட்டு வகையாகும், மோகமானது எட்டு வகைப்படும், மகாமோகமானதோ பத்து வகை, தாமிஸ்ரம் என்பதோ பதினெட்டு வகையாகும் மற்றும் அந்ததாமிஸ்ரமானது பதினெட்டு வகையாகும்.

**பாஷ்யம்**

ஒவ்வொன்றாக பார்ப்போம். தமஸ்ஸானது எட்டுவகை பேதமும் , பிரளம், அஞ்ஞானம் ஆகும். இந்த எட்டம் பிருக்கிருதியில் லயம் அடைகின்றது. அதாவது பிரதானம் புத்தி , அகங்காரம், மற்றும் பஞ்ச தன்மாத்திரைகள் இந்த லயம் அடைந்தவற்றைத்தான் என்று எண்ணி நான் முக்தி அடைந்துவிட்டேன் என்று என்னுவது **முக்திபேதம்** ஆகும். இந்த எட்டுவகை **மோகத்தின்** எங்கு எட்டு குணமான அணிமாதி ஐஸ்வர்யங்கள் இருக்கின்றதோ அவைகளின் சேர்க்கையால் இந்திரன் தேவர்களால் மோக்ஷத்தை அடைவதில்லை. அவை அழிந்ததும் மீண்டும் சம்சாத்தை அடைகின்றனர். இதுவே எட்டுவகையாகும். 10 வகையான மகாமோகமானது சப்தம்,ஸ்பர்சம். ரூபம். கந்தம், ரசம், இவைகள் தேவர்களுக்கு நைந்து விஷயங்கள் சுகத்தினை கொடுப்பதாக இருக்கின்றது. மனிதர்களுக்கும் இதுவே சுகத்தினை கொடுப்பதாக இருக்கின்றது. பத்து வகைகளும் **மகாமோகம்** ஆகும். **தாமிஸ்ரம்** 18 வகைகள், 8 வகை ஐஸ்வர்யம் இந்த பிரத்யக்ஷம், ஆகமம் ஆகிய விஷயங்களானது 10 வகை ஆகும். இப்படி 18 வகையும் அடைந்து சந்தோஷம், துக்கமும் அடைந்ததினால் துக்கமும் இந்த 18 வகைகளான தாமிஸ்ரம் உண்டாகின்றது. தாமிஸ்ரத்தின் 18 வகைக்களைப் போல் **அந்தாமிஸ்ரவரமும்** 18

வகைகளும் ஆகும். ஆனால் இந்த விஷயத்தை அடைந்து அது அனுபவிக்கும் காலத்தில் எவர் இறக்கின்றாரோ அவர் இந்த 8 வகையான ஐஸ்வர்யத்தினால் அவர் பிரஷ்ட்டம் அடைகின்றரோ அவர் அதனால் மிகவும் பயங்கரமான துன்பத்தை அடைகின்றார். இதுவே அந்ததாமிஸ்ரம் ஆகும். **|| 48 ||**

இப்படி விபர்யயத்தின் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியாக காண்போம். அசுத்தியானது இருப்பத்தியெட்டு வகையானது. அவையாவன.

**एकादशेन्द्रियबधाः सह बुद्धिबधैरशक्तिरूदिष्टा।**
**सप्तदश बधा बुद्धेर्विपर्ययात्तुष्टिसिद्धीनाम्।।४६।।**

**ஏகாதஷேந்திரியபதா ஸஹ புத்திபதைரஷக்திருத்திஷ்டா |**
**ஸப்ததம பதா புத்தேர்விபர்யயாத்துஷ்டிஸித்தினாம் || 49 ||**

பதினோரு இந்திரியங்களின் தோஷத்தினால் பதினேழு வகையான புத்தி தோஷமானது உண்டாகின்றது, இது கூடியதாக அசக்தியானது பதினெட்டு வகையென்று கூறப்பட்டது துஷ்டி மற்றும் சித்தியானது விபரீதமானதானதாகும் போது புத்தி தோஷமானது பதினேழு வகையாகும்.

**பாஷ்யம்**

அசுத்தி 11 வகை . இந்தியங்களினால் குளறுபடியால் உண்டாகும் செவிட்டுத்தன்மை, குருட்டுத்தன்மை, கைகளினால் இயலாமை, கால்கள் இயலாமை என்று 10 கர்மேந்திரியமும் மற்றும் ஞானேந்திரியத்தின் தோஷத்தினாலும் மனதின் தோஷத்தினாலும் பைத்தியம் என்ற நிலைமை என்றும் இந்திரியத்தினால் ஏற்படும் தன்மை அசுத்தி ஆகும். இந்த புத்தியினால் பந்தம் அடையப்பட்டவராக இந்த 18 வகையானவைகளில் அகப்பட்டவர்களான பந்தத்தினை அடைகின்றனர். 17 வகைகளான பந்தத்தினை, துஷ்டி சித்தி முதலியவைகளின் விபரீதமான பந்ததத்தினால் துஷ்டி 9 வகை, சித்தி 8 வகை இவைகளின் விபரீதமான பந்தத்தினால் உண்டாவதும் இந்த 17 வகை இந்திரியங்களானவை என்றும் மொத்தம் 28 வகைகள் உடைய அசுத்தி ஆகின்றது. **|| 49 ||**

9 வகையான துஷ்டி விளக்கப்படுகின்றது.

**आध्यात्मिक्यश्चतस्रः प्रकृत्युपादानकालभाग्याख्याः।**
**बाह्या विषयोपरमात् पञ्च नव तुष्टयोऽभिमताः।।५०।।**

**ஆத்யாமிக்யம்சதஸ்ர ப்ரக்ருத்யுபாதான காலபாக்யாக்யா |**
**பாஹ்யா விஷயோகரமாத் பஞ்ச நவ துஷ்டயோபிமதா || 50 ||**

பிரகிருதி, உபாதானம், காலம் மற்றும் பாக்கியம் என்பவையான நான்கும் ஆத்யாத்மிகத்தின் துஷ்டியாகும் . விஷயத்திலிருந்து நிவிருத்தி அடைவதால் சப்தம் முதலிய வெளி விஷயமான துஷ்டியானது என்று மோத்தமாக ஒன்பது வகைப்படுகின்றது துஷ்டி என்று ஏற்க்கப்படுகின்றது.

**பாஷ்யம்**

வேற்றுமையால் என்று கூறப்பட்ட துஷ்டி மற்றும் சித்திகளின் பேதங்களை காணவேண்டும் . துஷ்டியானது 9 வகை என்று கூறப்பட்டது. அத்யாத்மிகத்தில் இருப்பது ஆத்யாத்மீகம். அதில் அவை **பிருக்கிருத்தி, உபாதானம், காலம் மற்றும் பாக்யம்** என்று நான்கு வகைப்படுகின்றது. **பிருக்கிருத்தியானது** எப்படி ஒருவர் பிருக்கிருத்தியை அறிந்து அதில் உள்ள குணமுள்ள தன்மையும், குணமற்ற தன்மையும் அறிந்து அதனால் அந்த தத்துவத்தினால் அதன் காரியத்தினை அறிந்து தனித்து இன்புறுகின்றாரோ அவருக்கு மோக்ஷம் இல்லை. இது பிருக்கிருத்தி வகையை சார்நதது. **உபாதான** வகையானது ஒருவர் அறியாமலேயே தத்துவங்களை கிரகணம் செய்கின்றார். தண்டம், கமண்டலம், மாலைகள் போன்றவை போல இதுவே மோக்ஷம் என்று அவருக்கும் மோக்ஷமானது இல்லை என்று இரண்டாம் வகை. மூன்றாவது. **காலம்** எப்படி ஒருவர் காலத்தினாலே மோக்ஷம் உண்டாகும், ஒரு காலத்தில் மோக்ஷம் உண்டாகும் என்று தத்துவம் அப்யாசம் எதற்கு, தத்துவங்கள் எதற்கு என்று எண்ணுபவர்கள் மூன்றாம் வகையினர், இவர்களுக்கும் மோக்ஷசம் இல்லை. ஏன் என்றால் **பாக்கியத்தினாலேயே** எல்லாம் அடையப்படுகின்றது என்று எண்ணுவதால் இவர்களுக்கும் மோட்சம் இல்லை. இப்படியாவது துஷ்டியானது நான்கு வகை, வெளி விஷயங்கள் அதில் ஈடுபடுவதால் அதாவது ஸ்பர்சம், ரூபம், கந்தம், ரசம், கந்தம் ஆகிய விஷயங்களில் ஈடுபடுவதால் அதனை ஈட்டுவது. அதனை பாதுகாப்பது, அதனை அழிவில் சம்பந்தபடுவது, அதனால் துன்பம் அடைவது முதலிய விஷயங்கள் அதாவது அதன் வளர்ச்சியை வேண்டி வியாபாரம் போன்றவைகளில் ஈடுபடுவது இதனால் துன்பம், ஈட்டிய பொருளை பாதுகாப்பது துன்பம், ஈட்டிய பொருளை அனுபவப்பதினால் அது அழிவதினால் ஏற்படும் ஒரு துன்பம், இந்த விஷயத்தினை அனுபவிப்பதினால் அந்த இந்திரியங்களின் அழிவினால் ஏற்படும் துன்பம், அது அழிவால் விஷயங்களாவது

அடையப்படுவது இல்லை என்பதால் துன்பம் என்று இவைகளின் துன்பத்தை தோஷமாக கண்டறிவதால் இந்த ஐந்து விஷயங்களும் அடங்கிப் போவதால் ஐந்து துஷ்டிகளும் இல்லாமல் போகும். இப்படி அத்யாத்மிக பாக்கியம் என்று இரண்டுவகையாக ஒன்பது வகை துஷ்டிகள் உண்டாகிறது. இது பற்றி வேறு சாஸ்திரங்களாலும் வேறு வேறாக கூறப்படுகின்றது. **அம்பம், சலிலம், மேகம், விருஷட்டி , அகமம், பாரசருத்திரம், நாரிக்கம், அனுதமாம், அம்பசி** முதலியவைகள். இந்த துஷ்டிகளின் விபரீதமான அசத்தி, பேதத்தினாலும் புத்தியானது பந்தத்தினை அடைகின்றது. || **50** ||

அடுத்த எட்டுவகை சித்தி விளக்கப்படுகிறது.

**ऊहः शब्दोऽध्ययनं दुःखविघातास्त्रयः सुहृत्प्राप्तिः।**
**दानं च सिद्धयोऽष्टौ सिद्धेः पूर्वोऽङ्कशस्त्रिविधः।।५१।।**

**ஊஹ ஷப்தோத்யயனம் துக்கவிகாதாஸ்த்ரய ஸீஹ்ருத்ப்ராபதி |**
**தானம் ச ஸித்தயோஷ்டெள ஸித்தே பூர்வோங்கஷஸ்த்ரி || 51 ||**

அத்யயனம் (சாஸ்திர படிப்பு) முதலி சித்தி, சப்தம் (அதனால் உண்டாகும் பொருளின் ஞானம்) இரண்டாவது, ஊஹம் ( தர்க்கம், விசாரம்) மூன்றாவது, சுஹ்ரு (நண்பர்கள்) இடமிருந்து அடையப்பட்டது நான்காவது, தானம் ஐந்தாவது , மூன்று வகையான துன்பத்தினை அழிப்பது என்று எட்டு வகையான சித்திகள் ஆகும். இந்த எட்டு வகையான சித்திகளுக்கும் முன்னர் கூறப்பட்டது தடைகளாகும்.

**<u>பாஷ்யம்</u>** .

**ஊஹம்** என்பது ஒருவர் எப்பொழுதும் தரிசிக்கின்றார். எது உண்மை , எது பொய், எது பரம் , எது எல்லாவற்றிலும் சிரேஷ்ட்டமானது. எதை அடைந்தால் எல்லாம் அடையப்பட்டது ஆகின்றது. என்ன ஆவோம் என்பது முதலான விசாரத்தினை செய்வதினால் உண்டாகின்றது. பிரதானத்தில் இருந்து புருஷனானவன் வேறாகவே இருக்கின்றான். இதில் இருந்து வேறான அது புத்தி, அதில் இருந்து வேறானது அஹங்காரம், அதில் இருந்து வேறானது தன்மாத்திரைகள் , இந்திரியங்கள் முதலியவை. இதலிருந்து வேறானவை பஞ்ச மகா பூதங்கள் என்பவை, இதனால் தத்துவ ஞானமானது உற்பத்தி ஆகின்றது. எதனால் மோக்ஷமானது உண்டாகுமோ இது ஊஹம் என்ற வகையான சித்தி, இரண்டாவது **சப்தத்தினால்** அதாவது பிரதானம், புருஷன், அஹங்காரம், புத்தி, தன்மாத்திரைகள், இந்திரியம், மகாபூதம் முதலியவற்றின் ஞானம் சப்த ஞானத்தினால் உண்டாவது. இதனால் மோக்ஷசம் உண்டாகின்றது. இது இரண்டாவது வகை சித்தியாகும். மூன்றாவது **அத்யயனத்தினால்** அதாவது வேதம், சாஸ்திரங்களை படிப்பதினால் 25 வகை தத்துவங்களின் ஞானம் உண்டாகின்றது.

இதனால் மோக்ஷமானது உண்டாகின்றது. நான்காவது வகையோ ஆத்யாத்மீகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் ஆகிய மூன்றுவகை துன்பத்தினையும் ஆழிப்பதற்காக குருவை அடைந்து அவருடைய உபதேசத்தினால் மோட்சத்தை அடைவது. இது மூன்று வகையா அறிப்படவேண்டும் என்று ஆறு வகை ஆகின்றது. இதனால் மோக்ஷசம அடையப்படுகின்றது. எப்படி ஒருவர் இந்த ஞானத்தினை அடைந்து மோக்ஷத்தை அடைகின்றாரோ இது ஏழாவது வகை சித்தி ஒருவர் பகவானுக்கு என்றால் இந்த மோட்சத்தை அடையவிரும்பும் மும்மூக்ஷுக்களுக்கு தங்க இடம், மருந்து, தண்டம், கமண்டலு கொடுத்து இந்த தானத்தினால் அவர்களிடமிருந்து அதனால் மோக்ஷம் அடைவது . இந்த எட்டுவகையான சித்திகளும் வேறு சாஸ்திரங்களில் வேறு வகையாக கூறப்பட்டிருக்கின்றது. **தாரம்**, சு**தாரம்**, **தாரதார**, **தமோதம்**, **பிரமுதிக்கம்**, **தமோதமாகனம்**, **சம்யக்கம்**, **சகாபிரமுக்தம்** என்று இதன் விபரீதமான நிலையில் புத்தியானது பந்தத்தில் அடைகின்றது. அதாவது **அதாரம், அசுதாரம்** முதலியவை என்று அறிய வேண்டும். அசுத்தி பேதம் 28 வகைகளும் கூறப்பட்டது. அதனால் புத்தி பந்தத்தினை அடைந்து 11 இந்திரியங்களும், பந்தத்தினை அடைந்தது என்று கூறப்பட்டது. துஷ்ட்டியானது ஒன்பது. சித்தியானது எட்டு என்று 17 வகைகள் விபரீதத்தினால் பந்தம் பதினோரு இந்திரியங்களால் ஞான பந்தம் என்று 28 வகைகள் பந்தத்தின் அசுத்த பேதத்தினால் உண்டாகின்றது. சித்தியானது முன்பு கூறப்பட்டது. விபர்யய், சித்தி மற்றும் துஷ்டி ஆகியவைகளுக்கு அங்கு சத்தினைபோல உண்டாகினதை எப்படி ஒரு யானையானது அங்குசத்தினால் அடக்கப்படுகின்றதோ அப்படி விபர்யயம், அசக்தி, துஷ்ட்டி முதலியவைகள் நம்மை பீடிப்பதால் அஞ்ஞானத்தை அடைகின்றோம் . அதனால் இந்த வகைகளை விடுத்து சித்தியை நாம் அடைய வேண்டும் . சித்தியால் தத்துவ ஞானம் உண்டாகின்றது. இந்த தத்துவ ஞானத்தினால் மோக்ஷமானது உண்டாகின்றது.
**|| 51 ||**

**न बिना भावैलिङ्ग न बिना लिङ्गेन भावनिर्वृत्तिः।**
**लिङ्गाख्यो भावाख्यस्तस्माद् द्विविधः प्रवर्त्तते सर्गः।।५२।।**

**ந வினா பாவைர்லிங்கம் நவினா லிங்கேன பாவநிவிருத்தி |**
**லிங்காக்யோ பாவாக்யஸ்தஸ்மாத் த்வித ப்ரவர்ததே ஸர்க || 52 ||**

எட்டு விதமான (தர்மம் முதலிய) பாவம் இல்லாமல் லிங்க சிருஷ்டியானது உண்டாகாது , தன்மாத்திரையான லிங்கசிருஷ்டியானது இல்லாமல் பாவங்களானது தோன்றுவது இயலாது, அதனால், புத்தி சிருஷ்டியும் , லிங்க சிருஷ்டியும் இரண்டு வகையாக தோன்றுகின்றது.

**பாஷ்யம்**

**பாவைரதிவாஸிதம் லிங்கம்** - என்று கூறப்பட்டள்ளது. இங்கு பாவங்களானது தர்மம் முதலிய கூறப்பட்ட புத்தி மாற்றமான 8 விபர்யய, அசத்தி, துஷ்டி, சித்தி ஆகிய மாற்றங்களும் அந்த **பாவாக்கியமானது** ஒரு ஸ்ருஷ்டியாதும் உள்ளதும், லீனம் அடையும் தன்மையானதும் ஆகும். இது பிரத்தியய சிருஷ்ட்டி , தன்மாத்திரை சிருஷ்டியானது , 14 வகையான பூதங்கள் வரை உள்ள விஷயங்கள் என்று கூறப்பட்டது. அது ஒரு சிருஷ்டியினால் மட்டுமே புருஷார்த்தமானது உண்டாகும் போது இரண்டுவகையான சிருஷ்ட்டியானது எதற்காக கூறப்பட்டது என்றால் **பிரத்தியய சர்க்கமானது** இல்லாத லிங்கமான தன்மாத்திரை சர்க்கமானது (சம்பந்தம்) இருத்தல் முடியாது. முன்பு செய்யப்பட்ட ஸம்ஸ்சாரத்தினால், அதன் அதிஷ்ட்டத்தால் உண்டாகும் அடுத்து அடுத்து உண்டாகும் தேகமானது தன்மாத்திரை சர்க்கம் அனாதி ஆனதாலும் இந்த சர்க்கமானது விதை, முளை, இலைபோல ஒன்றை மற்றொன்று அனுசரித்து இருப்பதாலும் இந்த ஆசரிப்பதும் தோஷமாக இருப்பது இல்லை என்பதாலும், அந்த அந்த ஜாதியை சார்ந்து இருந்தாலும் அந்த அந்த வியக்தியானது ஒன்றை மற்றொன்று சார்ந்து இருப்பது இல்லாது இருப்பதால் இந்த பாவாக்கியம் மற்றும் லிங்காக்கியம் என்ற இரண்டு வகை சிருஷ்டியும் உண்டாகின்றது. || **52** ||

**अष्टविकलपो देवैस्त्यैर्यग्योनश्च पञ्चधा भवति।**
**मानुष्यचैकविधः समासतो भौतिकः सर्गः।।५३।।**

**ஆஷ்டாவிகல்போ தேவைஸ்தைர்யக்யோனஷ்ச பஞ்சதா பவதி |**
**மானுஷ்யஷ்சைகவித ஸமாஸதோ பௌதிக ஸர்க || 53 ||**

தேவர்களின் சிருஷ்டியானது எட்டுவகையானது, திர்யகான , ஊர்வன முதலியவை ஐந்து வகையாகவும், மனுஷ்ய ஜாதியானது ஒரு வகையாகவும் இந்த ஸ்தூல சிருஷ்டியானது சுருக்கமாக கூறப்பட்டது.

**பாஷ்யம்**

அதுமட்டுமல்லாது தெய்வ சிருஷ்டியானது எட்டு வகை ஆகும். **பிராமம், பிராஜப்பத்தியம், சௌமியம், ஐந்திரியம், காந்தர்வம், யாக்ஷம், ராஷசம், மற்றம் வைகாச்சம்** என்று எட்டு வகையாகும். பசு, மிருகம், பட்சிவகைகள், ஊர்சன, செடி கொடிகள், பூதங்கள் இப்படி ஐந்து வகையானது **தைர்யக,** மனுஷப்பிறவியோ ஒருவகையாக மட்டுமே இருக்கின்றது என்று இவையே 14 வகையான பூதங்கள்.
|| **53** ||

**ऊर्ध्वं सत्त्वविशालस्तमोविशालश्च मूलतः सर्गः।**
**मध्ये रजोविशालो ब्रह्मादिस्तम्बपर्यन्तः।।५४।।**

**ஊர்த்வம் ஸத்வவிமாலஸ்தமோபிஷாலஷ்ச மூலத ஸர்க |**
**மத்யே ரஜோவிமாலோ ப்ரம்ஹாதி ஸ்தம்பபர்யந்த || 54 ||**

மேலுலகமானது சத்துவம் நிறைந்ததான சிருஷ்டியும், கீழ்லோகமானது தமோகுணம் நிறைந்ததாகவும், பூலோகமானது ரஜோகுணம் நிறைந்ததாகவும் பிரம்மா முதல் சிரு பூச்சி வரையிலான சிருஷ்டி இவ்வகையானது.

**பாஷ்யம்**

இந்த மூன்று உலகத்திலும் முக்குணங்களானது இருக்கின்றது. இதில் எந்த உலகத்தில் எது அதிகமாக இருக்கின்றது என்றால் தேவ உலகமான மேலும் சத்துவ குணமாக ஓங்கி இருப்பதாக தெரிகின்றது. **ஊர்த்வே சத்வம்** என்று கூறப்பட்டுள்ளது. சத்துவ குணம் ஓங்கி இருப்பதாகவும் இருக்கின்றது. பசு முதலிய தாவரம் வகையான எல்லா இருப்புகளிலும் தமஸானது ஓங்கி இருப்பதாக தெரிகின்றது. அங்கும் ரஜஸ் சத்துவம் இருப்பதாகவே இருக்கின்றது. மனுஷ பிறவியிலேயோ ராஜஸ குணமானது ஓங்கி இருக்கின்றது. இங்கும் சத்துவம் , தமஸ் இருக்கின்றது. அதனால் துக்கம் ஆனது முக்கியமானதாக இருப்பதாக இருக்கின்றான். மனிதன் இப்படி பிரம்மா முதல் தாவரம் வரையிலான சிருஷ்டியில் குணங்களின் பிரிவு இந்த பிரதானத்தில் உண்டாக்கப்பட்டது என்று **அபௌத்திக சிருஷ்டி, லிங்க சிருஷ்டி , பாவ சிருஷ்டி, பூத சிருஷ்டி, தெய்வ சிருஷ்டி, மனுஷ சிருஷ்டி, திரியக் சிருஷ்டி** என்று 16 வகையான சிருஷ்டிகள் உண்டாக்கப்பட்டுள்ளன, || 54 ||

**तत्रजरामरणकृतं दुःखं प्राप्नोति चेतनः पुरुषः।**
**लिङ्गस्याविनिवृत्तेस्तस्माद् दुःखं स्वभावेन।।५५।।**

**தத்ர ஜராமரணக்ருதம் துக்கம் ப்ராப்னோதி சேதன புருஷ |**
**லிங்கஸ்யாவினிவ்ருத்தேஸ்தஸ்மாத் துக்கம் ஸ்வபாவேன || 55 ||**

அங்கு (அந்த சிருஷ்டியில்) சூக்கும சரீரமானது நிவிருத்தி அடையாததால் சேதனமான புருஷன் பிறப்பிறப்பினால் உண்டாகும் துன்பத்தினை இயல்பாகவே அடைவார் அதனால் துக்கமானது சுபாவமாகவே இருக்கின்றது ஆகும்.

**பாஷ்யம்**

அங்கு அதாவது தெய்வ, மனுஷ்ய மற்றும் திர்யக் யோனிகளின் பிறவிகளின் வயது, மூப்பும், மரணமும் ஆகிய இவைகளால் உண்டான துன்பம் இந்த சைத்தன்யமான புருஷனானவன் அடைகின்றான். பிரதானமோ, புத்தியோ, அகங்காரமோ, தன்மாத்திரைகளோ, இந்திரியங்களோ அல்லது மகாபூதங்களோ அடைவது இல்லை. எத்தனை காலம் இந்த புருஷனானவன் துக்கத்தை அடைகின்றான் என்றால் மகதாதி லிங்க சரீரம் அடைந்து அங்கு வியக்தமாகியதும் அது எதுவரை நிவர்த்தி அடையாது அதாவது சாக்ஷாத்கார நிலையை, அடைந்ததாக இருக்கின்றதோ, சுருக்கமாக சொன்னால், மூன்று உலகத்திலும் புருஷனானவன் ஜரா(வயதினால்), மரணத்தினால் உண்டாகும் துன்பத்தை அடைகின்றான் லிங்கமானது நிவிருத்தி எதுவரை அடையாது இருக்கின்றதோ அதுவரை லிங்கம் (சூக்ஷும சரீரமானது) நிவிருத்தி அடைந்த நிலையில் மோக்ஷத்தை அடைகின்றது. மோக்ஷமானது அடைந்தால் துக்கமானது இருப்பது இல்லை என்பதால். இது எதனால் , எதிலிருந்து ஆகின்றது என்றால் 25 தத்துவ ஞானம் எப்போது உண்டாகின்றதோ **சத்துவபுருஷ அந்யதாகியாதி** என்ற இலட்சணத்தை உடைய இந்த ஞானமானது. அதாவது இது பிரதானம், இது புத்தி, இது அஹங்காரம், இவை பஞ்ச தன்மாத்திரைகள், இவை 11 இந்திரியங்கள், இது பஞ்ச பூதங்கள் என்னும் இவைகளில் இருந்து வேறுபட்டவன் புருஷன் இவைகளளைப் போல் அல்லாதவன் என்கின்ற ஞானம் உண்டாவதால் லிங்கமான (சூக்ஷும சரீரமானது) நிவிருத்தி அடைகின்றது. அதனால் மோக்ஷமானது உண்டாகின்றது. || **55** ||

**इत्येष प्रकृतिकृतो महदादिविशेषभूतपर्यन्तः।**
**प्रतिपुरुषविमोक्षार्थं स्वार्थ इव परार्थ आरम्भः।।५६।।**

**இத்யேஷ ப்ரக்ருதிக்ருதோ மஹதாதி விஷேஷபூதபர்யந்த |**
**ப்ரதி புருஷவிமோக்ஷாதம் ஸ்வார்த இவ பரார்த ஆரம்ப || 56 ||**

இப்படி மஹத் முதல் ஸ்தூலமான விசேஷ சிருஷ்டி வரையில் லிங்க சிருஷ்டியானது துவங்குகின்றது, இது தனக்காக என்பது போல, ஒவ்வொரு புருஷனின் போகம் மற்றும் மோக்ஷத்திற்க்காக ஆரம்பிக்கின்றது.

**பாஷ்யம்**

பிருகிருதியானது என்ன காரணத்தினால் துவங்குகின்றது என்றால் கூறப்படுகின்றது. அது புருஷனை மோக்ஷத்தை அடைவிப்பதற்காகவும் பிருக்கிருதியால் உண்டான மகத் முதலிய பூதங்கள் வரையலான சிருஷ்டியானது அதாவது பிருக்கிருதியிலிருந்து புத்தி, புத்தியிலிருந்து அஹங்காரம் ,

அஹங்காரத்திலிருந்து பஞ்ச தன்மாத்திரைகள், பஞ்ச தன்மாத்திரைகளில் இருந்து பதினொரு இந்திரியங்கள், தன்மாத்திரைகளில் இருந்து பஞ்ச மகாபூதங்கள் என்று இந்த சிருஷ்ட்டியானது. ஒவ்வொரு புருஷனையும் மோக்ஷம் அடைவிப்பதின் பொருட்டு தெய்வ, மனுஷன், திரியக் பிரிவுகளை அடைந்து ஒவ்வொன்றையும் மோக்ஷத்தினையும் அடையும் பொருட்டு ஆரம்பம் ஆகின்றது. எப்படியென்றால், எப்படி ஒருவர் தன்னுடை சுயநலத்தை விட்டு நண்பன் முதலியவர்களுக்காக அவர்களுடைய செயலை செய்கின்றாரோ அப்படியே பிரதானமானது செய்கின்றது. புருஷனானவன் இங்கு பிரதானத்திற்கு ஒரு கைமாறும் செய்வதில்லை. இந்த செயலை சயநலத்தைப் போன்று சொல்லப்படுகின்றது. பொது நலம் அல்ல. சப்தம் முதலிய விஷயங்களை அடைவித்து குணம் புருஷார்த்தம். அதாவது குணத்தில் இருந்து வேறுபாடானவன் புருஷன் என்கின்ற **உபலப்தியை , பிராப்தியை** . அடைந்தவன். || **56** ||

மூன்று லோகங்களிலும் சப்தம் முதலிய விஷயங்கள் புருஷனுக்கு கொண்டுவந்து கொடுத்து கடைசியில் மோக்ஷத்தையும் கொடுத்து இந்த பிராதனமானது பிருவிருத்திக்கின்றது என்று சொல்லப்பட்டுள்ளது. பானையை போன்று பிரதானம் புருஷாத்தத்தை செய்து நிவர்த்தி அடைகின்றது என்று அடுத்து.

**वत्सविवृद्धिनिमित्तं क्षीरस्य यथा प्रवृत्तिरज्ञस्य।**
**पुरुषविमोक्षनिमित्तं तथा प्रवृत्तिः प्रधानस्य।।५७।।**

**வத்ஸவிவ்ருத்திநிமித்தம் க்ஷீரஸ்ய யதா ப்ரவ்ருத்திரஜ்ஞஸ்ய |**
**புருஷவிமோக்ஷநிமித்தம் ததா ப்ரவ்ருத்தி ப்ரதானஸ்ய || 57 ||**

அது எவ்வாறென்றால் (கன்று) குட்டி வளர்வதற்க்காக ஜடமான பாலானது எவ்வாறு பிரவிருத்தி ஆகின்றதோ அப்படி புருஷனுடைய மோக்ஷத்திற்க்காக பிரகிருதியின் பிரவிருத்தி உண்டாகின்றது.

**பாஷ்யம்**

**அச்சேதனம்** (சைத்தன்யமற்ற) பிரதானம்மானது சைத்தன்யம் உடைய புருஷனானது என்று கூறப்பட்டுள்ளது. எப்படி மூன்று உலகத்திலிருக்கும் சப்தங்கள் முதலியவைகளை புருஷனுக்கு சமர்பித்து முடிவில் மோக்ஷத்தையும் கொடுத்து இந்த பிரதானமானது சைத்தன்யம் இருப்பதுபோல் பிரவிருத்திக்கின்றது என்றால், உண்மை, ஆனால் அச்சேதனமும் பிரவிருத்தி செய்வதும் காணப்படுகின்றதே நிவிருத்தி செய்வதும் காணப்படுவதே எவ்வாறு என்றால் எப்படி புல் முதலியவைகளை மாடானது உண்டு அதனை பாலாக மாற்றி தன்னுடைய கன்றை வளர்ப்பதற்காக அதனை மாற்றும் காரியத்தை செய்கின்தோ

இந்த கன்றானது வளர்ந்த பின்னர் பால் நிற்கின்றதோ அப்படியே புருஷன் மோக்ஷத்தை அடைய வேண்டி பிரதானமானது பிரவிருத்தி செய்கின்றது.
|| **57** ||

**औत्सुक्यनिवृत्यर्थं यथा क्रियासु प्रवर्त्तते लोकः।**
**पुरुषस्य विमोक्षार्थं प्रवर्त्तते तद्वदव्यक्तमृ।।५८।।**

**ஔத்ஸீக்யவிவ்ருத்யர்தம் யதா க்ரியாஸு ப்ரவர்ததே லோக |**
**புருஷஸ்ய விமோக்ஷார்தம் ப்ரவர்ததே தத்வதவ்யக்தம்** || 58 ||

எப்படி உலகத்தில் ஆசைப்பட்டதை அடைவதற்காக, அதற்குறிய செயலில் பிரவிருத்தி காணப்படுகின்றதோ அப்படி பிரகிருதியானது புருஷனுடைய மோக்ஷத்திற்க்கு பிரவிருத்திக்கின்றது.

**பாஷ்யம்**

அதுமட்டும் அல்லாது எப்படி இந்த உலகத்தில் ஆசைப்பட்ட சுகத்தினை அடைந்தால் அதனை அடைதல் பொருட்டு அதாவது அந்த ஆசையினை அடைதல் பொருட்டு செயலில் ஈடுபடுகின்றனரோ, அப்படி அதனை அடைந்த பின்னர் அந்த செயலில் இருந்து நிவிருத்தி அடைகின்றனரோ அதுபோல சப்தம் முதலிய விஷயங்களை புருஷனுக்கு கொண்டுவந்து கொடுத்து அது மட்டுமல்லாது புருஷன் குணத்திலிருந்து வேறுபட்டவன் என்பதனையும் உணர்த்தி புருஷார்த்தத்தை செய்து இந்த இரண்டில் இருந்தும் பிரதானமானது நிவிருத்தி அடைகின்றது. || **58** ||

**रङ्गस्य दर्शयित्वा निवर्तते नर्तकी यथा नृत्यात्।**
**पुरुषस्य तथाऽऽत्मानं प्रकाश्य विनिवर्तते प्रकृतिः।।५६।।**

**ரங்கஸ்ய தர்ஷயித்வா நிவர்ததே நர்தகி யதா ந்ருத்யாத் |**
**புருஷஸ்ய ததாத்மானம் ப்ரகாஷ்ய வினிவர்ததே ப்ரக்ருதி** || 59 ||

எப்படி நாட்டியகாரியானவர் அரங்கத்திற்க்கு (தன்னுடைய நாட்டியத்தை) காண்பித்து நிவிருத்தியடைகிறாரோ அப்படியே பிரகிருதி, புருஷனுக்கு தன்னுடைய உண்மை சுவரூபத்தை காண்பித்து நிவிருத்தியடைகிறது.

**பாஷ்யம்**

அதுமட்டுமல்லாது, எப்படி நாட்டியக்காரியானவள் சிருங்காரம் முதலிய ரசங்களும் , சிரிப்பு முதலிய பாவங்களும் கூடியதான பாட்டு, ஆட்டம் கூடியதான நாட்டியத்தை அரங்கத்திற்கு காட்டி செயலை முடித்து நிவிருத்தி ஆகின்றாள் அதுபோலவே பிருக்கிருத்தியும் புருஷனுக்கு தன்னுடைய சொரூபத்தை பிரகாசம் செய்வித்து புத்தி, அஹங்காரம், தன்மாத்திரைகள், இந்திரியங்கள், மகாபூதங்கள், ஆகிய இந்த பிரிவுகள் உடையவளாக இருக்கின்றாள். **|| 59 ||**

**नानाविधैरूपायैरूपकारिण्यनुपकारिणः पुंसः।**
**गुणवत्यगुणस्य सतस्तस्यार्थमपार्थकं चरति।।६०।।**

**நாநாவிதைருபாயைருபகாரிண்யனுபகாரிண பும்ஸ |**
**குணவத்ய குணஸ்ய ஸத தஸ்யார்தமபார்தகம் சரதி || 60 ||**

பிரதியுபகாரமாக எதனையம் செய்யாத புருஷனுக்கு பலவிதமான வழிகளால் போகம் மற்றும் மோக்ஷமான உபகாரத்தை பிரகிருதி செய்கின்றது முக்குணமானதானாலும் குணமற்ற புருஷனுக்கு எந்த பிரதிபலனுமின்றி உதவுகின்றது.

**பாஷ்யம்**

இது நிவிருத்தி அடைவதற்கு யார் அல்லது எது காரணமாகின்றது என்றால் பலவகையான உபயானங்களானது கொண்டு பிரகிருத்தியானது புருஷனுக்கு உபகாரத்தை செய்கின்றது. எந்த ஒரு பலனையும் எதிர்பார்க்காமல் அது எப்படி செய்கின்றது என்றால் தெய்வம் , மனுஷன் மற்றும் திருயக் முதலிய பிறவிகளை அடைந்து சுகம், துக்கம் மற்றும் மோகமான பாவங்களை அடைந்து சப்தம் முதலிய விஷயங்களை அடைந்து இப்படி பலவகையான உபாயங்களால் தன்னுடைய ஆத்மாவை பிரகாசம் செய்வித்து நான் வேறு நீ வேறு என்று காண்பித்து பிரகிருத்தியானது நிவிருத்தி ஆகின்றது. அதனால் அது சுவார்த்தம் மற்றும் பரார்த்தம் உபகாரம் என்றும் எதுவும் எதிர்பார்க்காமல் செயலில் ஈடுபடுகின்றது . அதாவது இந்த செயலை செய்கின்றது . உதாரணத்திற்கு எப்படி பரோபாகரம் செய்பவர் எல்லோருக்கும் உதவி செய்கின்றாரோ தனக்கு எந்த பலனையும் எதிர்பார்க்காமல் இருக்கின்றாரோ அப்படியே பிரகிருத்தியானது புருஷனுக்காக எந்த ஒரு பலனையும் எதிர்பார்க்காமல் செயலை செய்கின்றது. பின்னர் அது கூறப்பட்ட முறையால் தன்னுடைய (புருஷனுடைய) ஆத்மாவை பிரகாசம் செய்து நிவிருத்தி அடைகின்றது. **|| 60 ||**

**प्रकृतेः सुकुमारतरं न किच्चिदस्तीति मे भतिर्भवति।**
**या दृष्टाऽस्मीति पुनर्न दर्शनमुपैति पुरूषस्य ।।६१।।**

**ப்ரக்ருதே ஸிகுமாரதரம் ந கிஞ்சிதஸ்தீதி மே மதிர்பவதி |**
**யா த்ருஷ்டாஸ்மிதி புனர்ன தர்ஷனமுபைதி புருஷஸ்ய || 61 ||**

பிரகிருதியில் நன்றாக இருப்பது என்று ஒன்றும் இல்லை என்று எவருக்கு நிச்சயமானது உண்டாகின்றது. இப்படிப்பட்ட இந்த பிரகிருதியை நான் பார்த்தேன் என்றறிந்து மீண்டும் அதனை காண புருஷன் முடையமாட்டான்.

**பாஷ்யம்**

நிவிருத்தி அடைந்து என்ன செய்கின்றது என்றால், உலகத்தில் பிருகிருதியானது, இருந்த பிருக்கிருதியில் சந்தோஷம் அடையக்கூடிய இனிமையான விஷயங்கள் எதுவும் இல்லை. இருந்ததும் இல்லை, இருக்கப்போவதும் இல்லை என்ற புத்தியானது எப்பொழுது உண்டாகின்றதோ, எதனால் **பரார்த்தம்** (பிறர்காகவே) என்று புத்தி உற்பத்தி ஆகின்றதோ அது எவ்வாறு என்றால் நான் இந்த புருஷனால் காணப்படுகின்றேன் என்று அந்த புருஷனுக்கு மீண்டும் தர்ஷனத்தை கொடுப்பது இல்லை. புருஷனுக்கு அதர்ஷணத்தை அடைவிக்கின்றது என்று பொருள். **சுகுமாரதரம்** அதாவது இனிமையானது என்றால் என்ன, சிலர் ஈஸ்வரனே காரணம் என்கின்றனர் அறியாமையால் இருக்கும் இந்த ஜந்துவானது ஈஸவரன் இல்லாது சுகம், துக்கம் அனுபவிக்கின்றது. ஈஸ்வரனால் தூண்டப்பட்டவர்களைப்போல அவரை அடைந்தவர்கள் சொர்க்கத்தை அடைகின்றனர் அல்லது நரகத்தையோ அவர்கள் அடைகின்றனர். மற்றவர்கள் சுபாவமே என்று கூறுகின்றார்கள். அவர்கள் கூறுகின்றது, எதனால் ஹம்சமானது வெண்மையாக்கப்பட்டது மயிலானது பல நிறங்கள் ஆக்கப்பட்டது. இதற்கு சுபாவமே காரணம் ஆகின்றது. சுபாவத்தினாலேயே ஆக்கப்பட்டதனால், இதற்கு சாங்கியாச்சாரியர்கள் கூறுகின்றனர், குணம் அற்றதனால் ஈஸ்வரனாவை எப்படி குணமுடைய பிரஜைகளை உருவாக்குமுடியும் அல்லது புருஷனால் புருஷனை உண்டு பண்ணுவார் . அவர் குணமற்ற காரணத்தினால் அதனால் பிருக்கிருதியானதே இதற்கு காரணம் என்பது சரியாக இருக்கின்றது. எப்படி வெள்ளை நிறமான நூலினால் நெய்யப்பட்ட துணியானது வெள்ளையாகவே காணப்படுகின்றதோ, கருப்பு நிறத்தில் நெய்யப்பட்டது கருப்பாகவே காணப்படுகின்றதோ, அதுபோல, முக்குணங்கள் கூடிய பிரதானத்தால் உண்டான மூன்று உலகங்களும் முக்குணங்கள் கூடியதாகவே இருக்கின்றது. குணம் எதுவுமில்லாத ஈஸ்வரன் இந்த குணம் கூடிய உலகத்தை உண்டாக்குவது இயலாது. அதனால் புருஷன் ஆனவன் வியாக்கியாக்கப்பட்டான்.

சிலர் காலமே காரணம் என்று கூறுகின்றனர். அவர்கள் கூறுவது 'காலமே இந்த பூதங்களை பக்குவம் செய்கிறது, காலமே இந்த பூதங்களை அழிக்கிறது, காலமே தூங்கிய வரை விழிப்படைய செய்கின்றது, காலமே எல்லாம், காலத்தை கடப்பது என்பது அறிது' என்று வியக்தம், அவ்வியக்தம் மற்றம் புருஷன் ஆகிய மூன்றும் இந்த காலத்திலேயே உட்பட்டதாக இருக்கின்றது. ஆதலில் அதுவே வியக்தமானதும், எல்லா காரியத்தையும் செய்வதாக இருப்பதால் காலத்திற்கும் பிரதானமே காரணம் என்பதாலும் காலமோ, சுபாவமோ காரணமாக இருக்கமுடியாது. அதனால் பிருக்கிருதியே காரணம் ஆகின்றது. இந்த பிருக்கிருதிக்கு வேறு எந்த காரணமும் இல்லை. அதனால் புருஷனுக்கு மீண்டும் தன்னை அது காண்பிப்பது இல்லை. அதனால் பிருக்கிருதியில் இனிமையானது அனுபவிக்க யோக்கியம் உள்ளது ஒன்றும் இல்லை. ஈஸ்வரன் முதலிய காரணம் ஒன்றும் இல்லை என்று எப்பொழுது புத்தியானது உண்டாகின்றது. அதனால் அப்படிப்பட்டவராகவே உலகத்தில் காணப்படுகின்றார். || **61** ||

**तस्मान्न बध्यतेऽद्धा न मुच्यते नापि संसरति कश्चित्।**
**संसरति बध्यते मुच्यते च नानाश्रया प्रकृतिः ।।६२।।**

**தஸ்மான்ன பத்யதேத்தா ந முச்யதே நாபி ஸம்ஸரதி கஷ்சித் |**
**ஸம்ஸரதி பத்யதே முச்யதே ச நாநஷ்ரயா ப்ரக்ருதி || 62 ||**

அதனால் நிச்சயமாக புருஷனானவர் சம்ஸாரத்தையடைதலோ பந்தத்தில் ஈடுபடுவதோ, மோக்ஷம் அடைதலோ இல்லை, பிரகிருதியே பலவகையான விஷயங்களை சார்ந்து உள்ளதாக இருந்து சம்சாரத்தை அடைகிறது, பந்தத்தில் ஈடுபடுகிறதும், மோக்ஷமடைவதும்.

**பாஷ்யம்**

புருஷன் முக்தன், புருஷன் சமசாரி இதில் எது சரி என்று கேட்டால் எதனால் எந்த காரணத்தினால் பிருக்கிருதியே எல்லாவற்றையும் ஆசரயம் செய்து தெய்வ , மனுஷ , திரியக் யோனிகளை (பிறவிகளை) ஆசரயத்தார் போல புத்தி, அகங்காரம், தன்மாத்திரை, இந்திரியம் பூதங்கள் முதிய சொரூபத்தால் பந்தம் செய்கின்றது (முக்தி செய்கின்றது). சம்சாரத்தை அடைகின்றது. அதனால் புருஷனானவன், பந்தமோ, முக்தியோ அல்லது சம்சாரமோ அடைவது இல்லை அதனால் முக்தனானவன் தன்னுடைய சுபாவத்தில் இருப்பதாலும் எல்லா இடத்திலும் வியாபித்து இருப்பதாலும் அவர் எப்படி சம்சாரத்தை அடைபவராக இருப்பார் அடையப்படாததற்கு அடைய முயற்சி செய்வதே சம்சாரம் என்ற பந்தம் புருஷனுக்கு கிடைக்கின்றது. அதனால் புருஷனானவன் முக்தனாகவும், பந்தனாகவும், சம்சாரத்தை அடைவதுமாகவும் பல்வாறு காணப்படுகின்றான் என்பதாலே சம்சாரம் முதலியவை இருப்பதாகவே காணப்படுகின்றது.

புருஷனுடைய அஞ்ஞானத்தினாலேயே இது உண்டாகின்றது. புருஷனுடைய ஞானம் உண்டாவதால் அதாவது புருஷனானவன் தத்துவத்தை அறிவதால் அது விளங்குவதால் அவன் கேவலமாய் (தனித்து) இருப்பதுவும் , சுத்தமாய், முக்தனுமாய் தன்னுடைய இயல்பான சொரூபத்திலேயே நிலைத்து இருப்பதனால் அவன் புருஷனாகின்றான். புருஷனுக்கு பந்தமோ, மோக்ஷமோ இல்லை என்றால் பந்தமில்லை ஆனால் மோக்ஷமில்லை என்றால் பிருகிருதியே ஆத்மாவை பந்தம் செய்கின்றது, முக்தியையும் செய்கின்றது. சூக்க்ஷ்ம சரீரம் தன்மாத்திரை மூன்றுவித காரணம் கூடியதான மூன்றுவிதப் பந்தத்தினால் இவனை கட்டி வைக்கின்றது. இது கூறப்பட்டும் உள்ளது. 'பிருக்கிருதியானல் உண்டான பந்தத்தினாலும், விகிருதியானதினாலும் ஞானத்தினால் ஆனதினாலும் என்று இந்த பந்தமானது வேறு எதனாலும் முக்தியடைய முடியாததாக இருக்கின்றது'. அந்த சூட்க்ஷ்ம சரீரம் தர்மம் அதர்மம் கூடியதாக இருப்பது. **|| 62 ||**

**रूपैः सप्तभिरेव तु बध्नायात्मानमात्मना प्रकृतिः।**
**सैव च पुरूषार्थम्प्रति विमोचयत्येकरूपेण ।।६३।।**

**ரூபை ஸப்தபிரேவ து பத்னாத்யாத்மானமாத்மனா ப்ரக்ருதி |**
**ஸைவ ச புருஷார்தம்ப்ரதி விமோசயத்யேக ரூபேண || 63 ||**

பிரகிருதியானது போகமோக்ஷமான புருஷார்த்தத்திற்க்கு தானே ஏழு வகையான தர்மம் முதலிய ரூபங்களால் தன்னையே பந்தத்படுத்திக் கொள்பதும், அதுவே அதனை அறிவதான வழியாக தன்னையே மோக்ஷமடைவிக்கின்றது.

**பாஷ்யம்**

பிருக்கிருதி பந்தத்தை செய்கின்றது. பிருக்கிருதி முக்தியை செய்கின்றது. பிருக்கிருதி சம்சாரத்தையும் செய்கின்றது என்பது எவ்வாறு, ஏழு வகையான தர்மம் , வைராக்கியம், ஐஸ்வர்யம் , அதர்மம், அஞ்ஞானம் , அவைராக்கியம், அனைஸ்வர்யம் ஆகிய இந்த ஏழு ரூபத்தைனாலும், இது ஏழும் பிருக்கிருதியின் ரூபங்கள். ஆகையால் ஆத்மாவை இது பந்தத்தில் உண்டாக்குகின்றது. ஆத்மாவை இது தானே விடுவிக்கின்றது. புருஷனால் அடையப்படவேண்டியது என்று புருஷார்த்தத்தை அடைவித்து இது விடுதலையையும் தன் நிலையில் இருந்து ஞானரூபத்தினால் செய்கின்றது. **|| 63 ||**

एवं तत्वाभ्यासान्नास्मि न मे नाऽहमित्यपरिशेषम्।
अविपर्ययाद्विशुद्धं केवलमुत्पद्यते ज्ञानम् ।।६४।।

**ஏவம் தத்வாப்யாஸான்னாஸ்மி நமே நாஹமித்யபரிஷேஷம் |**
**அவிபர்யயாத் விஷுத்தம் கேவலமுத்பத்யதே ஞானம் || 64 ||**

இந்த முறையாக தத்துவ அப்பியாசத்தினால் நான் இல்லை , நான் செய்வது இல்லை, நான் அனுபவிப்பவன் இல்லை, என்னில் சம்ஸ்சாரம் இல்லை என்று அறியப்படாதது ஒன்றும் இல்லாத நிலையில் சந்தேகம் இல்லாததால் தூய்மையான மோக்ஷத்தினை தரும் ஞானமானது உண்டாகிறது.

**பாஷ்யம்**

அந்த ஞானமானது எப்படி உண்டாகின்றது என்றால் . இப்படி கூறப்பட்ட கிரமத்திலே 25 தத்துவங்களின் விசாரணையால் அதன் அப்யாசத்தினால் இது புருஷன் , இது பிரகிருதி, இது புத்தி, இது அஹங்காரம், இது இந்திரியங்கள், இது மகாபூதங்கள் என்று புருஷனானவனுக்கு ஞானம் உண்டாகின்றது. இது நான் அல்ல, நான் ஆவதும் அல்ல இப்படி என்று நான் சரீரம் இல்லை, எனக்கு சரீரம் அல்ல எனினும், நான் வேறு, என் சரீரம் வேறு என்றும், இது நான் ஒருபொழுதும் அல்ல என்று தீர்மானமாக அஹங்காரம் அல்லாத சுத்தமான சந்தோஷம் , விபர்யயமான புத்தி இல்லாது தன்னைத்தானே அறிவதான , கேவலம் தான் மட்டும் ஆன நான் வேறு ஒன்றும் அல்லாதது ஆன இந்த மோக்ஷ காரணமான ஞானம் உற்பத்தி ஆகின்றது. அதாவது இந்த 25 தத்துவங்களின் ஞானம் புருஷனுக்கு உற்பத்தி ஆகின்றது. || **64** ||

तेन निवृत्तप्रसवामर्थवशात् सप्तरूपविनिवृत्ताम्।
प्रकृतिं पश्यति पुरूषः प्रेक्षकवदवस्थितः स्वच्छः ।।६५।।

**தேன நிவ்ருத்தப்ரஸவாமர்தவஷாத் ஸப்தரூபவினிவ்ருத்தாம் |**
**ப்ரக்ருதிம் பஷ்யதி புருஷ ப்ரேக்ஷகவத வஸ்தித ஸ்வச்ச || 65 ||**

அதனால் தூய்மையான உதாசீனனைப்போன்று செயலற்ற புருஷன் விவேக்கியாதியால் ஏழுவகை ரூபங்களிலும் நிவிருத்தியடைவதால் போகமோக்ஷமல்லாததான பிரகிருதியை பார்க்கின்றார்.

**பாஷ்யம்**

ஞானம் அடைந்தால் புருஷன் என்ன ஆகின்றான் என்றால் அந்த அதிகமான தன்னைப்பற்றிய ஞானத்தினால் புருஷனானவன் பிரகிருதியை பார்க்கின்றான். எப்படி ஒரு பார்வையாளன் பார்பானோ அது போல இருந்து பார்க்கின்றான்.. எப்படி அரங்கத்தினை பார்பவன் அதில் இருக்கும் நடனக்காரியை பார்கின்றானோ, அப்படி தன்னிலேயே இருந்து கொண்டு தன்நிலையை அடைந்து இந்த புருஷன் பார்க்கின்றான். எப்படி பிரகிருதி என்றால் நிவிருத்தி அடைந்த புத்தி, அஹங்காரம், காரியங்களில் இருந்து நிவிருத்தி அடைந்த இந்த ஏழு வகையான பூதங்களால் கூடியவையான தர்மம் முதலியவைகளினால் கூடிய தான இதனால் பந்தப்பட்டவனாக இருந்து அந்த ஏழுகளில் இருந்து நிவிருத்தி அடைந்தவனாக பிரகிருதியை பார்க்கின்றான். அடைந்ததாக உள்ள பிரகிருதியை பார்க்கின்றான். அடைந்தவனாகவும் அடைந்ததாகவும் உள்ள பிரகிருதியை பார்க்கின்றான். || **65** ||

**दृष्टा मयेत्युपेक्षक एको दृष्टाऽहमित्युपरमत्यन्या।**
**सति संयोगेऽपि तयोः प्रयोजनं नास्ति सर्गस्य ।।६६।।**

**த்ருஷ்டா மயேத்யுபேக்ஷக ஏகோ த்ருஷ்டா ஹமித்யுபரமத்யன்யா |**
**ஸதி ஸம்யோகேபி தயோ ப்ரயோஜனம் நாஸ்தி ஸர்கஸ்ய || 66 ||**

சைத்யன்யமான புருஷனான என்னால் பார்க்கப்பட்டது பிரகிருதி என்று பிரகிருதியை உபேக்ஷிக்கின்றார், பிரகிருதி வேறு, நான்வேறு அதனை நான் முழுமையாக அனுபவித்தவன் ஆகின்றேன் என்று சமாதானம் அடைகிறார். இந்நிலையில் அவைகளின் (பிரகிருதி) புருஷன்) சம்யோகமானது இருந்தாலும் அதனால் எந்த பிரயோஜனமும் இல்லை.

**பாஷ்யம்**

அது மட்டும் அல்லாது அரங்கத்தில் இருப்பவர் ஆகி ஒரு பார்வையாளர் ஆகி இந்த சுத்தமான புருஷன் என்னால் காணப்பட்டது. இந்த பிரகிருத்தி என்று நிவிருத்தி அடைகின்றதோ, அந்த மூன்று உலகங்களும் இந்து பிரகிருத்தியனாலேயே உண்டானது. இதற்கு வேறு எந்த காரணமும் இல்லை. எந்த வகையான பிரிவுகளா என்று பிரகிருத்தி மற்றும் புருஷன் இந்நிலையிருந்து அடைந்தாலும் இரண்டும் வியாகமாகவே இருப்பதால் சம்யோகமானது (சேர்க்கையானது) இருக்கின்றது. இந்த சேர்க்கையால் சிருஷ்டியானது உண்டாவது இல்லை எல்லா இடத்திலும் வியாபித்து இருந்தாலும், பிரகிருதி மற்றும் புருஷனானவன் இந்த சேர்க்கையால் சிருஷ்டிக்கு எந்த பிரயோஜனமும் இல்லை. இது தன்னுடைய செயலை செய்வதாக இருப்பதால். பிரகிருதியானது

இரண்டுவகை பிரயோஜனம் உடையது. சப்தம் முதலிய விஷயங்களை அடைவிப்பதாகவும், குணத்தில் இருந்து வேறான புருஷனை அடைவிப்பதும். இந்த இரண்டு காரியங்களும் முழுமை அடைந்ததாக இருப்பதால் சிருஷ்டி உண்டாவதற்கு எந்த காரணமும் இல்லை எப்படி தானத்தை பெறுதல் வேண்டி ஒரு உத்தம மற்றும் அதம இரண்டு பேருடைய சொத்தும் சுத்தமாக இருந்தாலும், அவர்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லாதது போல் பிரகிருத்தி மற்றும் புருஷன் ஆகியவைகளுக்கு எந்த பிரோயஜனமும் இல்லை. || **66** ||

**सम्यग्ज्ञानाधिगमाद् धर्मादीनामकारणप्राप्तौ।**
**तिष्ठति संस्कारवशात् चक्रभ्रमिवद् धृतशरीरः ।।६७।।**

**ஸம்யக்ஞாதிகமாத் தர்மாதீனாமகாரணப்ராப்தௌ |**
**திஷ்டதி ஸம்ஸ்காரவஸாத் சக்ரப்ரமிவத் த்ருதஷரீர || 67 ||**

தத்துவ ஞானமானது நன்றாக அறியப்பட்டதால் தர்மம் முதலியவை அவசியமற்றது ஆவதால், சம்ஸ்காரத்தால் (புண்ணிய பாவத்தால்) உண்டான சரீரத்தை சக்கிரத்தின் ஓட்டம் போல் (பானை பிடித்து முடிந்த பின்னும்) சரீரத்தை தாங்கியவராக இருக்கிறார்.

**பாஷ்யம்**

புருஷனுக்கு உண்டான ஞானத்தினால் மோக்ஷமானது உண்டாகும் என்றால் எனக்கு ஏன் உண்டாவது இல்லை என்ற கேள்விக்கு சொல்லப்படுகின்றது. 25 தத்துவ ஞானம் உண்டானாலும் சம்ஸ்கார வசத்தினால் சரீரத்தை தாங்கி இருக்கும் யோகியானவர் இருக்கின்றார். எப்படி என்றால் , எப்படி ஒரு பானை பிடிப்பவர் ஆனவர் சக்கரத்தை சுற்றி அது சுற்றும் பொழுது பானையை பிடிக்கின்றார். களிமண்ணை அச்சக்கரத்தில் வைத்து பானையை பிடித்து பின்பு அந்த பானையை சக்கரத்தில் இருந்து அகற்றுகின்றார். அகற்றியபின்பும் அந்த சக்கரமானது சம்ஸ்காரத்தினால் சுற்றிக்கொண்டே இருக்கும். அது உடனே நிற்காது. அதுபோல தத்துவ ஞானமானது உண்டானாலும் தர்மம் முதலிய இந்த ஏழுவகையான பந்த காரணமும் அழிந்தாலும், எப்படி நெருப்பினால் வறுக்கப்பட்ட விதையானது மீண்டும் முளைப்பது இல்லையோ அது போல, இந்த தர்மம் முதலியவைகள் மீண்டும் சம்சாரத்தில் ஈடுபடுத்த சாமர்த்தியம் அற்றதாக ஆகின்றது. இப்படி தர்மம் முதலியவை இருப்பதற்கு எந்த காரணமும் இல்லாத நிலை உண்டாகும் பொழுதும் சம்ஸ்காரத்தினால் யோகியானவர் சரீரத்தை தாங்கியராக இருக்கின்றார். ஞானத்தியால் அப்பொழுது உள்ள தர்மம், அதர்மம் ஆகியவற்றின் அழிவு ஏன் உண்டாவது இல்லை என்றால் அது அப்பொழுது இருப்பதனாலேயே அடுத்த க்ஷணத்தில் அது அழிவை அடைவதாக இருப்பதால் ஞானமானது அடையப்படாத எதிர்காலத்தில் வரும் கர்மங்களையே

அழிக்கின்றது. இந்த நிகழ்காலத்தில் உள்ள ஏதாவது அடையப்பட்ட உடலினால் எந்த செயலானது செய்யப்படுகின்றதோ அதனால் உண்டாகும் கர்மத்தையும் அழிக்கின்றது. விதிக்கப்பட்ட கர்மத்தினை செய்வதால் என்று பொருள். சம்ஸ்காரமானது அழிந்த பிறகு இந்த உடலானது வீழ்ந்த பிறகு மோக்ஷமானது உண்டாகிறது. || **67** ||

**प्राप्ते शरीरभेदे चरितार्थत्वात् प्रधानविनिवृत्तौ।**
**ऐकान्तिकमात्यन्तिकमुभयं कैवल्यमाप्नोति ।।६८।।**

**ப்ராப்தே ஷரீரபேதே சரிதார்தத்வாத் ப்ரஷானவினிவ்ருத்தௌ |**
**ஐகாந்திகமத்யந்திகமுபயம் கைவல்யமாப்னோதி || 68 ||**

இருவகையான சரீரமும் வேறாக சூக்கப்பட்ட பின்னர், செய்யப்படவேண்டியது செய்யப்பட்டுவிட்டதால் (போகம் மற்றும் மோக்ஷம்) பிரகிருதியும் நிவிருத்தியடைந்ததால், புருஷன் நிச்சயமானதும், அழிவற்றதுமான ஜீவன் முக்தி மற்றும் விதேக முக்தியாகிய இரண்டு மோக்ஷத்தையும் அடைகிறார்.

**பாஷ்யம்**

அந்த மோக்ஷமானது எப்படிபட்டது. தர்மம், அதர்மம் முதலியவைகளால் உண்டான அழிவை அடைவதால் இந்த பல வகை சரீரமானது ஸ்தூல , சூக்ஷ்ம மற்றும் காரண சரீரமானது செய்யப்பட வேண்டியதை அதாவது அடையப்பட வேண்டியதை அடைந்தால், பிரதானமானது நிருவிருத்தியை அடைந்தாலும் நிச்சயமானதும் அழிவற்றதுமான கைவல்யத்தினால் அதாவது மோக்ஷத்தை இந்த புருஷன் அடைகின்றார். இந்த கைவல்யமானது நிச்சியமானதும் அழிவற்றதும் இரண்டும் கூடியது. || **68** ||

**पुरूषार्थज्ञानमिदं गुह्यं परमर्षिणा समाख्यातम्।**
**स्थित्युत्पत्तिप्रलयाश्चिन्त्यन्ते तत्र भूतानाम् ।।६६।।**

**புருஷார்த ஞானமிதம் குஹ்யம் பரமர்ஷிணா ஸமாக்யாதம் |**
**ஸ்தித்யுத்பத்தி ப்ரலயாஸ்சிந்த்யந்தே தத்ர பூதானாம் || 69 ||**

இந்த ரகசியமான புருஷார்த்த ஞானமானது. பரம ரிஷியினால் நன்றாக உரைக்கப்பட்டது, எந்த இதனில் பூதங்களின் ஸ்திதி, உத்பத்தி மற்றும் பிரளயமானது விசாரிக்கப்படுகின்றது.

**एतद् पवित्रमग्रयं मुनिरासुरयेऽनुकम्पया प्रददौ।**
**आसुरिरपि पञ्चशिखाय तेन च बहुधा कृतं तन्त्रम् ।।७०।।**

**ஏதத் பவித்ரமக்ரயம் முனிராஸீரயேனுகம்பயா ப்ரததௌ |**
**ஆஸுரிரபி பஞ்சஷிகாய தேன ச பஹுதா க்ருதம் தந்த்ரம் || 70 ||**

கபில முனிவரால் கருணையால் மேன்மையானதும் பவித்திரமானதுமான இந்த சாஸ்திரத்தை ஆசுரி என்கிறவருக்கு கொடுத்தார் . அவரும் பஞ்சஷிகாசாரியாருக்கு தந்தருளினார். பஞ்சசிகாசாரியாரும் பலவகையான கிரந்தங்களை இந்த சாஸ்திரத்தில் எழுதினார்.

**शिष्यपरम्परयाऽऽगतमीश्वरकृष्णेन चैतदार्याभिः।**
**संक्षिप्तमार्यमतिना सम्यग् विज्ञाय सिद्धान्तम् ।।७१।।**

**ஷிஷ்ய பரம்பரயாக தமீஷ் வரக்ருஷ்ணேன சைததார்யாபி |**
**ஸம்க்ஷிப்தமார்யமதினா ஸம்யக்விஞ்யாய ஸித்தாந்தம் || 71 ||**

இப்படி குரு சிஷ்ய பரம்பரையாக வந்த இந்த சாஸ்திரம் நன்றாக பக்குவப்பட்ட புத்தியுடைய ஈஷ்வரக்ருஷ்ணர் என்கிற என்னால் சாங்கிய சிந்தாந்தமானது நன்றாக அறிந்து ஆர்ய எனப்படும் அணியில் சுருக்கமாக செய்யபட்டது.

**सप्तत्यां किल येऽर्थास्तेऽर्थाः कृत्स्नस्य षष्टितन्त्रस्य।**
**आख्यायिकाविरहिताः परवादविवर्जिताश्चापि ।।७२।।**

**ஸப்தத்யாம் கில யேர்தாஸ்தேர்தா க்ருத்ஸ்னஸ்ய ஷஷ்டிதந்த்ரஸ்ய |**
**ஆக்யாயிகாவிரஹிதா பரவாதவிவர்ஜிதாஷ்சாபி || 72 ||**

எழுபது காரிகைகளுடைய கதைகள் இல்லாமலும் மற்றவாதிகளை கண்டனம் (நிராகரிப்பு) செய்வதும் இல்லாமல் இருந்தாலும் எந்த விஷயமானது (இருபத்தைந்து பதார்த்தங்களின் ஞானமானது) முழுவதுமாக சஷ்டிதந்திரம் எனும் புத்தகத்தில் விளக்கப்பட்டதோ அவை நிச்சயமாக கூறப்பட்டுள்ளது.

**பாஷ்யம்**

புருஷனால் அடைப்பட வேண்டியது மோக்ஷம் அதற்காக ( இந்த ஞானமானது ) மிகவும் இரகசியமான இந்த ஞானமானது **பரமரிஷியான கபிலரிஷியால்** நன்றாக கூறப்பட்டது. எந்த ஞானத்தினை வேண்டி பூதங்களானது வைகாரிகமானவற்றை குறித்தும், ஸ்திதி, உற்பத்தி, மற்றும் பிரளயத்தினை குறிக்கும் விசாரமானது செய்யப்பட்டுள்ளது. இந்த விசாரத்தினால் சரியான (சம்யக்) ஞானமானது 25 தத்துவங்களின் விசாரமான ஞானமானது உண்டாகின்றது. அதனால் அறிவானது உண்டாகின்றது. அதனால் மோக்ஷம் என்று.

**|| 69 || || 70 || || 71 || || 72 ||**

**सांख्यकारिका समाप्त।**

**சாங்கிய காரிக்கா விளக்கமான ஸாங்க்யலஹரீ முற்றுப் பெறுகிறது.**